

புரட்சி
# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 டிசம்பர் 04, 2008 புரட்சி 7 முழக்கம் 49 விலை : ரூ.2.50


## பெரியார் திராவிடர் கழகம் அறிவிப்பு:

# காங்கிரஸ் அமைச்சர்களுக்கு கருப்புக் கொடி

*தமிழகம் வரும் மத்திய காங்கிரஸ் அமைச்சர்களுக்கு எதிராக கருப்புக்கொடி காட்டப்படும் என்று பெரியார் திராவிடர் கழகம் அறிவித்துள்ளது.*

1-12-2008 திங்கட்கிழமை காலை கோவை, காந்திபுரம், பெரியார் படிப்பகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், கழகத்தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் அளித்த பேட்டி:

சிங்கள இராணுவம் ஈழத்தமிழர்கள் மீது நடத்தும் இனப்படுகொலைக்கு எதிராகவும், தமிழக மீனவர்களைக் கண்மூடித்தனமாக சுட்டுக் கொள்வதைக் கண்டித்தும் தமிழகம் கட்சிகளைக் கடந்து ஒருமித்தக் கண்டனக் குரலைத் தெரிவித்து வருகிறது.

தமிழக முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் மத்திய அரசு உடனே போரை நிறுத்த இலங்கை அரசை வலியுறுத்த வேண்டு மென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கொட்டும் மழையில் இலட்சக்கணக்கான தமிழர்கள் மனித சங்கிலியாக அணிவகுத்து சிங்கள இராணுவத்தின் இனப்படுகொலைக்கு எதிரான தங்கள் எதிர்ப்பை வலிமையாக வெளிப்படுத்தினர்.

ஆனால் தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த உணர்வை காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு காதில் போட்டுக் கொள்ளாமல் தமிழக மக்களின் உணர்வுகளை அலட்சியப்படுத்தி வருகிறது. சிங்கள இராணுவத்தின் தமிழினப் படுகொலையோ தொடர்ந்து நீடிக்கிறது.

மத்திய ஆட்சித் தலைமை பொறுப்பில் காங்கிரஸ் கட்சி உள்ள நிலையில் காங்கிரஸ் அமைச்சர்களுக்கு குறிப்பாக தமிழக காங்கிரஸ் அமைச்சர்களுக்கு கூடுதல் பொறுப்பு இருந்தும் கூட தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை சற்றும் மதிக்காமல் அலட்சியப்படுத்துகிறார்கள்.

தமிழக மீனவர் படுகொலையை, ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலையைத் தடுக்கவோ கூட முன்வராததோடு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி போகிறார்கள் என்றும், ஈழத் தமிழர்கள் பற்றி பேசுவதே கூட சட்ட விரோதம் என்றும், பேசுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்மென்றும் ஆளாளுக்கு அறிக்கைகளை அளித்து வருகிறார்கள்.

காங்கிரஸ் கட்சியின் அதிகார பூர்வ பேச்சாளர் அபிஷேக் சிங்வி சர்வதேச பிரச்சினைகளில் மாநில அரசுகளோ, கட்சிகளோ தலையிட உரிமையில்லை என்று பேட்டி அளிக்கிறார். சிங்கள இராணுவத்துக்கான பயிற்சி தொடரும் என்கிறார்கள் - ஏன் -இராணுவ உதவிகளும் கூட தொடர்ந்து அளிக்கப்படும் என்கிறார்கள்.

அதோடு ஈழச்சிக்கலைக் காரணம் காட்டி 1990 ல் தி.மு.க. அரசைக் கலைக்க பின்புலமாக இருந்தவரும், தொடர்ந்து ஈழப்பிரச்சினையில் தமிழின விரோதப் போக்கை கடைபிடித்து வருபவரும், மும்பை தாக்குதலின் வழியாக தனது தகுதியின்மையைக் காட்டியும் உள்ள எம். கே. நாராயணனை பாதுகாப்பு ஆலோசகராக பிடிவாதமாக தொடர்ந்து வைத்துக்கொண்டும் உள்ளனர்.

மத்தியில் ஆட்சி செய்வது ஐக்கிய முற்போக்கு கூட்டணி என்றாலும் அந்த கூட்டணியில் இடம் பெற்றுள்ள மத்திய அமைச்சர்களே போர் நிறுத்தத்தை வலியுறுத்தியும் காங்கிரஸ் கட்சித் தலைமை தொடர்ந்து அலட்சியப்படுத்தியே வருகிறது.

இந்த நிலையில் - தமிழக முதல்வர் தலைமை யிலான அனைத்துக் கட்சிக்குழு பிரதமரை நேரில் சந்தித்து பேசும் 4-12-2008க்குப் பின் மூன்று நாட் களுக்குள் இணக்கமான முடிவேதும் தெளிவாக அறிவிக்கப்படாவிடில் - 8 /12/08 மேல் தமிழகம் வரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களுக்கு அவர்களின் தமிழன விரோத போக்கை அம்பலப்படுத்தவும் அவர்கள் மீது தமிழக மக்களுக்கு வெறுப்புணர்வை வெளிப் படுத்தவும் - அவர்கள் அரசு சார்ந்த, சாராத எந்நிகழ்ச்சிக்கு வந்தாலும் - கருப்புக் கொடி காட்டுவதென பெரியார் திராவிடர் கழகம் முடிவு செய்துள்ளது.

காங்கிரசின் இந்த துரோகத்தை எதிர்க்கும் தமிழின உணர்வாளர்கள் இந்தக் கருப்புக்கொடி போராட்டத்தில் கலந்து கொள்ள முன்வருமாறு பெரியார் திராவிடர் கழகம் தோழமையுடன் வேண்டிக்கொள்கிறது.

தொடர்ந்து செய்தியாளர் கேட்ட கேள்விக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கோவை இராமகிருட்டிணன் பதிலளித்தனர்.

பிரதமரை சந்திக்கும் அனைத்துக் கட்சிக் குழுவில் திருமாவளவன் இடம் பெறக் கூடாது என்று மத்திய காங்கிரஸ் இணை அமைச்சர் ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன் கூறியுள்ளது பற்றி செய்தியாளர்கள் கேட்டபோது:

"மகாராஷ்டிராவில் இந்தி பேசுவோர் தாக்கப்பட்டபோது, பீகாரில் கட்சிகளை மறந்து லல்லுபிரசாத், ரிதிஷ்குமார் குரல் கொடுத்துபோல், தமிழகத்தில் தலைவர்கள் ஒன்றுபட்டு குரல் கொடுப்பதில்லையே என்று அண்மையில் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் சுதர்சனம் வருத்தப் பட்டார். ஆனால், ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன், முதிர்ச்சியோ, பக்குவமோ இல்லாமல், இப்படி ஆணவமாக பேசி கொண்டிருக்கிறார். இதை வன்மையாகக் கண்டிக்கிறோம்" என்று பதிலளித்தனர்.

காங்கிரஸ் கட்சியினர் மட்டும் தமிழர்களுக்கு எதிராக, துரோகிகளாக செயல்படுவதால், காங்கிரஸ் கட்சியினரை மக்களிடம் தனிமைப்படுத்திடவே, இந்தப் போராட்டத்தை நடத்துகிறோம் என்று கூறியதோடு, அடுத்த கட்டமாக ஈழத் தமிழர்களுக்கு எதிராக பிரச்சாரம் செய்து வரும் 'இந்து', 'துக்ளக்', 'தினமலர்', 'தினமணி' போன்ற பார்ப்பன ஊடகங்களுக்கு எதிரான போராட்டத்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்தும் என்று தெரிவித்தனர்.

பேட்டியின்போது கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் கோவை. இராமகிருட்டிணன், கழகப் பொறுப்பாளர்கள் ஆறுச்சாமி, கோபால், பன்னீர்செல்வம் மற்றும் தோழர்கள் உடனிருந்தனர்.

## கறுப்பு கொடி போராட்டம் : கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்!

மத்திய காங்கிரஸ் அமைச்சர்களுக்கு எதிராக கருப்புக்கொடி போராட்டத்தை, மாவட்டக் கழகம் கலந்து முடிவு செய்து உடனே கழகத் தலைமைக்கு தெரிவிக்க வேண்டும்.

மாவட்டத்தில் காங்கிரஸ் அமைச் சர்கள் வருகை குறித்து, அவ்வப்போது தொடர்பு கொண்டு விசாரித்து, வருகையை முன்கூட்டியே உறுதி செய்து கொள்ள வேண்டும்.

போராட்டம் நடத்தப் போவதை காவல் துறையிடம் தெரிவித்துவிட வேண்டும். (அனுமதி கோரத் தேவையில்லை)

தனியார் நிகழ்ச்சிகளுக்கு காங்கிரஸ் அமைச்சர்கள் வருகிறார்கள் என்றால், அவர்கள் தங்கும் இடத்துக்கு எதிரிலோ, அல்லது பயணம் செய்யும் வழியிலோ கருப்புக் கொடி காட்டலாம்.

ஒத்த கருத்துள்ள தோழர்கள் - அமைப்பு களையும் கலந்து பேசி போராட்டத்தில் இணைத்துக் கொண்டு செயல்படுங்கள்.

போராட்டம் ஏன் என்பதை விளக்கி துண்டறிக்கைகள் வழியாக மக்களிடம் பிரச்சாரம் செய்யவும்.

தோழர்களே! விரைந்து செயல்படுவீர்!

## கவிஞர் கனிமொழியின் பேச்சு தவறா? 'தினமணி'க்கு மறுப்பு

*நவம்பர் 20 'தமிழன் எக்ஸ்பிரசில்', "தேவாரம் திருப்புகழ் எனக் கூறி தமிழன் சீரழிந்து கொண் டிருக்கிறான்" என்று கூறிய கவிஞர் கனிமொழி, மிகச் சரியாகவே கூறியுள்ளார். அவரைக் கண்டித்து 'தினமணி' தலையங்கம் தீட்டியிருக்கிறது.*

*தலையங்கத்தில், "பார்வதியின் ஞானப்பாலை குடித்ததாகக் கூறப்படும் திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், அருணகிரிநாதர், நக்கீரர், கபிலர், பரணர், திருமூலர் மற்றும் சைவ சமய குரவர்கள், புலவர்கள் ஆகியோர் தமிழ் மொழியின் சிறப்பையும், இசைத் தமிழையும், இறைத் தமிழையும் வளர்த்தார்கள் என்று கூறுகிறது" அந்த தலையங்கம்.*

*தமிழை வளர்த்தார்களோ, இல்லையோ! அவர்கள் இறைத்தமிழ், இசைத் தமிழ் என்று கூறி வயிறை வளர்த்தார்கள் என்பதுதான் உண்மை. இது ஒருபுற மிருக்க, இறைத்தமிழையும், இசைத் தமிழையும் வளர்த்ததால், தமிழ் வளர்ந்தது என்று கூறும் 'தமிழன் எக்ஸ்பிரஸ்'க்கு ஒன்றை கூற கடமைப்பட்டிருக் கிறோம்.*

*'ஐ.நா.வின் யுனஸ்கோ' நிறுவனம் 2003 இல் வெளியிட்ட புள்ளி விவரத்தின்படி, "எந்த ஒரு மொழி காலத்திற்கேற்ற வகையில் அறிவியல் சார்ந்து வளர்க்கப்படவில்லையோ, அந்த மொழி இன்னும் 50 ஆண்டுகளில் அழிந்தே தீரும். அந்த மொழிகளில் முதல் மொழி தமிழ் மொழி தான்" என்று எச்சரித்திருக்கிறது.*

*ஐ.நா.வின் இந்த எச்சரிக்கைக்கு காரணம் தமிழை இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்று கூறினோமே தவிர அறிவியல் தமிழ் என்ற ஒன்றை ஆய்வு செய்யவோ, அதை எழுதவோ தமிழ்ப் புலவர்கள் தயாராக இல்லை. ஆனால், கம்பராமா யணத்திற்கும், சிலப்பதிகாரத்திற்கும், மகாபாரதத் திற்கும் பதவுரை, தெளிவுரை என்று உரைக்கு மேல் உரை எழுதிக் கொண்டே இருக்கிறார்களே ஒழிய, புதிய அறிவியல் சிந்தனையை வளர்த்தெடுப்பதிலும், காலத்திற்கேற்ற வகையில் அறிவு சார்ந்த செய்திகளை கூறுவதிலும் அன்றும் இன்றும் ஒருவர் கூட இல்லையே என்பதுதான் (திருக்குறளைத் தவிர) வேதனையான ஒன்று.*

*ஆகவே தான் தந்தை பெரியார், புலவர்களை 'பழமை குட்டையில் ஊறிய பாசிகள்' என்று கூறினார். எல்லாவற்றிற்கும் ஒருபடி மேலே போய், இப்படி தமிழை காலத்திற்கேற்ப வளர்க்காத தாலும், கடவுளின் பேராலும், மதத்தின் பேராலும், புராண இதிகாசங்களின் பேராலும் தமிழ் மொழி சீரழிவதை கண்ட தந்தை பெரியார், தமிழ்மொழி காட்டு மிராண்டி மொழியாகத்தான் ஆக போகிறது என்று வேதனையுடன் கூறியது எவ்வளவு அறிவு நுட்பமானது என்பதனை 'தமிழன் எக்ஸ்பிரஸ்' ஏட்டிற்கு தெரிவிக்க விரும்புகிறோம்.*

*இல்லை! இல்லை! சைவ சமய குறவர்களாலும், புலவர்களாலும் மற்றும் தேவாரம், திருப்புகழ் போன்ற நூல்களாலும் தான் தமிழ்மொழி வளர்ந்தது என்றால், இன்னும் 50 ஆண்டுகளில் அழியக் கூடிய மொழிகளில் தமிழ்மொழி ஏன் தள்ளப்பட்டிருக்கிறது என்ற கேள்வியை தமிழன் எக்ஸ்பிரஸ் ஏட்டிற்கு முன் வைக்கிறோம்.*

**- ஏகலைவன் அன்பு**

## தலையங்கம்



# காலத்தை வென்று நிற்கும் மாமனிதர்

பார்ப்பன ஊடகங்களால் முழுமையாக வெறுக்கப்பட்ட ஒரு தலைவர் என்பது தான், வி.பி.சிங் உண்மையான தொண்டுக்கு கிடைத்த மகுடம். பார்ப்பன ஆதிக்கக் கொடுமை களுக்கு எதிராக - பார்ப்பன ஊடகங்களின் வெறுப்புகளை சுமந்து அவதூறுகளை புறந்தள்ளி பொது வாழ்க்கையில் பயணப்பட்ட ஒரே புரட்சித் தலைவர் பெரியார்; அதேபோல் இந்திய அரசியலின் பார்ப்பன அதிகார மய்யத்துக்கு எதிராக வரலாற்றுப் போக்கைத் திரும்பி அதிகார மய்யத்தை தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையினரை நோக்கித் திருப்பிய ஒரே தலைவர் விசுவநாத் பிரதாப் சிங் தான்! கொள்கைகளுக்கும், லட்சியங்களுக்கும் தான் அதிகாரம்; பதவி என்பதை - இந்திய அரசியலில் செயல்படுத்தி பதவிகளைத் துச்சமென தூக்கி எறிந்த வரலாற்றுப் பெருமை இந்த மாமனிதருக்கு மட்டுமே உண்டு. பா.ஜ.கவும், இடதுசாரிகளும் வெளியிலிருந்து தந்த ஆதரவோடு, அவர் பிரதமர் பதவியில் நீடித்தாலும், 'அயோத்தி ராமனுக்காக' அத்வானி நடத்திய 'ரத யாத்திரையை' அவர் அனுமதிக்க தயாராக இல்லை. அதே நேரத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீட்டை மத்திய அரசுப் பணிகளில் உறுதி செய்யும் மண்டல் பரிந்துரையை ஏற்கும் ஆணையையும் பிறப்பித்தார் (7.8.1990). பா.ஜ.கவின் ஆதரவோடு ஆட்சியைத் தக்க வைப்பதைவிட, அதிகாரத்தை சமூக நீதிக்காக இழக்கலாம் என்ற உறுதியான கொள்கை முடிவை எடுத்தார்.

ஆட்சிக்கான ஆதரவை எதிர்பார்த்ததுபோல் பா.ஜ.க. விலக்கியது. நாடாளுமன்றத்திலே நம்பிக்கைத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பிற்படுத்தப்பட்டோருக்கு சமூக நீதி வழங்கிய தமது அரசின் முடிவை முன்வைத்து நியாயம் கேட்டார். வி.பி.சிங் அப்போது, சமூகநீதிக்கு எதிராக, அணி திரண்ட சக்திகள் எவை என்பதை நாட்டு மக்களுக்கு நினைவுபடுத்த வேண்டும். மண்டல் பரிந்துரையை கடுமையாக எதிர்த்து, காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி 10 மணி நேரம் தண்ணீர் குடித்துக் கொண்டே பேசினார். இந்த சமூகநீதி எதிர்ப்பு அணியில் காங்கிரஸ்-பா.ஜ.கவோடு கைகோர்த்து, வி.பி.சிங் ஆட்சிக்கு எதிராக வாக்களித்தது ஜெயலலிதாவின் அ.இ.அ.தி.மு.க. (இவருக்குத்தான் - பிறகு, கி.வீரமணியின், திராவிடர் கழகம் 'சமூகநீதி காத்த வீராங்கனை' பட்டத்தை வழங்கி மகிழ்ந்தது)

ராஜீவ்காந்தியும், ஜெயலலிதாவும் இப்போதும் அவர்கள் கட்சியின் தலைவர்கள் தான். ஆனால், கொள்கைக்காக பதவியை த் தூக்கி எறிந்த வி.பி.சிங், மக்கள் தலைவராக, வரலாற்றில் இடம் பிடித்துவிட்டார். அவர் பிறப்பித்த இடஒதுக்கீடு ஆணையை ரத்து செய்யும் துணிவு, அதற்குப் பின் ஆட்சி சிம்மாசனத்துக்கு வந்த பா.ஜ.கவினருக்கோ, காங்கிரசுக்கோ கூட வரவில்லை.

உ.பி.யின் முதல்வராக வி.பி.சிங் பதவி ஏற்றபோது, சம்பல் கொள்ளைக்காரர்களை மனித நேயத்துடன் அணுகி சரணடைய வைத்தார். அதிலும் ஒரு பிரிவினர் சரணடைய மறுத்து, வி.பி.சிங்கின் சொந்த சகோதரரையே படுகொலை செய்து, முதலமைச்சர் இல்லத்தின் முன்பே வீசினார்கள். சொந்த சகோதரனையே கொள்ளையர்களிடமிருந்து காப்பாற்ற முடியாத நான், உ.பி. மக்களை எப்படி காப்பாற்ற முடியும்? என்று தனக்குத் தானே நீதிக் கேட்டு முதல்வர் பதவியை தூக்கி எறிந்தார்.

இந்திரா மறைவுக்குப் பிறகு, ராஜீவ் அமைச்சரவையில் அவர்தான் நிதியமைச்சர். பெரும் தொழிலதிபர்கள் பணத் திமிங்கிலங்களின் வரி ஏய்ப்புகளைக் கண்டறிந்து துணிந்து நடவடிக்கைகளை எடுத்தார். தொழிலதிபர்களின் செல்வாக்குக்கு பணிந்த ராஜிவ், துறையை மாற்றி வி.பி.சிங்கை பாதுகாப்புத் துறை அமைச்சராக்கினார். அப்போதுதான் 'போபோர்ஸ் பீரங்கி' பேரத்தில், ராஜீவ் 'கையூட்டு' பெற்ற லஞ்ச ஊழல் வெளிச்சமானது. குத்ரோச்சி எனும் இத்தாலி, தரகர் மூலம் ராஜீவ்காந்திக்கு 'கமிஷன்' பணம் கைமாறியது. சுவீடன் நீதிமன்றத்தில் ஆதாரத்துடன் அம்பலமானது. போபோர்ஸ் ஊழல் விசாரணைக்கு நடவடிக்கை மேற்கொண்டதால், வி.பி.சிங், மீண்டும் பதவியைத் துறக்க வேண்டியதாயிற்று. தொடர்ந்து ஊழல் ஒழிப்புக்கு 'ஜன்மோட்சா' இயக்கத்தைத் தொடங்கிய வி.பி.சிங், பின்னர் தேசிய முன்னணியை உருவாக்கி, தேர்தலில் போட்டியிட்டு, பிரதமராகி, இந்திய அரசியலின் போக்கை பார்ப்பன ஆதிக்கத்திலிருந்து திருப்பினார்.

ஈழத்திலே - ராஜீவ் அனுப்பிய இந்திய ராணுவம், பல்லாயிரம் தமிழர்களைக் கொன்று குவித்ததைக் கண்டு ராஜீவ் காந்தி பூரித்து மகிழ்ந்தார். அந்த ராணுவத்தை மீண்டும் இந்தியாவுக்கு திருப்பி அழைத்த பெருமை, அப்போது பிரதமராக இருந்த வி.பி.சிங்குக்குத்தான் உண்டு. விடுதலைப்புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக நீங்கள் கருதவில்லையா என்று செய்தியாளர்கள் கேட்டபோது, எந்த ஒரு இயக்கத்துக்கும் முத்திரை குத்தக்கூடிய ரப்பர் ஸ்டாம்ப் எனது சட்டைப் பையில் இல்லை என்று பதிலடி தந்தார்.

பம்பாயில், இந்து பார்ப்பன சக்திகள் இஸ்லாமியர்களுக்கு எதிராக நடத்திய கலவரத்தைக் கண்டித்து, தண்ணீர்கூட அருந்தாமல், அவர் உண்ணாவிரதத்தை சில நாட்கள் தொடர்ந்தபோதுதான் அவரது சிறுநீரகம் பாதிக்கப்பட்டது. அந்த பாதிப்புடன் 17 ஆண்டுகாலம் ஒவ்வொரு நாளும் அவர் போராடினார். மதவெறிக்கு எதிரான தளபதியாக, சமூக நீதியின் காவலராக வரலாற்றுப் புகழோடு இந்த மண்ணிலிருந்து 27.11.2008 அன்று விடைபெற்றுக் கொண்டுள்ளார்.

நேர்மை - தூய்மை - கொள்கை எல்லாம் அரசியலில் அற்றுப் போய்விட்டதாக கூச்சல் போடும் பார்ப்பன தலைவர்களும், பார்ப்பன ஊடகங்களும், களங்கமில்லாத இந்த மாமனிதனை அங்கீகரித்ததா? இல்லை. இழிவுபடுத்தினார்கள். சேறுவாரி இறைத்தார்கள். இவர்களின் கோபமும், வெறுப்பும், அவரது மரணச் செய்தியில்கூட பிரதிபலிக்கவே செய்தன. அந்த மாமனிதனின் மரணம், ஒற்றைக்காலச் செய்தியானது. அவரது இறுதி நிகழ்ச்சிகூட இந்த பார்ப்பன ஊடகங்களால் இருட்டடிப்புக்கு உள்ளாகிவிட்டது.

வி.பி.சிங் என்ற வரலாற்று நாயகர், காலத்தை வென்று நிற்கும் மாமனிதர் என்பதற்கு பார்ப்பன ஏடுகளின் இந்த வெறுப்பும் கசப்புகளுமே சான்றாக நிற்கின்றன.

நன்றியுள்ள ஒவ்வொரு ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் குடிமகனும், இந்த மனிதனின் நன்றி பாராட்டாத தொண்டுக்கு தலை வணங்குவான். சமூகநீதி சரித்திரத்தில் அழியாத அத்தியாயமாகிவிட்ட அந்த மனிதகுல மேதைக்கு பெரியார் திராவிடர் கழகம் தலைவணங்கி, வீர வணக்கத்தை செலுத்துகிறது.

வி.பி.சிங் முடிவெய்தினார்; வி.பி.சிங் வாழ்க! வாழ்க!!

# கொள்கை 'தர்மமும்' கூட்டணி 'தர்மமும்'

வன்னியர் சங்கத் தலைவர் காடுவெட்டி குரு மீதான தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை கலைஞர் அவசரமாக விலக்கிக் கொண்டு விட்டார். தி.மு.க. - பா.ம.க. உறவு 'விரிசல்' ஆனபோது பாய்ந்த சட்டம், உறவு சுமூகமான போது திரும்பப் பெறப்பட்டுவிட்டது. இந்த முடிவை நாம் எதிர்க்கவில்லை; ஆனாலும் ஒரு உண்மையைக் குறிப்பிட வேண்டும். திருவரங்கத்தில் பெரியார் சிலையை இந்து மக்கள் முன்னணியைச் சார்ந்த பார்ப்பன கைக்கூலிகள் உடைத்த போது - பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் சாதி ஆதிக்கம் நிறைந்த பார்ப்பன நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தினர். அதற்காக வழக்கைச் சந்தித்து சிறை செல்லவும் தயாரானார்கள். ஆனால், கலைஞரோ பெரியார் திராவிடர் கழகத்தினர், பார்ப்பனர் பூணூலை அறுத்தது தேச விரோதச் செயல் என்று கூறி, 7 தோழர்களை தேசப் பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்ய உத்தரவிட்டார்.

பூணூல் அறுப்புக்கு உரிய பிரிவுகளில் வழக்குப் போடாமல் 'பூணூலை' தேசத்தோடு இணைத்தது கலைஞர் அரசு. தேசிய பாதுகாப்பு சட்ட போடப்பட்டதை எதிர்த்து திரும்பப் பெறுமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கலைஞர் ஏற்கவில்லை. உயர்நீதி மன்றம் தான், நான்கு மாத சிறைவாசத்துக்குப் பிறகு, தேசப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்தது தவறு என்று கூறி விடுதலை செய்தது.

கலைஞருக்கு கொள்கை தர்மத்தைவிட கூட்டணி தர்மம் தான் எப்போதும் மேலோங்கி நிற்கிறது. பொடா சட்டம் எப்படி விருப்பு வெறுப்புடன் பயன்படுத்தப் பட்டதோ, அதே போல் 'தேசிய பாதுகாப்பு சட்டமும்' விருப்பு வெறுப்புக்கு ஏற்பத் தான் பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு இவை சாட்சியங்கள்!

## ஈழத்தமிழர் ஆதரவு பரப்புரை குழுவிற்கு மயிலாடுதுறையில் உற்சாக வரவேற்பு

ஈழத்தமிழர் ஆதரவை வலியுறுத்தியும், போரை நிறுத்த வலியுறுத்தியும் 18.11.08 அன்று சென்னையில் தொடங்கிய தமிழக மாணவர் கூட்டமைப்பின் பரப்புரை பயணக்குழு 19.11.08 அன்று மயிலாடுதுறைக்கு வந்தது. மாலை 5 மணிக்கு வந்த பயணக் குழுவிற்கு மயிலாடுதுறை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

மாவட்ட அமைப்பாளர் நா. இளையராசா தலைமையில் மயிலாடுதுறை நகர எல்லையிலிருந்து 15 இரு சக்கர வாகனங்களில் கழகத் தோழர்கள் கழகக் கொடியினை ஏந்தியும், முழக்கமிட்டவாறும் பரப்புரை குழுவை வரவேற்றனர். பின்பு மயிலாடுதுறை தலைமை தபால் நிலையம் எதிரில் நடைபெற்ற ஈழத் தமிழர் ஆதரவு பிரச்சாரத்தில் மயிலாடுதுறை நகரத் தலைவர் நாஞ்சில் சங்கர் பயணக் குழுவின் தோழர்களை வரவேற்று பேசினார். மாவட்டத் துணைத் தலைவர் இரசீத்கான், தமிழர் உரிமை இயக்க அமைப்பாளர் முரளிதரன், மருத்துவர் எழிலன் ஆகியோர் இலங்கை அரசையும், இந்திய அரசையும் கண்டித்து உரையாற்றினர்.

பயணக்குழுவின் அனைத்து தோழர்களுக்கும், நகர பெரியார் திராவிடர் கழகம் சார்பில் மதிய உணவு வழங்கப்பட்டது. கலந்துக் கொண்ட கழகத் தோழர்கள் : மாவட்ட செயலாளர் மகேசு, நகர துணைத் தலைவர் இராஜராஜன், நகரச் செயலாளர் ஏகலைவன் அன்பு, துணைச் செயலாளர் முகிலன், குத்தாலம் ஒன்றியச் செயலாளர் இயற்கை, புத்தகச் சோலை விஜி, குணராஜ், வீ. முரளி கார்த்திக், இராஜா, ம. ஸ்ரீதர், வினோத், ரமேசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திருச்சியில் :** ஈழத் தமிழர்களின் துயர்துடைக்கக் கோரியும், இலங்கையில் உடனே போர் நிறுத்தக் கோரியும் மத்தி யஅரசை வலியுறுத்தி, பெரியார் திராவிடர் கழகம் மாணவர் கூட்டமைப்பு சார்பாக நா. எழிலன் தலைமையில் சென்னையிலிருந்து 18.11.2008 அன்று 20 பேர் கொண்ட குழு புறப்பட்டு தமிழ் நாட்டின் முக்கிய நகரங்கள் வழியாக தூத்துக்குடி வரை பிரச்சாரம் செய்து வருகிறது. அதன்படி 20.11.2008 அன்று இரவு 8 மணிக்கு திருச்சிராப்பள்ளி வந்தது. சிந்தாமணி அண்ணா சிலையருகில் மாவட்டத் தலைவர் செ.த.இராசேந்திரன் தலைமையில் பிரச்சாரம் நடைபெற்றது.

ஈழத்தில் சிங்கள இராணுவத்தால் பாதிக்கப்பட்ட அப்பாவி தமிழர்களின் நிலையை விளக்கும் புகைப்படங்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டது. பொது மக்கள் கண்ணீர் மல்க பார்த்தனர். திருவரங்கம் டாக்டர் எஸ்.எஸ்.முத்து வரவேற்றுப் பேசினார். குழுத் தலைவர் டாக்டர் நா. எழிலன், பிரச்சார நோக்கம் பற்றி வலியுறுத்தி பேசினார். முத்து செழியன் இடையாற்றுமங்கலம், மனோகர் வாத்தலை, பரமசிவம், அன்பு செல்வம் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**சூலூரில் :** பெரியார் திராவிடர் கழகம் சூலூர் ஒன்றியம் சார்பில் 23.11.08 ஞாயிறு மாலை 4 மணிஅளவில் அரசூரில் ஈழத்தமிழர் படுகொலையை கண்டித்து, காயக்கட்டுகளுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கோவை-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் பேருந்து நிறுத்தம் எதிரில் நடைபெற்ற இவ்வார்ப்பாட்டத்திற்கு கழகத்தின் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையேற்க, ஆட்சிக்குழு உறுப்பினர் வே. ஆறுச்சாமி, சூலூர் ஒன்றிய செயலாளர் சூ.இரா. பன்னீர்செல்வம், கு.சசிக்குமார், அ.ப. சிவா, தமிழ்ச்செல்வி, வீரமணி, அகில் குமரவேல், கார்த்திக், தேவராசு, இளவரசு, கோவை மாநகர கழகத்தை சார்ந்த தோழர்கள் கதிரவன், பன்னீர்செல்வம், கோபால், மணிமாறன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

50க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது ஈழத் தமிழர் படுகொலைகளை மக்களுக்கு விளக்கிடும் துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன.

## இன்றைய சவால்கள் புதியவையோ; பெரியவையோ அல்ல!

# சிங்கள ஆக்கிரமிப்பு அகலும் வரை போராடுவோம்!

*நவம்பர் 27 அன்று மாவீரர் நாளில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தலைவர் மேதகு பிரபாகரன் ஆற்றும் முழுமையான உரையை 'பெரியார் முழக்கம்' வழமைபோல் பதிவு செய்கிறது. உரையை ஒலிபரப்பிடாமல் தடுத்திட - நவம்பர் 27 அன்று புலிகளின் குரல் வானொலி நிலையத்தின்மீது சிங்கள ராணுவம் விமானத்திலிருந்து குண்டுகளை வீசிய போதும், முன் கூட்டியே உரை பதிவு செய்யப்பட்டு, திட்டமிட்டபடி ஒலிபரப்பானது. ஒரே நேரத்தில் சர்வதேசம் முழுதும் இந்த உரையை லட்சோபலட்சம் தமிழர்கள் கேட்டனர். தமிழகத்தில் மூண்டெழுந்துள்ள பேரெழுச்சிக்கு அன்பையும் நன்றியையும் பிரபாகரன் தெரிவிப்பதோடு, புலிகள் இயக்கத்தின் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார். தமிழ் ஈழ விடுதலை என்ற இலகக் நோக்கி போராட்டம் தொடரும் என்பதை திட்டவட்டமாக அறிவிக்கிறது, இந்த உரை.*

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று மாவீரர் நாள்.

தமிழீழத் தாய்நாட்டின் விடிவிற்காகத் தமது இன்னுயிரை ஈகம்செய்து, எமது இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் எம்முயிர் வீரர்களை நாம் நினைவுகூர்ந்து கௌரவிக்கும் புனிதநாள்.

ஆண்டாண்டு காலமாக அந்நிய ஆதிக்கப் பிடிக்குள் அடங்கிக்கிடந்த எமது தேசத்தை, ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணியாத அடங்கா மண்ணாக மாற்றிவிட்ட எமது வீரமறவர்களைப் பூசித்து வணங்கும் திருநாள்.

எமது தேசம் விடுதலை பெற்று, எமது மக்கள் சுதந்திரமாக, தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற சத்திய இலட்சியத்திற்காக மடிந்த எமது மான வீரர்களை எமது நெஞ்சப் பசுமையில் நிறுத்திக்கொள்ளும் தேசிய நாள்.

எமது மாவீரர்கள் இந்த மண்ணை ஆழமாக நேசித்தார்கள். தாயக விடுதலைக்காகத் தமது கண்களைத் திறந்த கணம் முதல் நிரந்தரமாக மூடிய கணம் வரை அவர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றில் ஒப்பற்றவை. எந்த ஒரு தேசத்திலும் எந்த ஒரு காலத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்களை எமது மண்ணிலே எமது மண்ணுக்காக எமது மாவீரர்கள் புரிந்திருக்கிறார்கள்.

இந்த மண்ணிலேதான் எமது மாவீரர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தார்கள். இந்த மண்ணிலேதான் அவர்களது பாதச்சுவடுகள் பதிந்திருக்கின்றன. அவர்களது மூச்சுக்காற்றும் கலந்திருக்கிறது. இந்த மண்ணிலேதான் எமது இனம் காலாதிகாலமாக,கொப்பாட்டன், பாட்டன் என தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறது.

எமது இனச் சரித்திரம் நிலைபெற்ற இந்த மண்ணை ஆழமாகக் காதலித்து, இந்த மண்ணிற்காகவே மடிந்து, இந்த மண்ணின் மடியிலேயே எமது மாவீரர்கள் படுத்துறங்குகிறார்கள். அவர்கள் பள்ளி கொள்ளும் இந்த மண் எமக்கேயுரித்தான மண். எமக்கே சொந்தமான மண். இந்த வரலாற்று மண்ணை ஆக்கிரமித்து, அடக்கியாள சிங்களம் திமிர்கொண்டு நிற்கிறது் தீராத ஆசை கொண்டு நிற்கிறது.

மனித துயரங்களெல்லாம் அடங்காத, அருவருப்பான ஆசைகளிலிருந்தே பிறப்பெடுக்கின்றன. ஆசைகள் எல்லாம் அறியாமையிலிருந்தே தோற்றம் கொள்கின்றன. ஆசையின் பிடியிலிருந்து மீட்சி பெறாதவரை சோகத்தின் சுமையிலிருந்தும் விடுபட முடியாது.

மண் ஆசை பிடித்து, சிங்களம் அழிவு நோக்கிய இராணுவப் பாதையிலே இறங்கியிருக்கிறது. உலகத்தையே திரட்டி வந்து எம்மோடு மோதுகிறது. இராணுவ வெற்றி பற்றிய கனவுலகில் வாழ்கிறது. சிங்களத்தின் இந்தக் கனவுகள் நிச்சயம் கலையும். எமது மாவீரர் கண்ட கனவு ஒருநாள் நனவாகும். இது திண்ணம்.

எனது அன்பான மக்களே!

என்றுமில்லாதவாறு இன்று தமிழீழத் தேசம் ஒரு பெரும் போரை எதிர்கொண்டு நிற்கிறது. இப்போர் வன்னி மாநிலமெங்கும் முனைப்புப்பெற்று உக்கிரமடைந்து வருகிறது. சிங்கள அரசு இராணுவத்தீர்வில் நம்பிக்கைகொண்டு நிற்பதால், இங்கு இப்போர் நாளுக்குநாள் தீவிரமடைந்து விரிவாக்கம் கண்டு வருகிறது.

தமிழரின் தேசிய வாழ்வையும் வளத்தையும் அழித்து, தமிழர் தேசத்தையே சிங்கள இராணுவ இறையாட்சியின் கீழ் அடிமைப்படுத்துவதுதான் சிங்கள அரசின் அடிபபடையான நோக்கம். இந்த நோக்கத்தைச் செயற்படுத்திவிடும் எண்ணத்தில், தனது போர்த்திட்டத்தை முழுமுனைப்போடு முன்னெடுத்து வருகிறது. தனது முழுப் படை பலத்தையும் ஆயுத பலத்தையும் ஒன்றுதிரட்டி, தனது முழுத் தேசிய வளத்தையும் ஒன்றுகுவித்து, சிங்கள தேசம் எமது மண் மீது ஒரு பாரிய படையெடுப்பை நிகழ்த்தி வருகிறது.

சிங்கள இனவாத அரசு ஏவிவிட்டிருக்கும் இந்த ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து, எமது விடுதலை வீரர்கள் வீரா வேசத்தோடு போராடி வருகின்றனர். உலகின் பல்வேறு நாடுகளும் தமிழ் இன அழிப்புப் போருக்கு முண்டு கொடுத்து நிற்க, நாம் தனித்து நின்று, எமது மக்களின் தார்மீகப்



பலத்தில் நின்று, எமது மக்களின் விடிவிற்காகப் போராடி வருகிறோம்.

இன்று எமது விடுதலை இயக்கம் மிகவும் கடினமான, நெருக்கடிகள் நிறைந்த ஒரு வரலாற்றுப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. உலகின் எந்தவொரு விடுதலை இயக்கமுமே சந்தித்திராத பல சரிவுகளை, பல திருப்பங்களை, பல நெருக்கடிகளை நாம் இந்த வரலாற்று ஓட்டத்திலே எதிர்கொண்டிருக்கிறோம்.

எமது பலத்திற்கு மிஞ்சிய பாரிய சக்திகளையெல்லாம் நாம் எதிர்கொண்டிருக்கிறோம். வல்லமைக்கு மிஞ்சிய வல்லாதிக்க சக்திகளோடு நேரடியாக மோதியிருக்கிறோம். அலையலையாக எழுந்த எதிரியின் ஆக்கிரமிப்புக்களை எல்லாம் நேருக்கு நேர் நின்று சந்தித்திருக்கிறோம். பெருத்த நம்பிக்கைத் துரோகங்கள், பெரும் நாசச் செயல்கள் என எமக்கு எதிராகப் பின்னப்பட்ட எண்ணற்ற சதிவலைப் பின்னல்களை எல்லாம் தனித்து நின்று தகர்த்திருக்கிறோம்.

புயலாக எழுந்த இத்தனை பேராபத்துக்களையும் மலையாக நின்று எதிர்கொண்டோம். இவற்றோடு ஒப்புநோக்குகையில், இன்றைய சவால்கள் எவையும் எமக்குப் புதியவையும் அல்ல, பெரியவையும் அல்ல. இந்தச் சவால்களை நாம் எமது மக்களின் ஒன்றுதிரண்ட பலத்துடன் எதிர்கொண்டு வெல்வோம்.

சிங்கள தேசம் ஆக்கிரமித்து அடிமை கொள்ளத் துடிக்கும் இந்த மண் அதற்கு என்றுமே சொந்தமானதன்று. இந்த மண் எமக்குச் சொந்தமான மண் பழந்தமிழர் நாகரீகம் நீடித்து நிலைபெற்ற மண் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே எமது மூதாதையர் வாழ்ந்து வளர்ந்த மண்.

இந்த மண்ணிலேதான் எமது ஆதிமன்னர்கள் இராச்சியங்களும் இராசதானிகளும் அமைத்து அரசாண்டார்கள். எமது இன வேர் ஆழவேரோடியுள்ள இந்த மண்ணிலே, நாம் நிம்மதியாக, கௌரவமாக, அந்நியரின் அதிகார ஆதிக்கமோ தலையீடுகளோ இன்றி, எமது வாழ்வை நாமே அமைத்து வாழ விரும்புகிறோம். ஆங்கிலேய காலனியாதிக்கம் அகன்று, சிங்கள ஆதிக்கம் எம்மண் மீது கவிந்த நாள் முதல், நாம் எமது நீதியான உரிமைகளுக்காக அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராடி வருகிறோம்.

சுயநிர்ணய உரிமைக்கான எமது இந்த அரசியல் போராட்டம் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துச் செல்கிறது. இந்த நீண்ட படிநிலை வரலாற்றில், வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு வடிவங்களாக எமது போராட்டம் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டு வந்திருக்கிறது.

ஆரம்பத்தில் அமைதியாக, மென்முறை வடிவில், ஜனநாயக வழியில் அமைதி வழிப்போராட்டங்கள் வாயிலாக எமது மக்கள் நீதிகேட்டுப் போராடினார்கள். அரசியல் உரிமை கோரி, தமிழ் மக்கள் தொடுத்த சாத்வீகப் போராட்டங்களைச் சிங்கள இனவாத அரசு ஆயுத வன்முறை வாயிலாக மிருகத்தனமாக ஒடுக்க முனைந்தது.

அரச ஒடுக்குமுறை கட்டுக்கடங்காமல் உக்கிரம் அடைந்து, அதன் தாங்க முடியாத கொடுமைகளை எமது மக்கள் சந்தித்தபோதுதான், வரலாற்றின் தன்னியல்பான விதியாக எமது விடுதலை இயக்கம் பிறப்பெடுத்தது.

சிங்கள இனவாத அரசின் ஆயுதப் பயங்கரவாதத்திலிருந்து எமது மக்களைப் பாதுகாக்கவே நாம் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம். ஆயுத வன்முறை வழியை நாம் விரும்பித் தேர்வு செய்யவில்லை. வரலாறுதான் எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது.

தவிர்க்கமுடியாத தேவையின் நிர்ப்பந்தமாக ஆயுதப் போராட்டத்தை வரித்துக்கொண்ட போதும், நாம் எமது மக்களின் தேசியப் பிரச்சினைக்குப் போரை நிறுத்தி, அமைதி வழியில் தீர்வுகாணவே விரும்புகிறோம். இதற்கு எமது விடுதலை இயக்கம் என்றுமே தயாராக இருக்கிறது. நாம் சமாதான வழிமுறைகளுக்கு என்றுமே எதிரானவர்கள் அல்லர்.

அதேநேரம், நாம் சமாதானப் பேச்சுக்களிற் பங்குபற்றத் தயங்கியதும் இல்லை. சமாதான வழிமுறை தழுவி, எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க, திம்புவில் தொடங்கி, ஜெனீவா வரை பல்வேறு வரலாற்றுச் சூழல்களில் பேச்சுக்களில் பங்குபற்றி வந்திருக்கிறோம்.

எமது மக்களின் தேசியப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வுகாண நாம் முழுமனதுடனும் நேர்மையுடனும் செயற்பட்ட போதும் பேச்சுக்கள் எல்லாம் தோல்வியிலேயே முடிந்தன. சிங்கள அரசுகளின் விட்டுக்கொடாத கடுமபோக்கும், நாணயமற்ற அரசியல் அணுகுமுறைகளும் இராணுவ வழித் தீர்விலான நம்பிக்கைகளுமே இந்தத் தோல்விகளுக்குக் காரணம்.

பிரமிப்பூட்டும் போரியற் சாதனைகளைப் படைத்து, சிங்கள ஆயுதப் படைகளின் முதுகெலும்பை முறித்து, படைவலுச் சமநிலையை எமக்குச் சாதகமாகத் திருப்பியபோதும், நாம் நோர்வேயின் அனுசரணையிலான அமைதிப் பேச்சுக்களிற் கலந்துகொண்டோம். போருக்கு முடிவுகட்டி, ஆறு ஆண்டுகளாகத் தொடர்ந்த அமைதிப் பேச்சுக்களில் நேர்மையுடனும் பற்றுறுதியுடனும் பங்குகொண்டோம்.

### சமாதான முகமூடியை தோலுரிக்கவே

ஆயுதப் படைகளின் அத்துமீறிய செயல்களையும் ஆத்திரமூட்டும் சம்பவங்களையும் பொறுத்துக்கொண்டு, அமைதி பேணினோம். இத்தனையையும் நாம் செய்தது, சிங்கள இனவாத அரசு எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று நீதி செய்யும் என்ற நம்பிக்கையினால் அன்று. சிங்கள அரசின் சமாதான முகமூடியைத் தோலுரித்துக்காட்டி, சமாதானத்தில் எமக்குள்ள பற்றுறுதியை உலகத்திற்கு வெளிப்படுத்தவே நாம் பேச்சுக்களில் கலந்துகொண்டோம்.

உலக அரங்கில் பல்வேறு நாடுகளின் தலைநகரங்களில் அரங்கேற்றப்பட்ட இந்த அமைதிப் பேச்சுக்கள், தமிழ் மக்களின் அன்றாட அவசர வாழ்க்கைப் பிரச்சினைகளையோ இனப்பிரச்சினையின் மூலாதாரப் பிரச்சினைகளையோ தீர்ப்பவையாக அமையவில்லை. புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, தமிழர் தேசத்தையும் அனைத்துலக சமூகத்தையும் ஏமாற்றுவதற்கே சிறிலங்கா அரசு இப்பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்தியது.

பேச்சு என்ற போர்வையில், சிங்கள அரசு தமிழர் தேசம் மீது ஒரு பெரும் படையெடுப்பிற்கான ஆயத்தங்களைச் செய்தது. போர் ஓய்வையும் சமாதானச் சூழலையும் பயன்படுத்தி, தனது நலிந்து போன பொருளாதாரத்தை மீளக்கட்டி, தனது சிதைந்துபோன இராணுவப் பூதத்தை மீளவும் தட்டியெழுப்பியது.

பெருந்தொகையில் ஆட்சேர்ப்பு நிகழ்த்தி, ஆயுதங்களைத் தருவித்து, படையணிகளைப் பலப்படுத்தி, போர் ஒத்திகைகளைச் செய்தது. தமிழர் தேசம் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்க, சிங்கள தேசம் போர்த் தயாரிப்பு வேலைகளிலேயே தன்னை முழுமையாக அர்ப்பணித்தது.

இதேநேரம், சமாதான முயற்சிகளின் காவலர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திய உலக நாடுகளில் ஒரு பகுதியினர் அவசரப்பட்டு அதிரடி நடவடிக்கையில் இறங்கியமை, சமாதான முயற்சிகளுக்கே ஊறுவிளைவிப்பதாக அமைந்தது.

எமது சுதந்திர இயக்கத்தை இந்நாடுகள் ஒரு பயங்கரவாதக் குழுவாகச் சிறுமைப்படுத்திச் சித்திரித்து, தடை செய்யப்பட்ட இயக்கங்களின் வரிசையில் பட்டியலிட்டு, எம்மை வேண்டத்தகாதோராக, தீண்டத்தகாதோராக ஒதுக்கி ஓரங்கட்டி, புலம்பெயர்ந்து வாழும் எம்மக்கள் மீது வரம்பு மீறிய வரையறைகளை விதித்து, கட்டுப்பாடுகளைப் போட்டு, எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக அவர்கள் முன்னெடுத்த அரசியற் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டைகள் போட்டன.

தாம் வாழும் நாடுகளின் அரசியல் சட்டவிதிகளுக்கு அமைவாக, நீதிநெறி வழுவாது எம்மக்கள் மேற்கொண்ட மனிதாபிமானப் பணிகளைக் கொச்சைப்படுத்தி சிங்கள அரசின் இன அழிப்புக்கு ஆளாகி, மனிதப் பேரவலத்திற்கு முகம் கொடுத்து நின்ற தமது தாயக உறவுகளைக் காக்க எமது மக்கள் முன்னெடுத்த மனிதநேய உதவிப் பணிகளைப் பெரும் குற்றவியற் செயல்களாக அடையாளப்படுத்தி, தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் தமிழின உணர்வாளர்களையும் கைது செய்து, சிறைகளிலே அடைத்து, அவமதித்தன.

இந்நாடுகளின் ஒரு பக்கச்சார்பான இந்த நடவடிக்கைகள் பேச்சுக்களில் நாம் வகித்த சமநிலை உறவையும் சமபங்காளி என்ற தகைமையையும் வெகுவாகப் பாதித்தன. இது சிங்கள தேசத்தின் இனவாதப்போக்கை மேலும் தூண்டிவிட்டது. சிங்கள இனவாத சக்திகள் உசாரடைந்து, எமக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தின. இது சிங்கள தேசத்தை மேலும் இராணுவப் பாதையிலே தள்ளிவிட்டது.

சிங்கள தேசம் சமாதானக் கதவுகளை இறுகச் சாத்திவிட்டுத் தமிழர் தேசத்தின் மீது போர் தொடுத்தது. அனைத்துலகத்தின் அனுசரணையோடு கைச்சாத்தான போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறிந்தது.

### கண்டிக்காத உலக நாடுகள்

அப்போது சமாதானம் பேசிய உலக நாடுகள் ஒப்புக்குத்தானும் இதனைக் கண்டிக்கவில்லை கவலை கூடத் தெரிவிக்கவில்லை. மாறாக, சில உலகநாடுகள் சிங்கள தேசத்திற்கு அழிவாயுதங்களை அள்ளிக்கொடுத்து, இராணுவப் பயிற்சிகளையும் இராணுவ ஆலோசனைகளையும் இலவசமாக வழங்கி வருகின்றன.

இதனால்தான் சிங்கள அரசு தமிழருக்கு எதிரான இன அழிப்புப் போரைத் துணிவுட னும் திமிருடனும் ஈவிரக்கமின்றியும் தொடர்ந்து வருகிறது. இன்று சிங்கள

*(4 ஆம் பக்கம்)*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# எமது போராட்டம் எந்த நாட்டுக்கும் எதிரானது அல்ல!

*(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

தேசம் என்றுமில்லாதவாறு இராணுவ பலத்திலும் இராணுவ அணுகுமுறையிலும் இராணுவ வழித் தீர்விலும் நம்பிக்கை கொண்டு செயற்படுகிறது.

தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டி, ஆயுத அடக்குமுறையின் கீழ் தமிழர்களை ஆட்சி புரிய வேண்டும் என்ற அதன் ஆசை அதிகரித்திருக்கிறது. இதனால் போர் தீவிரம் பெற்று, விரிவுபெற்று நிற்கிறது. இந்தப் போர் உண்மையில் சிங்கள அரசு கூறுவது போல, புலிகளுக்கு எதிரான போர் அன்று.

இது தமிழருக்கு எதிரான போர் தமிழ் இனத்திற்கு எதிரான போர் தமிழின அழிப்பை இலக்காகக் கொண்ட போர் மொத்தத்தில் இது ஓர் இன அழிப்புப் போர். இந்தப் போர் எமது மக்களைத்தான் பெரிதும் பாதித்திருக்கிறது. போரின் கொடூரத்தை மக்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டு, மக்கள் மீது தாங்கொணாத் துன்பப்பளுவைச் சுமத்தி, மக்களைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராகத் திருப்பிவிடலாம் என்ற நப்பாசையிற் சிங்கள அரசு செயற்பட்டு வருகிறது.

பாதைகளை மூடி, உணவையும் மருந்தையும் தடுத்து, எமது மக்களை இறுக்கமான இராணுவ முற்றுகைக்குள் வைத்துக் கொண்டு, கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களையும் எறிகணை வீச்சுக் களையும் நடாத்தி வருகிறது. சொந்த நிலத்தை இழந்து, அந்த நிலத்தில் அமைந்த வாழ்வை இழந்து, அகதிகளாக அலையும் அவலம் எம்மக்களுக்குச் சம்பவித்திருக்கிறது.

பிறப்பிலிருந்து இறப்பு வரை சதா துன்பச் சிலுவையைச் சுமக்கின்ற மக்களாக எம்மக்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். நோயும் பிணியும் உடல்நலிந்த முதுமையும் சாவுமாக எம்மக்களது வாழ்வு சோகத்தில் தோய்ந்து கிடக்கிறது.

எமது மக்களின் உறுதிப்பாட்டை உடைத்து விடவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு எமது எதிரியான சிங்கள அரசு இன்று எம்மக்கள் மீது எண்ணற்ற கொடுமைகளைப் புரிந்து வருகிறது. பெரும் அநீதிகளை இழைத்து வருகிறது. உலகில் எங்குமே நிகழாத கொடூரமான அடக்கு முறைகளைப் பிரயோகிக்கிறது.

எமது தேசத்தின் மீது ஒரு பெரும் பொருண்மியப்போரை தொடுத்து, எம்மக்களின் பொருளாதார வாழ்வைச் சிதைத்து அவர்களது நாளாந்த சீவியத்தைச் சீர்குலைக்கின்ற செயலிலே இறங்கியிருக்கிறது. சிறிலங்கா படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழீழ நிலப்பரப்பில் மாதந்தோறும் நூற்றுக் கணக்கானோர் காணாமல் போகின்றனர் கொல்லப்படுகின்றனர். சிங்களப் பகுதிகளில் தமிழர் காணாமல் போவதும் கொல்லப்படுவதும் வழமையான நிகழ்ச்சியாகிவிட்டது.

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள தமிழர் பகுதிகளிலே ஒரு மறைமுகமான இன அழிப்புக் கொள்கை இன்று வேகமாகச் செயற்படுத்தப்படுகிறது. சாவும் அழிவும் இராணுவ அட்டூழியங்களும் சொந்த மண்ணிலேயே சிறைப்பட்ட வாழ்வுமாக எம்மக்கள் நாளாந்தம் அனுபவிக்கும் துயரம் மிகக்கொடியது.

கைதுகளும் சிறை வைப்புக்களும் சித்திரவதைகளும் பாலியல் வல்லுறவுகளும் கொலைகளும் காணாமல் போதல்களும் புதைகுழிகளுக்குள் புதைக்கப்படுவதுமாக ஒரு நச்சு வட்டத்திற்குள் எமது மக்களது வாழ்வு சுழல்கிறது.

இருந்தபோதும், எமது மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை. சுதந்திர தாகம் கொண்டு, எழுச்சி கொண்ட எம்மக்களை எந்தத் தடைகளாலும் எதுவும் செய்துவிடமுடியாது. ஆகாயத்திலிருந்து வீழும் குண்டுகளாலும் அவர்களது விடுதலை வேட்கையை அழித்துவிட முடியாது.

எம்மக்கள் துன்பச்சிலுவையைச் சதா சுமந்து பழகியவர்கள். அழிவுகளையும் இழப்புக்களையும் நித்தம் சந்தித்து வாழ்பவர்கள். இதனால் அவர்களது இலட்சிய உறுதி மேலும் உரமாகியிருக் கிறது. விடுதலைக்கான வேகம் மேலும் வீச்சாகியிருக்கிறது.

பெரும் போருக்கு முகம் கொடுத்தவாறு, நாம் இத்தனை காலமாக இத்தனை தியாகங்களைப் புரிந்து போராடி வருவது எமது மக்களின் சுதந்திரமான, கௌரவமான, நிம்மதியான வாழ்விற்கே அன்றி வேறெதற்காகவும் அன்று.

## தமிழக தலைவர்களுக்கு நன்றி

உலகத் தமிழினத்தின் ஒட்டுமொத்தப் பேராதரவோடு நாம் இந்தப் போராட்டத்தை நடாத்தி வருகிறோம். அதுமட்டுமன்று, எமது போராட்டம் எந்தவொரு நாட்டினதும் தேசிய நலன்களுக்கோ அவற்றின் புவிசார் நலன்களுக்கோ பொருளாதார நலன்களுக்கோ குறுக்காக நிற்கவில்லை.

எமது மக்களது ஆழமான அபிலாசைகளும் எந்தவொரு தேசத்தினதும் எந்த மக்களினதும் தேசிய நலன்களுக்குப் பங்கமாக அமையவில்லை. அத்தோடு இந்த நீண்ட போராட்ட வரலாற்றில், நாம் திட்டமிட்டு எந்தவொரு தேசத்திற்கு எதிராகவும் நடந்துகொண்டதுமில்லை.

எமது விடுதலை இயக்கமும் சரி எமது மக்களும் சரி என்றுமே உலக நாடுகளுடனும் எமது அண்டை நாடான இந்தியாவுடனும் நட்புறவை வளர்த்துச் செயற்படவே விரும்புகிறோம். இதற்கான புறநிலைகளை உருவாக்கி, நட்புறவுப் பாலத்தை வளர்த்துவிடவே சித்தமாக இருக்கிறோம்.

எமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி, காத்திரமான உறவுகளைக் கட்டியெழுப்புவதற்குக் காத்து நிற்கிறோம். எம்மை தடை செய்துள்ள நாடுகள், எமது மக்களது அபிலாசைகளையும் ஆழமான விருப்பங்களையும் புரிந்துகொண்டு, எம்மீதான தடையை நீக்கி, எமது நீதியான போராட்டத்தை அங்கீகரிக்கவேண்டுமென அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

இன்று இந்திய தேசத்திலே பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அங்கு அடங்கிக்கிடந்த எமது போராட்ட ஆதரவுக் குரல்கள் இன்று மீளவும் ஓங்கி ஒலிக்கின்றன. எமது போராட்டத்தை ஏற்றுக் கொள்கின்ற ஏதுநிலைகள் வெளிப்படுகின்றன. கனிந்து வருகின்ற இந்தக் கால மாற்றத்திகேற்ப, இந்தியப் பேரரசுடனான அறுந்துபோன எமது உறவுகளை நாம் மீளவும் புதுப்பித்துக்கொள்ள விரும்புகிறோம்.

அன்று, இந்தியா கைக்கொண்ட நிலைப்பாடுகளும் அணுகுமுறைகளும் தலையீடுகளும் ஈழத்தமிழருக்கும் அவர்களது போராட்டத்திற்கும் பாதகமாக அமைந்தன. இனவாத சிங்கள அரசு தனது கபட நாடகங்களால் எமது விடுதலை இயக்கத்திற்கும் முன்னைய இந்திய ஆட்சிப்பீடத்திற்கும் இடையே பகைமையை வளர்த்து விட்டது. இந்தப் பகைப்புலத்தில் எழுந்த முரண்பாடுகள் மேலும் முற்றிப் பெரும் போராக வெடித்தது. இதன் ஒட்டுமொத்த விளைவாக எமது மக்கள் பெரும் அழிவுகளைச் சந்திக்க நேர்ந்தது.

நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக நின்ற காரணத்தினால்தான் எமது இயக்கத்திற்கும் இந்திய அரசிற்கும் பிணக்கு ஏற்பட்டது. எனினும், இந்தியாவை நாம் ஒரு போதும் பகை சக்தியாகக் கருதியதில்லை. இந்தியாவை எமது நட்புச் சக்தியாகவே எமது மக்கள் என்றும் கருதுகிறார்கள். எமது தேசியப் பிரச்சினை விடயத்தில் இந்தியப் பேரரசு ஒரு சாதகமான நிலைப்பாட்டை எடுக்கும் எனப் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள்.

காலமும் கடல் கடந்த தூரமும் எம்மைப் பிரிந்து நிற்கின்ற போதும், எமது மக்களின் இதயத்துடிப்பை நன்கறிந்து, தமிழகம் இந்தவேளையிலே எமக்காக எழுச்சிகொண்டு நிற்பது தமிழீழ மக்கள் அனைவருக்கும் எமது விடுதலை இயக்கத்திற்கும் பெருத்த ஆறுதலையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

எம்மக்களுக்காக ஆதரவுக் குரல் எழுப்பி, அன்புக்கரம் நீட்டும் தமிழக மக்களுக்கும் தமிழகத் தலைவர்களுக்கும் இந்தியத் தலைவர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே எமது அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேநேரம், எமது தமிழீழத் தனியரசுப் போராட்டத்திற்கு ஆதரவாக வலுவாகக் குரலெழுப்புவதோடு, இந்தியாவிற்கும் எமது இயக்கத்திற்கும் இடையிலான நல்லுறவிற்குப் பெரும் இடைஞ்சலாக எழுந்து நிற்கும் எம்மீதான தடையை நீக்குவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

எனது அன்பான மக்களே!

சிங்கள அரசியல் உலகத்தில் பெரும் மாற்றங்களோ திருப்பங்களோ நிகழ்ந்து விடவில்லை. அங்கு அரசியல், போராகப் பேய் வடிவம் எடுத்து நிற்கிறது.

அன்பையும் அறத்தையும் போதித்த புத்த பகவானைப் போற்றி வழிபடும் அந்தத் தேசத்திலே இனக்குரோதமும் போர் வெறியும் தலைவிரித்தாடுகின்றன. அங்கு போர்ப் பேரிகைகளைத்தான் எம்மால் கேட்க முடிகிறது. போரை கைவிட்டு, அமைதி வழியில் பிரச்சினையைத் தீர்க்குமாறு அங்கு எவரும் குரல் கொடுக்கவில்லை.

சிங்களத்தின் அரசியல்வாதிகளிலிருந்து ஆன்மீகவாதிகள் வரை, பத்திரிகையாளர்களிருந்து பாமர மக்கள் வரை போருக்கே குரல் கொடுக்கிறார்கள். தமிழர் தேசம் போரை விரும்பவில்லை. வன்முறையை விரும்பவில்லை. அகிம்சை வழியில் அமைதி வழியில் நீதி வேண்டி நின்ற எம் மக்களிடம் சிங்கள தேசம்தான் போரைத் திணித்திருக்கிறது.

எமது பிராந்தியத்தைச் சேர்ந்த சார்க் நாட்டுத் தலைவர்கள் கொழும்பிலே கூடிய போது, எமது தேசத்தின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி நாம் அறிவித்த பகைமைத் தவிர்ப்பையும் ஏற்க மறுத்து, அதனை ஏளனம் செய்து போரைத் தொடர்ந்து நிற்பதும் சிங்கள தேசம்தான். ஏற்றுக்கொள்ளவே முடியாத அவமதிப்பூட்டும் நிபந்தனைகளை விதித்துப் போரைத் தொடர்வதும் சிங்கள தேசம்தான்.

சிங்கள தேசம் ஒரு பெரும் இன அழிப்புப் போரை எமது மண்ணிலே நிகழ்த்தி வருகிறது. இந்த உண்மையை மூடி மறைத்து, உலகத்தைக் கண்கட்டி ஏமாற்ற சிங்கள அரசுகள் காலங்காலமாகப் பல்வேறு அரசியல் நாடகங்களை அரங்கேற்றி வருகின்றன.

வட்டமேசை மாநாட்டில் தொடங்கி, இன்று அனைத்து கட்சிக் கூட்டம் என இந்த ஏமாற்று நாடகத்தின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. கடந்து சென்ற இந்த நீண்ட கால ஓட்டத்தில், சிங்கள அரசுகள் உலகத்தை ஏமாற்றியதைத் தவிர, தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு உருப்படியான எந்தவொரு தீர்வினையும் முன்வைக்கவில்லை.

மாறாக, சிங்கள தேசம் தனது படைக்கல சக்தியால் தமிழர் நிலங்களைப் பற்றியெரிய வைத்திருக்கிறது. தமிழரது அமைதியைக் கெடுத்து, அவர்களது நிலத்தில் அமைந்த வாழ்வை அழித்து, அவர்களை அகதிகளாக அலைய வைத்திருக்கிறது.

தமிழரின் மூலாதாரக் கோரிக்கைகளை ஏற்க மறுத்து, தமிழர் தேசத்தை இரண்டாகப் பிளந்து, அங்கு தமிழர் விரோத ஆயுதக் குழுக்களை ஆட்சியில் அமர்த்தி, இராணுவப் பேயாட்சி நடாத்துகிறது. புலிகளைத் தோற்கடித்த பின்னர்தான் தமது தீர்வுத்திட்டத்தை அறிவிப்போம் எனக் கூறிக்கொண்டு, போரை நடாத்துகிறது.

தமிழர்களைக் கொடுமைப்படுத்திக் கொன்றொழித்த பின்னர், சிங்களம் யாருக்கு தீர்வை முன்வைக்கப்போகிறது? தமிழரின் உண்மையான பிரதிநிதிகளை, அவர்களது பேரம் பேசும் சக்தியை அழித்துவிட்டு, எப்படிச் சிங்களம் தீர்வை முன் வைக்கப் போகிறது? தமிழரின் வரலாற்றுச் சொத்தான தாயக நிலத்தையே ஏற்க மறுக்கும் சிங்களம், எப்படி எமது மக்களுக்கு ஒரு நீதியான தீர்வை முன்வைக்கப்போகிறது? தமிழரின் தேசியப் பிரச்சினை விடயத்தில், சிங்களம் அடக்குமுறை என்ற ஒரே பாதையில்தான் சென்றுகொண்டிருக்கிறது.

இராணுவ வன்முறைப் பாதையைக் கைவிட்டு, சிங்களம் நீதி வழங்கும் என எமது மக்கள் வைத்திருந்த சிறிய நம்பிக்கையும் இன்று அடியோடு அழிந்து விட்டது. சிங்கள தேசத்திலே கடந்த அறுபது ஆண்டுகளாக நிகழாத அரசியல் மாற்றம் இனிவரும் காலங்களில் நிகழ்ந்து விடப் போவதுமில்லை, அப்படி நம்பி ஏமாறுவதற்கு எமது மக்களும் தயாராக இல்லை.

பூமிப்பந்திலே ஈழத்தமிழினம் ஒரு சிறிய தேசமாக இருக்கின்றபோதும் நாம் பெரும் வலிமை வாய்ந்த ஒரு சக்திமிக்க இனம். தன்னிகரற்ற ஒரு தனித்துவமான இனம். தனித்துவமான மொழியையும் பண்பாட்டு வாழ்வையும் வரலாற்றையும் கொண்ட ஒரு பெருமைமிக்க இனம். இப்படியான எமது அருமை பெருமைகளையெல்லாம் அழித்து, தமிழீழ தேசத்திலே தமிழரின் இறையாண்மையைத் தகர்த்துவிட்டு, இராணுவப் பலத்தாற் சிங்களம் தனது இறையாண்மையை திணித்துவிடத் துடிக்கிறது. தமிழரின் சுதந்திர இயக்கம் என்ற வகையில், நாம் எமது மண்ணில் சிங்கள ஆக்கிரமிப்பிற்கோ சிங்கள ஆதிக்கத்திற்கோ என்றுமே இடமளிக்கப்போவதில்லை.

எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர் கொண்டாலும் எத்தனை சக்திகள் எதிர்த்து நின்றாலும் நாம் தமிழரின் சுதந்திர விடிவிற்காகத் தொடர்ந்து போராடுவோம். வரலாறு விட்ட வழியில், காலம் இட்ட கட்டளைப்படி சிங்கள அந்நிய ஆக்கிரமிப்பு அகலும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.

இந்த வரலாற்றுச் சூழமைவில், தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன்.

அத்துடன், தங்களது தாராள உதவிகளை வழங்கித் தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சத்திய இலட்சியத் தீயில் தம்மையே அழித்துச் சரித்திரமாகிவிட்ட எமது மாவீரர்கள் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோமென உறுதியெடுத்துக் கொள்வோமாக.

*புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!*

**திரிபுவாத திம்மன்கள் – யார்?**
**– அடுத்த இதழில்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 4th December 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சி
# பெரியார் முழக்கம்
பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 டிசம்பர் 11, 2008 புரட்சி 7 முழக்கம் 50 விலை : ரூ.2.50


## எங்கெங்கும் ஈழத் தமிழர் ஆதரவுப் பேரலை

# வெற்றி நடை போட்ட பரப்புரைப் பயணம்

**தமிழகம் முழுதும் – ஈழத் தமிழர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்ட வேண்டும் என்ற உணர்வலைகளே குக்கிராமங்களிலிருந்து நகரங்கள் வரை மேலோங்கி நிற்கின்றன. இலட்சியத் தோழர்களைக் கொண்ட தமிழக மாணவர் கூட்டமைப்பு நடத்திய பரப்புரைப் பயணத்தில் இதை நேரடியாகவே உணர முடிந்தது. மருத்துவர் எழிலன் தலைமையேற்று வழி நடத்திய இந்த கொள்கைப் பரப்புரையின் நிகழ்வுகளை பயணக் குழுவில் முக்கியப் பங்காற்றிய பெரியார் திராவிடர் கழகத் தோழர் அன்பு தனசேகர் தொகுத்து தருகிறார்.**

சிங்கள இனவாத அரசாலும், இந்திய அரசின் துரோக நடவடிக்கைகளாலும் அல்லலுறும் ஈழத் தமிழரின் நிலையை பொது மக்களிடம் பரப்புரை செய்து, அவர்களின் போராட்ட நியாயத்தை மக்களிடம் விளக்கும் முகமாக மருத்துவர் எழிலன் தலைமையில், 'தமிழக மாணவர் கூட்டமைப்பின்' பரப்புரை பயணம் 18.11.08 அன்று சென்னை இராயப்பேட்டை பெரியார் படிப்பகத்தில் இருந்து புறப்பட்டது. பயணத்தை நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி கொடியசைத்து துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் விடுதலை இராசேந்திரன், தொல். திருமாவளவன், சுப. வீரபாண்டியன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் எழுச்சி உரையாற்றினர். பயணத்தில் பெரியார் திராவிடர் கழக சென்னை மாவட்ட நிர்வாகிகள் எ. கேசவன், அன்பு தனசேகர், இரா. உமாபதி, சுகுமார், பைரவன், சுதாகர், ரவிக்குமார், அருள்தாஸ் இராவணன், தீபக் ஆகியோரும், திராவிட இயக்க தமிழர் பேரவை நிர்வாகிகள் செந்தில், மாறன், சென்னை பல்கலைக்கழகம், பச்சையப்பன் கல்லூரி, திருச்சி சட்டக் கல்லூரி, உலக தமிழாராய்ச்சி நிறுவனம், எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரி மாணவர்கள் சென்றனர்.

18.11.08 முதல் 1.12.08 வரை தமிழகம் முழுவதும் 14 நாட்கள், 3200 கி.மீ. தூரம் இப்பயணம் பரப்புரை மேற்கொண்டது. 40 ஆயிரம் துண்டறிக்கைகள் மக்களிடம் விநியோகிக்கப்பட்டன. இதில் ஈழத் தமிழர் வரலாறு, போராட்ட நியாயம், சிங்கள, இந்திய அரசுகளின் துரோகங்கள், தமிழக மக்கள் இனி எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்ற கருத்துகள் அடங்கியிருந்தன. தமிழகத்தில் 25 மாவட்டங்களில் 125 இடங்களில் பரப்புரை நடந்தது.

பரப்புரை நிகழ்வுகள் திட்டமிட்ட முறையில் நடந்தன. பரப்புரையில் பறை முழக்கம், பாடல்கள் இடம் பெற்றிருந்தன. மக்களிடம் துண்டறிக்கை வழங்கப்பட்டன. ஈழத் தமிழர் பிரச்சினைகளை விளக்கிடும் நூல்கள் விற்பனை செய்யப்பட்டன. ஈழத் தமிழரின் அவலங்களை பதாகைகள் மற்றும் புகைப்படங்கள் வழியாக மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன. பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய "ஒப்பந்தங்களை சீர்குலைத்தது யார்?" புத்தகம் பயணம் முழுதும் விற்பனை செய்யப்பட்டது. பயணக்குழு ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் எழிலன், கழகத் தோழர் அன்பு தனசேகர், மக்களிடம் ஈழத் தமிழர் பிரச்சினைகளை சுருக்கமாக 30 நிமிடங்களில் விளக்குவார்கள். சில இடங்களில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யும் தோழர்களில் ஒருவரோ இருவரோ பேசினர்.

பயணம் முழுதும் எழுச்சிப் பாடல்களை அருள்தாஸ், மாறன், தேவராஜ் ஆகியோர் பாடினர். தோழர்கள் உமாபதி, மாறன், அன்பு தனசேகர், சபரி, தமிழ்ச்செல்வன் ஆகியோர் நிகழ்ச்சித் தொடங்கும்போது பறை வாத்தியத்தை முழங்கிட மக்கள் கூடிவிடுவார்கள்.

பரப்புரை பயண நிகழ்வை தொய்வில்லாமல் தொகுத்து வழங்கியவர் திராவிட இயக்க தமிழர் பேரவைத் தோழர் செந்தில். வாகனத்தில் மின் இயக்கி, ஒலி பெருக்கி பொருத்தப்பட்டிருந்தது. இந்தக் கருவிகளை இயக்கி, பழுது ஏற்பட்டாலும் உடனே அதை சரி செய்து, மழை வந்த நேரத்திலும் பாதுகாப்பாக செயல்பட வைத்த சிறப்பு பெரியார் திராவிடர் கழக செயல் வீரர் சுகுமாரையே சாரும். தேனீ போல் சலிப்பில்லாத உழைப்பு இவருடையது.




மருத்துவர் எழிலன் உரையாற்றுகிறார்




கொளத்தூர் மணி, கோவை இராமகிருட்டிணன், காசி ஆனந்தன், இயக்குனர் மணிவண்ணனுடன் பயணக் குழுவினர்

பயணத்தின் இடையே சேலத்தில் மேட்டூர் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் நங்கவள்ளி அன்பு, இராதா கிருஷ்ணன், கோகுல கண்ணன், அருள் செல்வம் ஆகியோர் இணைந்தனர்.

நங்கவள்ளி அன்பு பரப்புரையில் பல இடங்களில் உரையாற்றினார். மற்ற நேரங்களில் சுறுசுறுப்பாக புத்தக விற்பனையில் ஈடுபடுவார்.

சென்னை கழகத் தோழர்கள் எ. கேசவன், சுதாகர் ஆகியோர் புத்தக விற்பனையை பொறுப்பேற்று வெற்றிகரமாக செயல்படுத்தினர்.

சேலத்தைத் தொடர்ந்து பயணங்களை மருத்துவர் எழிலன், திண்டுக்கல், தாமரைக் கண்ணன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் கலந்து பேசி ஒருங்கிணைத்தனர். தொடர்ந்து அடுத்த இடம், அடுத்த நாள், காலை, பகல், இரவு உணவு, தங்குமிடம் ஆகிய வற்றை ஒருங்கிணைத்து ஒவ்வொரு நாளும் நெறிப்படுத்தியவர் அன்பு தனசேகரன் ஆவார்.

மருத்துவர் எழிலன் ஈழத் தமிழர் படும் துன்பங்கள், சிங்கள அரசின் குண்டு வீச்சு, மருந்தில்லாமல் தவிப்பு - இனி தமிழர்கள் ஒன்று சேர வேண்டிய அவசியம் குறித்தும்,

அன்பு தனசேகர், இந்திய அரசு, காங்கிரசு அரசுகளின் துரோகங்களையும், ஈழத் தமிழர் போராட்டத்தின் நியாயத்தை விளக்கியும்,

நங்கவள்ளி அன்பு : ஈழத் தமிழர் வரலாறு, சிங்களவரின் இனவெறி, இந்தியப் பார்ப்பனரின் துரோகங்களையும் விளக்கியும்,

செந்தில் மக்களின் ஆதரவோடு மக்கள் பிரிவினராகவே விடுதலைப் புலிகள் போராடுகிறார்கள் என்பதை விளக்கியும்,

கேசவன், ஞானசேகரன், ஈ.வி.கே. எஸ். இளங்கோவன் போன்ற காங்கிரசு கட்சியைச் சார்ந்த தமிழின துரோகிகளின் முகத்திரையை கிழித்தும் உரையாற்றினார்கள். மாணவர் தோழர்களாகிய சக்தி, செந்தில்குமார், பாலா, ஜெயவர்த்தனே, செல்வநாயகம், கோபி ஆகியோரும் இடையிடையே உரையாற்றினர்.

ஒவ்வொரு பரப்புரை நிகழ்வும் ஈழத் தமிழருக்கு ஆதரவுக் கரம் நீட்டுவோம் என்ற முழக்கங்களுடன் நிறைவு பெறும்.

### பொதுமக்களிடம் கருத்துக் கேட்பு

தோழர் நந்தா (திரைப்பட துணை இயக்குநர்) தொடர்ந்து இப்பயண நிகழ்வுகளை ஒளிநாடாவில் பதிவு செய்து வந்ததுடன், ஒவ்வொரு இடத்திலும் பொது மக்களை அணுகி அவர்களின் கருத்துக்களைப் பதிவு செய்தார். உதாரணமாக, ஈழத் தமிழர்களுக்கு தமிழகம் எவ்விதத்தில் உதவ வேண்டும்? இந்திய அரசின் நிலைப்பாடு சரியா? புலிகளின் போராட்டம் நியாயமா? போன்ற கேள்விகள் பொது மக்களிடம் முன் வைக்கப்பட்டன. மக்களின் கருத்துகளை தோழர் இரவிக்குமார் பதிவு செய்தார். மொத்தம் 60 மணி நேரம் மக்களின் கருத்துகள் ஒளிப்பதிவு நாடாவில் பதிவாக்கப்பட்டுள்ளது. இந்த அரும்பணியை நந்தா அற்புதமாக செய்து முடித்துள்ளார்.

(8 ஆம் பக்கம்)

# இளைஞர்களுக்கு முதுபெரும் பெரியார் தொண்டர்கள் அழைப்பு

திருச்சி மாவட்டத்தில் முதுபெரும் பெரியார் தொண்டர்கள், பெரியார் திராவிடர் கழகத்தோடு தங்களை இணைத்துக் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். சட்ட எரிப்புப் போராட்டத்தில் சிறை சென்ற இடையாற்று மங்கலம் முத்து செழியன், திருவரங்கத்தில் பெரியார் சிலை அமைப்புக் குழுவின் தலைவராக செயல்பட்ட டாக்டர் எஸ்.எஸ். முத்து, மூத்த கழகத் தோழர்கள் இடையாற்று மங்கலத்தைச் சேர்ந்த மூக்கன், கவுதமன், தங்கராசு, வாத்தலை மனோகரன் ஆகியோர் திருச்சி மாவட்ட பெரியார் திராவிடர் கழகத்தில் இணைந்து செயல்பட்டு வருகின்றனர்.

லால்குடி வட்டத்தில் சாதி ஒழிப்புக்காக சட்டத்தை எரித்து சிறை ஏகிய 300-க்கும் மேற்பட்ட தோழர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி, பெரியாரின் சாதி ஒழிப்பு லட்சியத்தைத் தொடருவோம் என்று அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். பெரியார் லட்சியத்தில் ஈடுபாடு கொண்ட இளைஞர்கள் இணைய வேண்டிய அமைப்பு பெரியார் திராவிடர் கழகம் தான் என்று அவர்கள் விடுத்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர். பெரியார் திராவிடர் கழகம் தான் பெரியார் கொள்கைகளை, பெரியார் வழியில் நின்று செயல்படுத்துகிறது என்றும் அவர்கள் பாராட்டியுள்ளனர்.

திருச்சியில் நாத்திகப் பாசறை என்ற அமைப்பை நடத்தி வரும் முதுபெரும் பெரியார் தொண்டரும், சட்ட ஒழிப்புப் போராட்ட வீரருமான திருச்சி வீ.அ.பழனி அவர்களும் பெரியார் திராவிடர் கழகத்துக்கு தனது ஆதரவை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## தலையங்கம்

### பொன்சேகாவின் திமிர்ப் பேச்சு

*இலங்கையில் ராஜபக்சே என்ற சிங்களர் ஆட்சி - ஆட்சியின் அதிகாரம் முழுவதையும் ராணுவத்திடம் கையளித்துவிட்டதால் ராணுவ தளபதிகளே அங்கு அரசியல் பேசி வருகிறார்கள். இலங்கை ராணுவத் தளபதி பொன்சேகா அண்மையில் கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே அப்சர்வர்' ஏட்டுக்கு அளித்த பேட்டியில் தமிழக தலைவர்களை அரசியல் கோமாளிகள் (Political Jokers) என்று திமிருடன் கூறியுள்ளது. தமிழகத்தில் கடும் கொந்தளிப்பை உருவாக்கியுள்ளது. சரத் பொன் சேகா இப்படிப் பேசுவது இது முதல் முறையல்ல.*

*சைப்ரஸ் நாட்டுக்கு சில வாரங்களுக்கு முன் அவர் சென்றிருந்தபோது "இலங்கை சிங்கள மக்களின் நாடு இதற்கு உடன்பட்டுத்தான் தமிழர்கள் இலங்கையில் வாழ வேண்டும்; இல்லையேல் வேறு நாட்டுக்குப் போய்விடலாம்" என்று பேட்டி அளித்தார். ஒரு ராணுவத் தளபதி இப்படி எல்லை மீறி இனவெறியைக் கக்கியதற்காக ராஜபக்சேவோ, அல்லது ஆட்சியோ, அவரைக் கண்டித்ததாகத் தெரியவில்லை. சரத் பொன் சேகா - இப்படி ஒட்டு மொத்த தமிழகத்தையே அவமதித்து, தமிழகத்தின் சுயமரியாதைக்கே சவால் விட முடிகிறது என்றால், இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சியின் சிறிலங்கா ஆதரவுப் போக்கு அவ்வளவு வலிமையாக இருப்பதே காரணம். தங்களுக்கு இந்திய அரசுதான் முக்கியமே தவிர, தமிழ்நாடு பற்றிக் கவலை இல்லை என்று தமிழகத்தை இந்தியாவிலிருந்து சிங்களம் பிரித்துப் பார்க்கிறது. இந்திய தேசியப் பார்ப்பனியமும் தமிழகத்து உணர்வு களை அவமதித்து பிரித்து தனியே ஒதுக்கித் தள்ளிவிட்டது என்பதே இதில் அடங்கியுள்ள அர்த்தம்.*

*இந்தப் பிரச்சினையில் தமிழகத் தலைவர் களை வரவேற்பு அறைக்கு அழைத்து நாற்காலி போட்டு அமர வைத்து தேனீர் அளித்துப் பேசுவதோடு, தமிழகத்துக்கு தரப்பட வேண்டிய மரியாதை முடிந்துவிட்டது என்று பிரதமர் மன்மோகன் சிங் கருதிக் கொண்டு, சிங்களத்தின் திமிர்ப் பேச்சுகளை கண்டிக்காமல் நழுவப் போகிறாரா என்ற கேள்வியை எழுப்ப விரும்புகிறோம். ஏதோ, சில மாநிலங்களில் காங்கிரஸ், சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று விட்டது என்பதற்காக தமிழ்நாட்டின் வாக்குகளை வாரிக் கொண்டு போய்விடலாம் என்று - இந்திய அரசு தப்புக் கணக்குப் போட வேண்டாம். தமிழர்களின் இதயங்களை நொறுக்கிவிட்டு வாக்குகளை அபகரிக்க தமிழர்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள். எனவே சிங்களத்தின் மீது கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. இலங்கை அதிபரை நேரில் அழைத்து கண்டிக்க வேண்டும்; அல்லது சிங்களத் தூதரக உறவை முறிப்பது பற்றி இந்திய தேசிய அரசு சிந்திக்க வேண்டும். இல்லையேல் இந்தியா வினுடைய உறவை தமிழகம் புறக்கணிக்கும் 'அரசியல்' உருவாவதைத் தவிர்க்கவே முடியாது.*

*இலங்கையுடன் சமரசப் பேச்சு வார்த்தை நடத்தி அரசியல் தீர்வு காண வேண்டும் என்று "அருள் உபதேசம்" கூறும் பார்ப்பன சக்திகள் மார்க்சிஸ்ட் கட்சியினர், தேசியவாதிகள் இப்படிப்பட்ட கடும் போக்குடைய ஒரு இனவெறி அரசுடன் தமிழர்கள் கைகுலுக்க முடியுமா? என்பதை சிந்திக்க வேண்டும். அப்படியே கைகுலுக்கினாலும் அந்த உறவு சுமுகமாக நீடிக்குமா? என்பதையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இந்தியாவிலிருந்து பிரிந்து சென்ற பாகிஸ்தானுடன் இந்தியா மீண்டும் ஒன்றாக சேர்ந்து, ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பகிர்வு செய்து கொள்ள வேண்டும் என்று கூறினால், அதை எவராவது ஏற்க முடியுமா? இதேபோல் தான் ஏற்கனவே ஈழமும், சிங்களமும் பிரிந்து போய் முரண்பட்டு நிற்கின்றன. எனவே தமிழர்களின் தாயகத்துக்கான போராட்டத்தை அங்கீகரிப்பதுதான் பிரச்சினைக்கு சரியான தீர்வு என்ற உறுதியான முடிவுக்கு வரவேண்டும். பொன்சேகாவின் பேச்சு இதைத்தான் உறுதி செய்கிறது.*

## இந்திரா கொலை விசாரணையை ராஜீவ் ஏன் மறைத்தார்?

*பிரதமராக இருந்த இந்திராகாந்தி, தனது சீக்கிய பாதுகாவலர்களாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். தொடர்ந்து ராஜீவ்காந்தி இந்தியாவின் பிரதமரானார். இந்திரா காந்தி அம்மையார் படுகொலை பற்றி விசாரிக்க , விசாரணை ஆணையம் ஒன்றை மத்திய அரசு நியமித்தது. ஆணையத்தின் தலைவர் தாக்கர். தாக்கர் ஆணையம் தனது விசாரணை அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்தது. நாடாளுமன்ற விதி களின்படி அமைக்கப்படும் விசாரணைக்குழு ஆணையத்தின் அறிக்கை சட்டப்படி நாடாளு மன்றத்திலே சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால், ராஜீவ்காந்தியோ, தனது தாயார் மரணம் குறித்து, தனது ஆட்சி நியமித்த விசாரணைக் குழுவின் அறிக்கையையே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க மறுத்தார்.*

*ஏன் மறுத்தார்? அந்த விசாரணை அறிக்கையில் என்ன கூறப்பட்டிருந்தது? இது மிக முக்கியமான கேள்வி. விசாரணைக்குழு அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் இருப்பதற்காகவே சட்டத்தையே திருத்தினார் ராஜீவ் காந்தி. எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பையும் மீறி சட்டத்திருத்தம் 1988 இல் கொண்டு வரப்பட்டது. தாக்கர் விசாரணை ஆணையத்தின் அறிக்கையும் மூடி மறைக்கப்பட்டது.*

**ஆனாலும், ஆணையத்தின் பரிந்துரைகளை ஏடுகள் வெளிக்கொண்டு வந்தன. ஆணையத்தின் முக்கிய பரிந்துரை என்ன? இந்திராவின் நேர்முக உதவியாளராக இருந்தவர் ஆர்.கே.தவான். அவருக்கு இந்திராவின் கொலைப் பற்றி முன்கூட்டியே தெரிந்திருக்கும் வாய்ப்புகள் இருந்திருப்பதால், அவரை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்பதே ஆணையத்தின் முக்கிய பரிந்துரை. இதற்கு ராஜீவ் ஏன் தயங்கினார்? ஆணையம் குற்றக்கூண்டில் நிறுத்திய ஒருவரை ஏன் காப்பாற்ற முயற்சித்தார்?**

*காப்பாற்ற முயற்சித்தது மட்டுமல்ல, அதற்குப் பிறகு ஆணையத்தால் சந்தேகத்துக்குரிய மனிதராக கூறப்பட்ட அதே ஆர்.கே. தவானை காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியிலும் ராஜீவ்காந்தி நியமித்தார். ஏன்? எதற்காக ஆர்.கே.தவானை ராஜீவ் சரிகட்ட முயற்சித்தார்? விடை தேட வேண்டிய கேள்வி இது!*

*அதற்குப் பிறகு விசாரணை ஆணையத்தின் அறிக்கைகளை மூடி மறைக்க ராஜீவ் காந்தி கொண்டு வந்த சட்டத்திருத்தத்தை ரத்து செய்தவர் வி.பி.சிங் தான். வி.பி.சிங் பிரதமராக வந்தபிறகு இதற்காக மீண்டும் சட்டத்தைத் திருத்தினார் என்பது வரலாறு.*

**ராஜீவ் மரணத்தையே பேசிக் கொண்டு ஈழத் தமிழர்கள் இனப்படுகொலைகளைப் பற்றி கவலைப்படாத காங்கிரசாரைக் கேட்கிறோம் -**

**இந்திராவின் மரணத்தில் அடங்கியுள்ள ரகசியங்களை ராஜீவ் காந்தி ஏன் மறைக்க முயன்றார்?**

**விசாரணை ஆணையம் சந்தேகக் கூண்டில் நிறுத்திய ஒரு அதிகாரி மீது நடவடிக்கை எடுக்காமல் அவரைக் காப்பாற்றி, அவருக்கு கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை வழங்கியது ஏன்?**

**காங்கிரசார் பதில் சொல்வார்களா?**

## வருந்துகிறோம்

### பெரியார் தொண்டர் ருக்குமணி சோமசுந்தரம் மறைந்தார்

*தந்தை பெரியாரின் அணுக்கத் தொண்டரும், பெரியாரின் நம்பிக்கைக்கு உரியவரும், பெரியார் மாளிகை நிர்வாகியுமாக விளங்கியவருமான தோழர் ச.சோமு என்கிற சோமசுந்தரத்தின் துணைவியார், திருச்சி அரசு மருத்துவமனையில் செவிலியராக இருந்து ஓய்வு பெற்றவரும், தந்தை பெரியாரை அன்றாடம் பார்த்து அவருடைய உடல்நிலையை சீராக வைக்க உதவியவருமான தோழியர் ருக்குமணி சோமசுந்தரம் 29.11.2008 அதிகாலை திருச்சியில் மறைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*தோழியர் ருக்குமணி சோமசுந்தரம் அவர்களின் இறுதி ஊர்வலம் எந்தவித சடங்கும் இல்லாமல் நடைபெற்றது. கலந்து கொண்டவர்கள்: கு.ம.சுப்பிரமணியன் (சிந்தனையாளர் கழகம் தலைவர்), திருச்சி செல்வேந்திரன் (தி.மு.க. வெளியீட்டுச் செயலாளர்), திருவரங்கம் டாக்டர் எஸ்.எஸ்.முத்து (பெரியார் தி.க.), செ.த. இராசேந்திரன் (பெரியார் தி.க. மாவட்டத் தலைவர்), இரா. கலியபெருமாள் (மார்க்சிய பெரியாரிய பொதுவுடமை கட்சி), வீ.அ.பழனி (பெரியார் நாத்திக பாசறை), பெரியார் தொண்டர்கள் முத்து நாராயணன், மகாலிங்கம், ராணி, நோபிள் மனோகர், முநரசிம்மன், மு.வெங்கடேசு, நாகை பாட்சா மகன் சாக்ரடீசு மற்றும் எஸ். பீட்டர் உள்பட பல பெரியார் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.*

### மேட்டூர் கழகத் தோழர் கதிரவன் முடிவெய்தினார்

*சேலம் மாவட்டம் மேட்டூர் அணை குமரன் நகர் பகுதி கழக செயலாளர் தோழர் மு.கதிரவன் (35) 2.12.08 அன்று திடீர் மாரடைப்பினால் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*குமரன் நகர் பகுதியில் மாணவரணி உருவாக மிகவும் காரணமானவர். களப்பணியில் மிகவும் துடிப்புடனும், கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கு கொண்டவர்.*

*இறுதி ஊர்வலம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. எவ்வித சடங்கும் இல்லாமல் அவருடல் அடக்கம் செய்யப்பட்டது.*

# கட்டுரையை நிகழ்வாக்கிய கதை!

## திரிபுவாத திம்மன்கள் – யார்? (11)

பெரியார் ஒரு திறந்த புத்தகமாகவே செயல்பட்ட தலைவர். அதுவே அவரது வலிமையாகவும் இருந்தது. அவரது எழுத்தும் பேச்சுமே அதற்கு கல்வெட்டு சான்றுகளாக நிற்கின்றன. சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்துக்கு உடைமைகளை சேர்த்தவர் பெரியார். அதே சொத்துகள் பற்றியும், அதன் மதிப்பு பற்றியும் பொதுக் கூட்டங்களில் மக்களிடம் பகிர்ந்து கொள்ளக் கூடிய தலைவராக பெரியார் திகழ்ந்தார்.

தி.மு.க.வின் வெளியீட்டு செயலாளர் சகோதரர் திருச்சி செல்வேந்திரன் நடத்தி வரும் 'எங்களுக்கு மகிழ்ச்சி' மாத இதழில் (செப்.2008) ஒரு கேள்விக்கு இவ்வாறு விடை அளித்திருந்தார்.

"நாட்டுடைமை பற்றி பெரியாரின் கருத்து என்னவாக இருந்தது" என்பது கேள்வி.

"ஒருவனுடைய வீடு கடைசிவரை அவனுடையதாகவே (அவன் பெயர் விளங்கும்படி) இருக்க வேண்டுமானால், அதை பொதுவுக்கு ஆக்க வேண்டும்" என்று பெரியார், ஒரு வீடு திறப்பு விழாவில் பேசியுள்ளார். அதனால் தன்னுடைய சொத்துக்களையே பொதுவிற்காக சொசைட்டி சட்டத்தின் கீழ் (பப்ளிக் சொசைட்டி) கொண்டு வந்து, அப்படியே வருமான வரி அதிகாரிகள் முன் வாக்கு மூலம் செய்தார்" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் வீரமணியோ, இதற்கு நேர்மாறானவர். சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் மூத்த உறுப்பினர்களுக்கேக்கூட தெரியாமல் புதிய அறக் கட்டளையைப் பதிவு செய்தார். மறைந்த விடுதலை நிர்வாகியும், பெரியார் நம்பிக்கைக்கு உரியவரும், சுயமரியாதைப் பிரச்சார நிறுவன உறுப்பினருமான என்.எஸ்.சம்பந்தம், இந்த ரகசிய செயல்பாட்டை கேள்வி கேட்டதால் தான், அவருக்கு 'துரோகி' பட்டம் தந்து, வீரமணி வெளியேற்றினார்.

இப்போது திரைப்படத் தயாரிப்பு தொழிலிலும் கி.வீரமணி இறங்கியிருக்கிறார். இதற்காக அவர் உருவாக்கிய அமைப்பு 'லிபர்ட்டி கிரியேஷன்ஸ்'. தி.க. பொருளாளர் சாமிதுரை, கி.வீரமணியின் மகன் அன்புராஜ் போன்றவர்கள் - இந்த 'லிபர்ட்டி கிரியேஷன்ஸ்'இல் முக்கிய பொறுப்பாளர்களாக இருப்பதாக 'விடுதலை'யில் வரும் செய்திகள் கூறுகின்றன. இந்த லிபர்ட்டி கிரியேஷன்ஸ் தான் பெரியார் திரைப்படத்தை தயாரித்தது. திரைப்படத் தயாரிப்புக்காக தமிழக அரசு ரூ.95 லட்சம் ரூபாயை வழங்கியது. தமிழக அரசு, இப்படி, பெரும் தொகையைப் படத் தயாரிப்புக்காக வழங்கியதற்கான காரணம், பெரியார் இயக்கம், பெரியாரைப் பற்றிய படத்தைத் தயாரிப்பதற்கு முன் வந்திருக்கிறது என்பதால் தான். தமிழக முதல்வர் கலைஞரும் இந்த படத் தயாரிப்பில் மிகுந்த ஆர்வம் காட்டினார். 'லிபர்ட்டி கிரியேஷன்ஸ்' என்பது, கி.வீரமணி, தனக்கு வேண்டிய நபர்களைக் கொண்டு உருவாக்கியுள்ள ஒரு தயாரிப்பு நிறுவனம். தயாரிப்பு செலவில் பெரும் பகுதியை தமிழக அரசே வழங்கிவிட்ட பிறகு, படத்தின் வினியோகம் இதன் மூலம் கிடைத்த வருமானம் எல்லாம் படத் தயாரிப்பு நிறுவனத்துக்கே போய்ச் சேர்ந்திருக்கும். அதுதான் உண்மை. ஆனால் கி.வீரமணியோ இது பற்றி எந்த வெளிப்படையான அறிக்கையையும் முன் வைக்கவில்லை. இது தவிர திரைப்படத் துறைக்காக பங்குத் தொகையாக பலரிடம் பண வசூலும் நடந்தது. இதுவும் அவர்களின் 'விடுதலை' ஏட்டிலே வெளி வந்தது. பங்குத் தொகையாக பணம் தந்தோருக்கும் லாபத் தொகை பகிரப்பட்டதாவும், 'விடுதலை'யில் செய்திகள் ஏதும் கிடையாது.

'திறந்த புத்தகத்தின் கதை' இப்படி என்றால், படத்தில் பல வரலாறுகளே திரிக்கப்பட்டது இன்னும் கொடுமையானது! பெரியாரின் வாரிசுக்கும், பெரியாரின் இயக்கத்துக்கும், அவரது நூல்களுக்கும் உரிமை கொண்டாடும் கி.வீரமணி தயாரிக்கும் பெரியார் திரைப்படத்தில் இப்படி வரலாறுகள் திரிக்கப்படலாமா? இதற்கு ஏராளமான உதாரணங்களை எடுத்துக் காட்ட முடியும். உதாரணமாக பெரியார் கடவுள் மறுப்பு தத்துவமான, 'கடவுள் இல்லை; கடவுள் இல்லவே இல்லை' என்ற தத்துவத்தை முதன்முதல் அறிவித்தது 1967 ஆம் ஆண்டு, திருவாரூருக்கு அருகே உள்ள விடையபுரம் எனும் கிராமத்தில் நடந்த பயிற்சி முகாமில் தான். இதை கி.வீரமணியே தனது 'பெரியாரியல்' நூலிலும் குறிப்பிடுகிறார்.

"விடையபுரத்திலே இருந்து கொண்டுதான், தந்தை பெரியார் அவர்கள் கடவுள் மறுப்பு வாசகத்தையே சொன்னார்கள். எனவே அந்த விடையபுரம் என்பது, ஒரு வரலாற்றுக் குறிப்புக்குரிய இடம். எனவே அந்த விடையபுரத்திலே இந்த வரலாற்றுக் குறிப்புக்காக, ஒரு பெரிய நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு நமது இயக்கம் பூர்வாங்கமாக துவக்கப் பணிகளை, வேலையைத் தொடங்கி இருக்கின்றது. நிலத்தை வாங்கியிருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார். ('பெரியாரியல்' நூல் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு - பக்.54). ஆனால் பெரியார் படத்தில் 1944 இல் பெரியார் கடலூருக்கு கூட்டம் பேச வந்தபோது, அவர் மீது செருப்பையும், பாம்பையும் காலிகள் வீசியபோது, பெரியார் கடவுள் மறுப்பைக் கூறுவதாக காட்சியமைக்கப்பட்டிருந்தது. 1944 இல் சேலத்தில் திராவிடர் கழகம் தொடங்கப்பட்டபோது திராவிடர் கழகக் கொடியே உருவாக்கப்படவில்லை. ஆனால் சேலத்தில் நடந்த தொடக்க விழாவிலே திராவிடர் கழகக் கொடியை பெரியார் படத்தில் காட்டினார்கள். பெரியார் சிந்தனையையும், வரலாற்றையும் துளிகூட சிதைக்காமல் காப்பாற்றுவதற்கு தங்களால் தான் முடியும் என்று கூறுகிறவர்கள், நீதிமன்றத்துக்கு ஓடுகிறவர்கள், இப்படி திரிப்பையும், புரட்டையும் செய்யலாமா?

பெரியார் வாழ்க்கையில் நிகழ்ந்திடாத ஒரு சம்பவத்தை, ஒரு கட்டுரையில் பெரியார் எழுதிய கருத்தை, அவரது வாழ்க்கை நிகழ்வாகவே பெரியார் படத்தில் திரித்து விட்டார்கள். பெரியார், ஈரோட்டில் உள்ள தனது தோட்டத்துக்கு கங்கையிலிருந்து நீர் இறைப்பதுபோல ஒரு காட்சி, பெரியார் படத்தில் இடம் பெற்றிருந்தது.

உண்மையில் - பெரியார் வாழ்க்கையில் அப்படி ஒரு சம்பவமே நிகழவில்லை. குடிஅரசு வார ஏட்டில் 1925 ஆம் ஆண்டு 'தெய்வ வரி' என்ற தலைப்பில் பெரியார் எழுதிய கட்டுரையில், பெரியார், இந்தக் கதையை குறிப்பிட்டிருந்தார். அதுதான் உண்மை. கடவுளுக்கும், பார்ப்பன புரோகிதர்களுக்கும் 'தட்சணை' என்ற பெயரில் கொட்டி அழும் மூடத்தனத்தைக் கண்டித்து பெரியார் எழுதிய கட்டுரையில் பார்ப்பனர்கள் ஏமாற்றுவதை கதை ஒன்றின் மூலம் சுட்டிக்காட்டியிருந்தார். அதை அப்படியே கீழே தருகிறோம்:

பெரியார் கட்டுரையில் எழுதியதை வாழ்க்கை நிகழ்ச்சியாக திரிக்கலாமா?

"ஒரு ஆற்றங்கரை ஓரத்தில் ஒரு புரோகிதர் ஒருவருக்கு வைதீக கர்மம் செய்து வைத்துக் கொண்டிருக்கும்பொழுது, தான் கிழக்கு முகமாக நின்று தன் இரு கைகளாலும் தண்ணீரை அள்ளி இறைத்துக் கொண்டிருந்தார். அதைக் கண்டு ஒரு பெரியார், தன் மேற்கு முகமாய் நின்று தன் இரு கைகளாலும் தண்ணீரை அள்ளி இறைத்தார்.

புரோகிதர்: ஐயா, என்ன மேற்கு முகமாய்ப் பார்த்து தண்ணீரை இறைத்துக் கொண்டிருக்கிறீர்?

பெரியார்: நீங்கள் கிழக்கு முகமாய்ப் பார்த்து எதற்காகத் தண்ணீர் இறைக்கிறீர்கள்?

புரோகிதர்: இது, மேல் உலகத்திலுள்ள பிதுர்க்களைப் பரிசுத்தமாக்கும்.

பெரியார்: நான் இறைப்பது என்னுடைய காய்கறித் தோட்டத்தின் செடிகளை நன்றாக வளர்க்கும்.

புரோகிதர்: இங்கு நின்று கையால் வாரி இறைப்பது வெகு தூரத்திலுள்ள தோட்டத்திற்கு எவ்வாறு போய்ச் சேரும்? பயித்தியமாய் இருக்கிறீர்களே!

பெரியார்: நீர்! இறைக்கும் தண்ணீர் மாத்திரம் என்னுடைய தோட்டத்தை விட எத்தனையோ அதிக தூரத்திலிருக்கும் மேல் உலகத்திற்கு எப்படிப் போய்ச் சேரும்?

புரோகிதர்: (வெட்கத்துடன்) இந்த வார்த்தையை இவ்வளவுடன் விட்டு விடுங்கள். வெளியில் சொல்லி என் வரும்படியைக் கெடுத்துவிடாதீர்கள்.

இஃதல்லாமல் குருமார்களென்று எத்தனையோ பேர் நமது நாட்டிடைத் தோன்றி மக்களைத் தம் சிஷ்யர்களாக்கி அவர்களிடை எவ்வளவு பணம் பறித்துப் பாழாக்குகிறார்கள் என்பதைப் பற்றி மற்றொரு சமயம் எழுதுவோம்.

**– 'குடிஅரசு' 16.7.2925**

இப்படி பெரியார் தனது கட்டுரையில் கூறிய கதையை அவரது வாழ்க்கையின் நிகழ்ச்சியாகவே மாற்றி பெரியார் படத்தை எடுத்தவர்கள்தான், பெரியார் திராவிடர் கழகத்தைப் பார்த்து, 'வரலாற்று புரட்டர்கள்' என்கிறார்கள்.

இப்படி, பெரியார் வாழக்கையில் நடைபெற்றதாகக் கூறப்பட்டது - உண்மையல்ல என்பதை, எப்படி அறிய முடிந்தது என்பது முக்கியமான கேள்வி.

பெரியார் திராவிடர் கழகம், 1925 ஆம் ஆண்டு, பெரியார் 'குடிஅரசு' ஏட்டில் பெரியாரின் எழுத்துப் பேச்சைத் தொகுத்து 2003 ஆம் ஆண்டு முதல் தொகுதியாக வெளியிட்டிருந்தது. அந்தத் தொகுதி வெளிவந்த காரணத்தால்தான் இந்த புரட்டையும் வெளிச்சத்துக்கு கொண்டுவர முடிந்தது.

இப்படி உண்மையான பெரியார் எழுத்தும் பேச்சும் முழுமையாக வெளிவந்து விட்டால், தங்களின் புரட்டுகளும், திரிபுகளும் நார்நாராய் கிழிந்து தொங்கும் என்பதால் தான் பெரியார் திராவிடர் கழகம் முழுமையாக குடிஅரசு தொகுப்புகளை வெளிக்கொணருவதை எதிர்த்து, வீரமணிகள் நீதிமன்றங்களை நோக்கி ஓடுகிறார்கள்.

(புரட்டுகள் உடைப்பு தொடரும்)

# 'விகடன்' வெளியிடாத கருத்துகள் — சிற்பி ராசன்

*ஆனந்த விகடன் நிருபர் திரு.கு.இராம கிருஷ்ணன் அவர்கள் என்னை பேட்டிகாண என் வீட்டிற்கு வந்தபோது நான் அவர்களிடம் கூறிய முழு செய்திகளும் பத்திரிகையில் வெளி வரவில்லை. அவற்றில் விட்டுப் போனவற்றை இங்கு விளக்கியுள்ளேன்.*

15 ஆண்டுகளுக்கு முன்பு இசைஞானி இளையராஜா அவர்கள் கடவுள் உற்பத்தி மையமாகிய எனது சிற்பக்கூடத்திற்கு வந்திருந்தார்.

அப்போது நியூசிலாந்து நாட்டிலுள்ள ஒரு இந்து கோவிலுக்காக 3 அடி உயரமும் சுமார் 300 கிலோ எடையும் உள்ள ஒரு பிள்ளையார் சிலையை செதுக்கிக் கொண்டிருந்தேன். இசைஞானியார் இந்தச் சிலையை தொட்டுப் பார்க்கலாமா? என்று கேட்டார். அதற்கு நான் உற்பத்தியாகும் இடத்தில் யார் வேண்டுமானாலும் தொடலாம்! கோவிலுக்குள் போன பிறகு இரண்டு பேர் தான் தொட முடியும்! என்று கூறினேன். அவர் சிரித்துக் கொண்டே கோவிலுக்குப் போன பிறகு அர்ச்சகர் மட்டும்தானே தொட முடியும்? இன்னொரு நபர் யார் என்றார்.

உடனே நான் சற்றும் தயங்காமல் பூசை என்கிற பெயரில் தினம் திருடும் திருடனும் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் பூட்டை உடைத்துத் திருடும் திருடனும் மட்டும் தான் தொட முடியும். என்று சொன்னேன். பக்தியுடன் போகும் நீங்களும் தொடமுடியாது! சிலையை வடித்த நானும் தொட முடியாது! என்ற உண்மையைக் கூறினேன். மேலும் நிருபர் என்னிடம் நீங்கள் ஒரு நாத்திகராக இருந்து கொண்டு ஏன் கடவுளர் சிலைகளைச் செய்கிறீர்கள் என்று கேட்டார்.

அதற்கு நான் என்னிடம் 75 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கணும். மேலும் சுவாமிமலை கடவுள் சிலை உற்பத்திக்கு பெயர் போனது. இங்கு வருபவர்கள் 100 சதவீதமும் கடவுள் சிலை வாங்கவே வருபவர்கள் அவர்களிடம் நான் நாத்திகம் பேசினால் 75 குடும்பங்களின் கதி என்னவாகும்? என்னிடம் வாங்குபவர்கள் தான் அதை கடவுள் என்கிறார்கள்.

என்னைப் பொருத்தவரை அது ஒரு உருவம்தான்! ஒருவன் கையில் வேலைக் கொடுத்தால் அவன் முருகன். வேலைப் பிடுங்கி வில்லைக் கொடுத்தால் அவன் ராமன். அதையும் எடுத்து விட்டு புல்லாங்குழல் கொடுத்தால் அதே சிலை கிருஷ்ணன் ஆகி விடுகிறது. ஆகவே ஆயுதத்தை வைத்துத்தான் நம் கடவுளை அடையாளம் காணமுடிகிறது.

(4 ஆம் பக்கம்)

# பயணக் குழுவிற்கு உற்சாக வரவேற்பு!

### ஈரோடு மாவட்டத்தில்

ஈழத் தமிழர்களுக்கு நிவாரண நிதி அளிக்க ஆதரவு திரட்டும் பரப்புரை பயணக் குழுவை வரவேற்று 29.11.2008 அன்று ஈரோடு மாவட்டம், தாராபுரத்தில் பிரச்சாரக் கூட்டம் நடத்தப்பட்டது. மதியம் அங்கு தாராபுரத்தில் பிரச்சாரம் செய்த பின்னர் தோழர்களுக்கு மதிய உணவு அளிக்கப்பட்டது. தாராபுரத்தில் நகரச் செயலாளர் குமார் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்தார். பின்னர் காங்கேயத்தில் பிரச்சாரக் குழுவிற்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அதே போன்று காங்கேயத்தில் பாண்டியன் ஏற்பாடு செய்திருந்தார். கம்பம் மணிவண்ணன் உறுதுணையாக இருந்தார்.

பின்னர் காங்கேயத்திலிருந்து புறப்பட்டு, குன்னத்தூர், கெட்டிச் செவியூர் ஆகிய பகுதிகளில் பிரச்சாரம் செய்து கொண்டு கோபி வட்டம் கொளப்பலூருக்கு வருகை தந்தனர். கொளப்பலூரில் மிகப் பெரிய பொதுக் கூட்டமாகவே ஏற்பாடுகளை செய்திருந்தனர். கொளப்பலூர் கிளைத் தலைவர் கொ.கி.சுப்ரமணியன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் ஆரம்பிக்கும் முன்னதாக 25 அடி அகல வெண்திரை அமைக்கப்பட்டு, அதில் ஈழம் தொடர்பான அனைத்து குறுந்தகடுகளும் ஒலிபரப்பப்பட்டது, திரையிடப்பட்டது. ஊர் மக்கள் பெருந்திரளாக கூடி நின்று நிகழ்ச்சியை கண்டுகளித்தனர். இடையில் அரை மணி நேரம் கடும் மழை பெய்தது. மழை விட்ட பின்பு பிரச்சாரக் குழுவினரின் பாடல்களுடன் கூட்டம் ஆரம்பிக்கப் பட்டது. கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் உரை நிகழ்த்திய பின்பு மருத்துவர் எழிலன் (தமிழக மாணவர் கூட்டமைப்பு) மிகவும் தெளிவாக உரை நிகழ்த்தினார். இரவு அனைவருக்கும் கொளப்பலூர் பெரியார் படிப்பகத்தில் இரவு உணவு வழங்கப்பட்டது. உணவு ஏற்பாட்டை கிளை தலைவர் ஏற்பாடு செய்திருந்தார்.

இரவு கோபிக்கு அருகே உள்ள ஒரு நூற்பாலையில் தோழர்கள் ஆறுமுகம், நிவாசு ஆகியோரின் முயற்சியால் பிரச்சாரக் குழுவினர் அனைவரும் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 30.11.2008 அன்று காலையில் அங்கு சிற்றுண்டியை முடித்த பின்னர், நகர கோபி தலைவர் நாகப்பன் தலைமையில், கோபி பேருந்து நிலையம் அருகே பிரச்சாரம் செய்யப்பட்டது. பின்னர், அளுக்குளி, நம்பியூர், சேவூர் ஆகிய பகுதிகளில் பிரச்சாரம் செய்யப்பட்டது. பின்னர் பிரச்சார குழுவை அவினாசி பகுதிக்கு அனுப்பி வைத்துவிட்டு, ஈரோடு மாவட்ட தோழர்கள் கலைந்து சென்றனர். நம்பியூரில் மாவட்ட இளைஞரணி இணைச் செயலாளர் எலத்தூர் செல்வக்குமார், சேவூரில் செயலாளர் செந்தில்குமார், தங்கள் பகுதி தோழர்களுடன் தலைமை தாங்கி ஏற்பாடு செய்தனர். இந்தப் பிரச்சாரக் குழுவினருடன் கோபி நகர செயலாளர் செயராமன், சத்தி ஒன்றியச் செயலாளர் இராஜேந்திரன், கூடக்கரை அருளானந்தம், கலைச் செல்வன், எலத்தூர் அழகிரி, நம்பியூர் ரமேசு, மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் ஆகியோர் உடன் சென்று பிரச்சாரம் ஈரோடு எல்லையில் முடியும் வரை தங்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்கி வழி நடத்தினர். நிகழ்ச்சியின் போது பொது மக்களிடையே ஏராளமான துண்டறிக்கைகள் விநியோகம் செய்யப்பட்டது.



பிரச்சாரக் கூட்டம் மிக எழுச்சியாக நடை பெற்றது.

### தூத்துக்குடியில்

நவம். 27 அன்று தூத்துக்குடிக்கு வருகை புரிந்த தமிழக மாணவர் கூட்டமைப்பினருக்கு கழக சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. மாலை 7 மணியளவில் கழக மாவட்டத் தலைவர் அம்புரோசு தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் க.கண்ணன் (ஆதித் தமிழர் பேரவை), இரா. தமிழான் (பு.இ.மு.), சுப. இராமச்சந்திரன் (மனித உரிமை பாதுகாப்பு மய்யம்), கழக பொறுப்பாளர்கள் கோ. குமார், நெல்லை காசிராசன், பால். பிரபாகரன், கோவை பன்னீர்செல்வம் ஆகியோரைத் தொடர்ந்து மருத்துவர் எழிலன், அன்பு தனசேகரன் சிறப்புரையாற்றினர். கழகத் தோழர் மதன்-ரேவதி இணையர் குழந்தைக்கு பிரபாகரன் என்று கழகத் தோழர் பால். பிரபாகரன் பெயர் சூட்டினார்.

### சீர்காழி, கொள்ளிடம், வைத்தீஸ்வரன் கோயில் ஆகிய பகுதியில் பிரச்சார பயணம்

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி தமிழக மாணவர் கூட்டமைப்பு சார்பில் பரப்புரைப் பயணம் 19.11.2008 அன்று 12.50 மணிக்கு கொள்ளிடம் கடைவீதி வந்தடைந்தது. கோரிக்கைகளை வலியுறுத்தி, சீர்காழி நகர தலைவர் பெரியார் செல்வம், தமிழக மாணவர் கூட்டமைப்பு தலைவர் மருத்துவர் எழிலன் சிறப்புரையாற்றினர். வரவேற்புக் கூட்டத்தில் கொள்ளிட ஒன்றிய செயலாளர் பா.பாக்கியராசு, ஒன்றிய தலைவர் பொன். தேவேந்திரன், ஒன்றிய துணை செயலாளர் ராமமூர்த்தி, ரகு, சிலம்பரசன், இன்பசேகரன், சரவணன் ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர்.

புத்தூர் கடைவீதியில் மதியம் 3.30 மணியளவில் பிச்சாரம் நடந்தது.

சீர்காழி பழைய பேருந்து நிலையம் அருகில் மாலை 4.15-க்கு பரப்புரை பயணத்திற்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பரப்புரை கூட்டத்தில் நாகை மாவட்ட கழகத் தலைவர் பரசுராமன், புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்ற மாவட்ட செயலாளர் அன்பு ராசப்பா, வி.வி.மு. மாவட்ட செயலாளர் அம்பிகாபதி ஆகியோர் கருத்துரை வழங்கினர். இறுதியாக மருத்துவர் எழிலன் சிறப்புரையாற்றினார்.

மாலை 5.30 மணிக்கு வைத்தீஸ்வரன் கடைவீதியில் பிரச்சார பயண வரவேற்பு கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பா.ம.க. நகர மாணவரணி செயலாளர் பெரியார் சிலம்பரசன், சீர்காழி ஒன்றிய துணை செயலாளர் ராமமூர்த்தி, கருத்துரையடுத்து, தமிழக மாணவர் கூட்டமைப்பு தலைவர் மருத்துவர் எழிலன் சிறப்புரையாற்றினார்.

### சிதம்பரத்தில்

பயணக் குழுவின் பிரச்சாரம் 19.11.2008 காலை சிதம்பரம் கஞ்சிதொட்டி பெரியார் சிலை அருகில் நடைபெற்றது. மக்கள் போராட்ட மையம் அமைப்பாளர் கென்னடி தமிழக மாணவர் கூட்டமைப்பு தலைவர் மருத்துவர் நா.க எழிலன் சிறப்புரையாற்றினார். பொது மக்களிடம் கோரிக்கையை வலியுறுத்தி ஏராளமாக துண்டறிக்கை கொடுக்கப்பட்து.

### கும்பகோணத்தில்

19.11.2008 அன்று கும்பகோணம் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் பரப்புரைக் குழு பிரச்சாரம் இரவு 8 மணியளவில் கும்பகோணம் மகாமக குளக்கரையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் தஞ்சை மாவட்ட அமைப்பாளர் சோலை மாரியப்பன், சென்னை மாவட்ட செயலர் அன்பு தனசேகர், இளங்கோவன், பெரியார் செல்வம் ஆகியோர் கருத்துரையை தொடர்ந்து சிற்பி. ராசன் தமிழக மாணவர் கூட்டமைப்பு தலைவர் மருத்துவர் எழிலன் சிறப்புரையாற்றினர். தோழர்கள் சிற்புராசன், சோலை மாரியப்பன் நிகழ்ச்சிக்கு முழுமையான ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

## சத்திய மங்கலத்தில் குழந்தைகளுடன் ஆர்ப்பாட்டம்

சிங்கள அரசைக் கண்டித்தும், தமிழர்களை கொல்வதற்கு ஆயுதங்கள் வழங்கும் இந்திய அரசைக் கண்டித்தும் குழந்தைகளுடன் ஆர்ப்பாட்டம் சத்தியமங்கலம் பேருந்து நிலையம் அருகில் 15.11.2008 சனிக்கிழமை காலை 10 மணியளவில் எழுச்சியுடன் நடந்தது.

ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்கான கூட்டமைப்பு நடத்திய ஆர்ப்பாட்டத்துக்கு க. செல்வராசு தலைமை தாங்கினார்.

எஸ்.பி. வெங்கிடுசாமி (ம.தி.மு.க.) பாஸ்கர் (பா.ம.க.), இரா. ஸ்டாலின் சிவக்குமார் (சி.பி.ஐ.), சுப்பையன் (பவானி ஆறு குடிநீர், நிலத்தடி நீர் பாதுகாப்பு இயக்கம்), ச.அர. மணிபாரதி (தமிழ்த் தேசப் பொதுவுடமை கட்சி), இனியன் (விடுதலை சிறுத்தைகள் கட்சி), சகுந்தலா (தலித் விடுதலைக் கட்சி), இராம. இளங்கோவன் (மாவட்ட செயலாளர் பெரியார் தி.க.), வீ. சுந்தராசு (தமிழர் பண்பாட்டுக் கழகம்), செ. கருப்புச்சாமி (ஆதித் தமிழர் விடுதலை முன்னணி), ப. பாலு (ஆதித் தமிழர் பேரவை), நசீருல்லா (தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம்), விடுதலைச் செல்வி (புரட்சிகர மாணவர் முன்னணி), இரா. குருசாமி (அருந்ததியர் மனித உரிமை அமைப்பு) ஆகியோர் உரையாற்றினர். த.சிபழனிச்சாமி நன்றி கூறினார்.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் என்னிடம் கடவுள் சிலையென்று கேட்டாலும் கழுதை நாய் பன்றி என எதைக் கேட்டாலும் எல்லாமே கிலோ ரூ. 1500.00 தான். இவை அனைத்திற்கும் பயன்படுத்தப்படும் உலோகமும் கருவிகளும் ஒன்று தான். கடவுளுக்கென்று தனியாக எதுவும் கிடையாது!

அதுமட்டுமல்லாமல் நான் கற்றுக் கொண்ட தொழில் உலோகத்தை உருக்கி வாடிக்கையாளர் கேட்பதைச் செய்து கொடுப்பது தான். கடவுள் சிலை செய்வதற்கு கடவுளின் அருள் இருந்தால் தான் முடியுமென்றால் சங்கராச்சாரி முதல் கிருபானந்தவாரியார் வரை எல்லா பக்தர்களும் சிலை செய்யலாமே? ஏன் அவர்களால் செய்ய முடியவில்லை என்றால் அவர்கள் எங்களைப் போல் அந்தத் தொழிலை கற்றுக் கொள்ளவில்லை என்பது தான் என்றேன். நிருபர் ரசித்து மகிழ்ந்தார்.

மேலும் நான் கூறிய மிக முக்கியமான செய்தி பத்திரிகையில் வரவில்லை. அது வேறொன்றுமில்லை!

இதுவரை நான் கோவிலுக்காக சிலைகளைச் செய்யும் போது சிற்பிகளை கேவலப்படுத்துவது போல ஆரியர்கள் சூழ்ச்சி ஒன்றை செய்வார்கள். “நீங்கள் செய்யும் சிலைகளில் சக்தி ஒன்றும் கிடையாது! நாங்கள் (ஆரியர்கள்) மந்திரம் சொல்லி பூசை செய்த இந்த யந்திரத் தகட்டில் தான் எல்லா சக்திகளும் இருக்கிறது. இதை சிலையின் கீழே பீடத்தில் வையுங்கள்” என்று சொல்லி ஒரு தகட்டினைத் தருவார்கள். **இதுவரை ஒரு சிலையில் கூட நான் அந்தத் தகட்டை வைத்தது கிடையாது!**

அதற்கு பதிலாக தந்தை பெரியார் அவர்கள் சொன்ன மூல மந்திரமாகிய கடவுள் இல்லை! கடவுள் இல்லை! கடவுள் இல்லவே இல்லை! கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்! கடவுளைப் பரப்பினவன் அயோக்கியன்! கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி! என்ற வாசகத்தை வைத்துத்தான் அனுப்பி இருக்கிறேன். எந்த ஒரு கடவுளும் இது வரை அந்தத் தகட்டினை அகற்றவில்லை!

சூத்திரர்களாகிய நாம் செய்யும் சிலைகளில் சக்தி இல்லையாம்! இவன்கள் கொடுக்கும் யந்திரத் தகட்டில் தான் சக்தியாம்! அதற்காகத் தான் நாத்திக யந்திரத் தகடுகளை நான் பதித்துள்ளேன். எல்லாம் அவன் செயல்: அவனன்றி ஒரு அணுவும் அசையாது!!

# ஈழப் பிரச்சினையை குழப்பிய பார்ப்பன அதிகாரிகள்

*ஈழத் தமிழர் பிரச்சினையில் தலையிட்டுக் குழப்பிய இந்திய அதிகாரிகள் பற்றி 'ஆனந்த விகடன்' ஏட்டில் அதன் செய்தியாளர் திருமாவளவன் எழுதிய கட்டுரை.*

### பி.வி. நரசிம்ம ராவ்

இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது, வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்தவர் நரசிம்ம ராவ். ஆந்திர அரசியலில் பல ஆண்டுகள் முதலமைச்சராக இருந்த அனுபவஸ்தர். இலங்கை வெளிக்கடைச் சிறையில் குட்டிமணி உள்ளிட்ட 37 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது, ஆத்திரமடைந்த பிரதமர் இந்திரா, 'இதை இந்தியா சும்மா பார்த்துக் கொண்டு இருக்காது' என்று நரசிம்மராவை அழைத்து, அப்போதைய இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவிடம் சொல்லச் சொன்னார். இலங்கை போனார் ராவ். அனைத்துக்கும் ஆரம்பம் இதுதான். 'இங்கு வாழும் தமிழர்கள் சில லட்சம் இருக்கலாம். எங்கள் நாட்டில் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். எனவே, இது உங்கள் உள்நாட்டு அரசியல் விவகாரம் அல்ல!' என்றுஅழுத்தமாக ராவ் சொன்னதைக் கோபத்தோடு கேட்டார் ஜெயவர்த்தனே.

'இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரா கட்சி ஆகிய இரண்டு கட்சிகள் தான் மாறி மாறி ஆட்சிக்கு வருபவை. இரண்டுமே இந்தியாவுக்கு எதிரான கட்சிகள். இதை வைத்து நமது வெளிநாட்டுக் கொள்கையை வகுக்க வேண்டும்' என்று இந்திராவுக்கு இலங்கை அரசியலைத் தெளிவுபடுத்தியவர் ராவ். அதனால் தான், நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் இந்திரா, 'இலங்கையில் நடப்பது உள்நாட்டுச் சண்டை அல்ல. இனப்போராட்டம்!' என்று தெளிவாக அறிவித்தார். இதைக் கவனிக்கச் சரியான ஆளைத் தேடும் வேலை நடந்தது. ஜி. பார்த்தசாரதி அழைத்து வரப்பட்டார்.

### ஜி. பார்த்தசாரதி

சென்னை மாநிலக் கல்லூரியில் படித்தவர். அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகித்த கோபாலசாமி அய்யங்காரின் மகன். அவருக்கு, இலங்கை கிரிக்கெட் வீரர் எஸ்.சி.டி.சேரம், இலங்கை கம்யூனிஸ்ட் தலைவர் கெனமன் ஆகியோரும் பழக்கம். கொழும்பு போய் சிங்களத் தலைவர்கள் அனைவரையும் பார்த்தார். பலரும் அவரை அவமானப்படுத்தினார்கள். நிற்க வைத்துப் பேசினார்கள். கவலைப்படவில்லை. கடைசியாகத் தான் தமிழ்த் தலைவர்களைப் பார்த்தார். தமிழர் பகுதிகளைத் தன்னாட்சி கொண்ட அமைப்பாக மாற்றினால் தான் தமிழர்கள் நிம்மதியாக வாழ முடியும் என்ற முடிவுக்கு வந்தார். அதை ஜெயவர்த்தனாவிடம் சொன்னார். இந்தத் திட்டத்துக்கு 'இணைப்பு சி' என்று பெயர்.

உள்நாட்டுக் குழப்பம், இந்தியாவின் நெருக்கடி இரண்டையும் சமாளிக்க பார்த்தசாரதியின் திட்டத்துக்குத் தலையாட்டினார் ஜெயவர்த்தனா. சிங்களவர்கள் எதிர்த்தார்கள். டெல்லி வந்த ஜெயவர்த்தனே இந்தத் திட்டத்தையே எதிர்க்க ஆரம்பித்தார். சோர்ந்து போனார் பார்த்தசாரதி. இந்திராவின் மரணம் ஜெயவர்த்தனாவுக்கு வசதியானது. 'பேச்சு வார்த்தை தொடங்க வேண்டுமானால், ஜி.பார்த்தசாரதி வரக் கூடாது' என்று பிரதமர் ராஜீவ்காந்தியிடம் முதல் நிபந்தனை விதித்தார் ஜெயவர்த்தனே.

அதன் பிறகு வந்தவர் ஏ.பி.வெங்கடேஸ்வரன். தனக்குத் தெரியாமல் பல விஷயங்கள் நடக்கின்றன என்று சொல்லி திடீரென்று ராஜினாமா செய்துவிட்டுப் போய்விட்டார் ஏ.பி.வெங்கடேஸ்வரன். அவர் கடைசியாக இப்படிச் சொன்னார், 'வங்காளிக்காரன், பஞ்சாபி சம்பந்தப்பட்டதாக இலங்கைப் பிரச்சினை இருந்திருந்தால், இந்தியா இந்நேரம் மீண்டும் ஒரு வங்கப் போர் தொடங்கி இருக்கும்!'

### ஜே.என்.தீட்சித்

இந்தியப் பிரதமரை தவிர யார் முன்னாலும் கால் மேல் கால் போட்டு பைப் பிடித்தபடியே பேசக் கூடிய தைரியசாலி, தீட்சித், ஜெயவர்த்தனா மீதே புகைவிட்டவர். இந்தியா மீது ஜெயவர்த்தனா அதிகக் கோபமாக இருந்த காலம் அது. யாழ்ப்பாணத்துக்குப் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெங்களூரு விமான தளத்தில் இருந்து 5 விமானங்களில் உதவிப் பொருட்கள் அனுப்பப்பட்டன. 'ஆபரேஷன் பூமாலை' என்ற இந்தத் திட்டத்தில் தீட்சித்தின் பங்கு முக்கியமானது. அதன் பிறகுதான் இந்திய-இலங்கை ஒப்பந்தம் எழுதப்பட்டது.

ஜெயவர்த்தனாவை வளைத்ததும் புலிகள் பக்கமா வந்தார் தீட்சித். பிரபாகரன், பாலசிங்கம் இருவரையும் டெல்லிக்கு அழைத்துச் சென்றார். 'ஒப்பந்தத்தை ஏற்க முடியாது' என்றார் பிரபாகரன். 'அப்படியானால், இந்த ஓட்டலைவிட்டு நீங்கள் வெளியேற முடியாது' என்ற மிரட்டினார் தீட்சித்.

ஒப்பந்தம் கையெழுத்தானது. புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க ஆரம்பித்தார்கள். தங்களின் சென்னை அலுவலகத்தைப் புலிகள் காலி செய்து, குமரப்பா, புலேந்திரன் தலைமையில் 17 பேர் இலங்கை போனார்கள். அவர்களை சிங்கள ராணுவம் கைது செய்தது. ஒப்பந்தப்படி, அவர்களைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று புலிகள் கேட்டார்கள். ஆனால், கொழும்பு கொண்டுவரச் சொன்னார் ஜெயவர்த்தனே. அதை தீட்சித்தால் தடுக்க முடியவில்லை.

எனவே, ஆயுதத்தைப் புலிகள் தூக்கினார்கள். 'இரண்டாயிரம் பேரை நான்கே நாட்களில் வழிக்குக் கொண்டு வரலாம்' என்று சொல்லி, அதற்கான பொறுப்பை மேஜர் ஜெனரல் ஹர்கிரத் சிங்கிடம் ஒப்படைத்தார் தீட்சித்!

### ஹர்கிரத் சிங்

இலங்கைக்குச் சென்ற இந்தி யஅமைதிப் படையின் முதல் தளபதி இவர். டெல்லியிருந்து போனதும் பிரபாகரனை நேரடியாகப் போய் பார்த்தவர். 5 மணி நேரம் இருவரும் பேசினார்கள். இவரது வாக்குறுதிப்படிதான் ஆயுதத்தை ஒப்படைக்க பிரபாகரன் சம்மதித்தார். இதை எழுதிக் கொடுக்கச் சொன்னார் சிங். சிரித்துக் கொண்டே எழுதியும் கொடுத்தார் பிரபாகரன். அதன் அடையாளமாக ஒரு துப்பாக்கி இவரிடம் கொடுக்கப்பட்டது. வரிசையாக வந்து ஆயுதங்களை புலிகள் ஒப்படைத்தார்கள். ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எப். குழு ஆயுதங்களை ஒப்படைக்கவில்லை. அதைத் தட்டிக் கேட்டார் ஹர்கிரத் சிங். ஆனால், அதைக் கண்டுகொள்ள வேண்டாம் என்று அவருக்கு மேல் இருந்த ஒரு அதிகாரி சொல்லிவிட்டார்.

அதன் பிறகு திலீபனின் உண்ணாவிரதம் நடந்தது. உண்ணாவிரதம் வேண்டாம் என்று புலிகளைச் சந்தித்துக் கேட்டார் சிங். அவர்கள் சம்மதிக்கவில்லை. தீட்சித்தைச் சந்தித்து, 'நீங்கள் திலீபனை வந்து சந்தியுங்கள்' என்றார். ஆனால், தீட்சித் இதை ஏற்கவில்லை. அதன் பிறகு புலிகளை எதிர்த்தே போர் செய்ய வேண்டிய நெருக்கடி ஹர்கிரத் சிங்குக்கு ஏற்பட்டது.

பல மாதங்கள் ஆகியும் புலிகளை இந்திய ராணுவத்தால் முழுமையாக அடக்க முடியவில்லை. அப்போது தான் இதில் ஏதோ வேறு கோளாறு இருக்கிறது என்று பிரதமர் ராஜீவ் நினைத்தார். ராஜீவின் தூதராக கார்த்திகேயன் போனார்.

### டி.ஆர். கார்த்திகேயன்

மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் தென் பிராந்திய இன்ஸ்பெக்டர் ஜெனரலாக அப்போது கார்த்திகேயன் இருந்தார். அவர் கொழும்புவுக்குப் போய்விட்டு திரும்பி வந்ததும் ராஜீவ் காந்திக்கு அறிக்கை கொடுத்தார். 'புலிகள் தான் மக்கள் மத்தியில் அதிகாரம் பெற்றுள்ளனர். அவர்கள் கட்டுப்பாட்டில்தான் வடகிழக்கு உள்ளது. இந்திய அமைதிப்படை அதிகாரிகளுக்கு மனபலம் இல்லை. எதற்காக இந்தச் சண்டை என்று நினைக்கிறார்கள். பிரச்சினையை இலங்கை அரசாங்கமும் தமிழர்களும் தீர்த்துக் கொள்ளட்டும் என்று சொல்லிவிட்டு, இந்திய அமைதிப் படை திரும்ப வேண்டும். வேறு பாதுகாப்புக் காரணத்துக்காக, அங்கு இருக்க வேண்டும் என்று நினைத்தால், புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்' என்று அதில் குறிப்பிட்டார்.

இந்த அறிக்கை வெளி விவகாரத் துறை, ராணுவ மட்டத்தில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது. உண்மையான நிலவரத்தை யாரும் அதுவரை சொல்லாமல் போனது ராஜீவுக்குக் கோபத்தை ஏற்படுத்தியது.

இலங்கையின் இந்தியத் தூதரகத்துக்கு கார்த்திகேயனை நியமிக்கும் வேலைகளும் பரபரப்பாக நடந்தன. ஆனால், அது ஏனோ நடக்கவில்லை. அவர் சென்றிருந்தால், வேறு வகையான மாற்றம் நடந்திருக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், துரதிருஷ்டம்... ராஜீவ் படுகொலை வழக்கை விசாரிக்கும் அதிகாரியாக அவர் பின்னர் ஆகும் சோக சூழல் தான் ஏற்பட்டது.

### எம்.கே. நாராயணன்

23 ஆண்டுகளுக்கு முன்னால் காசியில் பிரபாகரனைச் சந்தித்தவர் எம்.கே.நாராயணன். அப்போது அவர் மத்திய புலனாய்வு அதிகாரி. இப்போது அவர் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர். திம்பு பேச்சு வார்த்தைக்கு புலிகளைச் சம்மதிக்க வைத்து அழைத்து வந்தவர். 'தனிநாடு கேட்கக் கூடாது' என்பதை அனைத்துப் போராளி குழுக்களுக்கும் ஆரம்பக் காலத்தில் இருந்து அறிவுரை சொல்லி வருபவர். இலங்கைக்கு அமைதிப்படை அனுப்ப வேண்டும் என்று தீட்சித்துடன் இணைந்து ராஜீவைச் சம்மதிக்க வைத்தவர். போதைப் பொருள் கடத்தித்தான் புலிகள் சம்பாதிக்கிறார்கள் என்று சொல்லிப் பரபரப்பு கிளப்பியவர். 'கரும் புலிகள் அமைப்பைக் கலைக்காதவரை, அவர்களுடன் பேச்சு நடத்துவது வீண் என்று சொல்லுபவர். இன்று இலங்கை விவகாரத்தின் சிறு துரும்புகூட நாராயணன் சொல்லாமல் நகர்வதில்லை.

சீனா, பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளும் இலங்கைக்குத் தொடர்ந்து ராணுவ உதவிகள் செய்து வருகின்றன. அந்த நாடுகளிடம் உதவிகள் வாங்கக் கூடாது என்று நாராயணன் சொன்னார். இலங்கை கேட்கவில்லை. நாங்கள் தருகிறோம் என்று சொன்னார். இலங்கை வாங்கிக் கொண்டது. 'பக்கத்து நாடான இலங்கையில் நமது எதிரி நாடு நுழைய அனுமதிக்கக் கூடாது' என்பதுதான் நாராயணன முன்மொழியும் ஒரு வரிக் கொள்கை. ஆனால், சீனா செய்துள்ள உதவியில் பத்தில ஒரு பங்குகூட இந்தியா செய்யவில்லை. அந்த அளவுக்குச் செய்யவும் முடியாது. இப்படிப்பட்ட ஒப்பந்தம் போடப்படும்போது மட்டும். 'தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தக்கூடிய தீர்வுத் திட்டம் வைக்காமல், பிரச்சினையைத் தீர்க்க முடியாது' என்று சொல்வார். இலங்கை கோபமாகிப் பதில் சொல்லும். உடனே இவர் புது நிபந்தனைகளைச் சேர்த்து ஓர் ஒப்பந்தத்தைத் தயாரித்து தருவார்.

மேலும், "இந்தியா நம்முடைய வளங்களைச் சுரண்டுவதற்காக வருகிறது' என்று ஜனதா விமுக்தி பெரமுனா கட்சி பிரச்சார இயக்கம் நடத்தி வருகிறது. சமீபத்தில் சார்க் மாநாட்டுக்கு நாராயணன் இலங்கை போனபோது, கார் கொடுக்காமல், வாடகை கார் பிடித்து தனது ஓட்டலுக்கு வந்தாராம்.

புலிகள் வளர்வது இந்தியாவுக்கு ஆபத்து என்று நினைக்கிறார் நாராயணன். ஆனால், இந்தியாவா சீனாவா என்றால், சீனா பக்கம் தான் அங்குள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் கை தூக்குகின்றன. புலிகளை ஒடுக்குவது வரை இந்தியாவை அனுசரித்துப் போய், அதன் பிறகு சீனா பக்கம் போய்விடுவோம் என்று சிங்களக் கட்சிகள் சொல்ல ஆரம்பித்துள்ளன.

புலிக்குப் பயந்து சிங்கத்தின் பக்கம் உட்கார்கிறார் எம்.கே. நாராயணன்.

சிங்கமும் சைவமில்லையே!

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 11.12.2008**

### மத மறுப்பு மண விழா

30.11.2008 அன்று கழக ஆதரவாளர் கி.ம.செயவேலு எனும் வேலு பெரியார் - முகமதி பேகம் எனும் தமிழ்ச் செல்வி ஆகியோர் மத மறுப்பு வாழ்க்கை இணை ஏற்பு சென்னை சோழிங்கநல்லூர் ஏகாம்பரம் திருமண மண்டபத்தில் திருவாட்டிதாமரை பெருஞ்சித்திரனார் தலைமையில் நடந்தது.

பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், இயக்குனர் சீமான், தியாகு, தேனிசை செல்லப்பா உள்ளிட்ட பலரும் வாழ்த்திப் பேசினர். கழகத் தோழர் டேவிட் பெரியார் நன்றி கூறினார்.

கழக ஏட்டுக்கு ரூ.500 நன்கொடை வழங்கப்பட்டது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை

# பெரியார் தனி மனிதரல்ல; அவர் ஒரு சிந்தனை

*சென்னையில் திரைப்பட இயக்குனர் வேலு பிரபாகரன், பெரியாரின் குடந்தை உரையை ஒளிப்பதிவு நாடாக வெளியிட்டார். பெரியார் வேடம் தரித்து, பெரியார் மொழியிலேயே பேசும் அந்த ஒளி நாடா வெளியீட்டு நிகழ்ச்சியில் – சென்னையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரையிலிருந்து.*

பெரியார் மிகப் பெரிய சிந்தனையாளர். மக்களுக்காக உழைத்தவர். மக்களுக்கான கருத்துகளை விட்டுச் சென்றவர் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அந்தக் கருத்தை மக்களிடம் எடுத்துச் செல்வதில் தான் இப்போது பிரச்சினை. எல்லோரும் சொல்வார்கள், பெரியார் அன்றைக்கு சொன்னது இன்றைக்கும் பொருத்தமாக இருக்கிறது என்று. அது பெரியாருக்கு பெருமையல்ல. 75, 80 ஆண்டுகளுக்கு முன்னாள் பேசிய செய்தியை இன்னும் பேச வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம் என்பது ஒரு கேவலமான, இழிவான, வருந்தத்தக்க ஒரு செய்தி. ஏனென்றால், பேசிய தலைவர் காலத்திலிருந்த ஒரு எழுச்சி, பிறகு இல்லாமல் போய்விட்டது என்பதுதானே இதற்கு அர்த்தம்; மாற்றங்கள் வரவில்லை என்பதுதான். நாங்கள் இந்த அமைப்பை தொடங்கியபோது வைத்த முழக்கத்தில் ஒன்று, ‘பெரியார் காலத்திய தமிழகத்தை உருவாக்குவோம்’ என்பது. அதற்கும் மேலான முழக்கத்தை முன் வைக்க முடியாத நிலையில் தான் நம் தமிழ்நாடு இருக்கின்றது. தலைவர் விட்டுச் சென்ற பணியை நாம் வளர்த்துக் காட்ட வேண்டும். ஒரு குழந்தையை ஒருவனிடம் விட்டு விட்டு பார்த்துக் கொள் என்று சொல்லி 10 ஆண்டுகள் கழித்துப் போய் பார்க்கிறபோது குழந்தையை நாம் எப்படி விட்டுச் சென்றோமோ, வளர்ச்சி அடையாமல் அப்படியே இருந்தால் அவன் சோறே போடவில்லை என்று அர்த்தம். ஒழுங்காகப் பார்த்துக் கொள்ளவில்லை என்று பொருள். நாம் அடுத்தக் கட்டத்திற்கு ஏன் செல்லவில்லை என்றால் பெரியார் என்ன சொன்னார் என்பதே முழுமையாக இந்த சமுதாயத்திற்கு நாம் கொண்டு செல்லவில்லை. அதை எடுத்துச் செல்ல வேண்டிய பணியை, கடமையை நாம் முறையாக செய்யவில்லை என்பதை வெட்கத்தோடு ஒப்புக் கொள்ள வேண்டும்.

பெரியார் என்பவர் ஆரியத்திற்கு எதிராக பார்ப்பனர்களுக்கு எதிராக போர் நடத்தியவர். பார்ப்பானுக்கு எதிராக பெரியார் ஏன் நின்றார். அறிவை தனிப்பட்ட சிலருக்கு மட்டுமே உரிமை என்று சொன்னது ஆரியம். பார்ப்பனியம் மக்களுக்கு போகக் கூடாது நாங்கள் மட்டுமே படிப்போம் என்றது ஆரியம். (வெளிநாட்டில் இருந்து வந்த சீனப் பயணிகள் எல்லாம் குறிப்பெழுதியிருக்கிறார்கள். இத்தனை கல்லூரிகள் இங்கெல்லாம் இருந்தது. 10000 பேர் படிக்கிறார்கள் என்று. என்ன படித்தான்? வேதம் படித்தான். பார்ப்பான் மட்டுமே படித்தான்.) அவர்கள் மட்டுமே படிக்கிற கல்வி முறைதான் அன்று இருந்தது. அறிவு என்பது ஒரு கூட்டத்திற்கு மட்டும் சொந்தம் என்று சொன்னதை உடைத்து, அது மக்களுக்கு என்று சொல்லி உழைத்தவர் பெரியார். பெரியாரின் கருத்துகள் எங்களுக்கு மட்டும் தான் என்று சொல்வது முட்டாள்தனம். பெரியாரை புரிந்துக் கொள்ளாதவர்கள். மக்களிடம் அதைக் கொண்டு போய் சேர்த்தால் தானே மாற்றம் வரும். செய்வது விளம்பரத்திற்கும், வருவாய்க்கும் என்று கூறுகிறார்கள். அந்த நோக்கம் நமக்கல்ல. வேண்டுமானால், வருமானத்தைக்கூட கொடுத்து விடலாம். அதுதான் நோக்கமாக இருப்பவர்களுக்கு. (கைதட்டல்) நம்முடைய நோக்கம் பெரியாரை கொண்டு போய் மக்களிடம் சேர்க்க வேண்டும். எப்படியாவது, எந்த வழியிலாவது கொண்டு போய் மக்களிடம் சேர்க்க வேண்டும் என்று கொளத்தூர் மணி குறிப்பிட்டார்.

அறிவுசார் சொத்துடமை என்பதெல்லாம் இலாப வெறி கொண்ட அமெரிக்க முதலாளிகள் அந்த சொல்லை அக்கறையோடு பயன்படுத்துகிறார்கள். பெரியார் மக்களுக்காக வாழ்ந்த தலைவர். பெரியார் கருத்துக்களை மட்டும் மக்களுக்கு தரவில்லை. தன்னுடைய சொத்துக்களை, மக்கள் அன்பளிப்பாக கொடுத்தது மட்டுமல்ல, வழி வழியாக தனக்கு வந்த பரம்பரை சொத்துக்களையும் மக்களுக்கு ஆக்கிவிட்டுப் போன தலைவர். சொத்துக்களையே மக்களுக்கு விட்டுச் சென்ற தலைவருடைய கருத்துக்களை மக்களுக்குக் கொண்டு போய் சேர்க்கக் கூடாது என்றால் (சிரிப்பு, கைதட்டல்) நமக்கு அதிசயமாக கேவலமாக இருக்கிறது. அதைப் பற்றி நமக்கு கவலையில்லை. பெரியார் தொண்டன் எப்போதும் எதைச் செய்தாலும் சட்ட விரோதமா என்று பார்ப்பதில்லை. ஆனால், நியாய விரோதமாகச் செய்ய மாட்டான். (கைதட்டல்) 1925 இல் சுயமரியாதை இயக்கம் என்று தொடங்கினார். காங்கிரசிலிருந்த போதே ‘குடிஅரசை’ தொடங்கியவர் பெரியார். ‘குடிஅரசை’ காங்கிரசிலிருந்தபோதே 6 மாதம் நடத்தினார். தொடங்கிய போதே பல நிலையில் தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறார். காந்தியை மிகப் பெரிய தலைவராகப் போற்றியவர், பின்னர் இகழ்ந்திருக்கிறார். 10-வது விடுதலை நாளை எப்படிக் கொண்டாட நினைத்தார்னா, காந்தி சிலையை உடைக்கப் போறேன். காந்திப் படத்தை எரிக்கப் போறேன், இந்த நாட்டை இப்படியெல்லாம் ஆக்கி வைச்சவர் அவர்தான் என்ற கோபம். கதரைப் பேசிய பெரியார் கதர் என்பது காதொடிந்த ஊசி அளவுக்கும் பயன்படாத திட்டம் என்று சொன்னார். பல விதத்திலும் தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறார். ஆனால் சமுதாய சமத்துவம் என்ற புள்ளியில் மட்டும் ஒரேபிடிவாதமாக நின்று சமுதாயத்தில் சமத்துவம் வரவேண்டும். எல்லா மனிதர்களும் சமமாக இருக்க வேண்டும். அதுதான் இந்த தமிழ்நாட்டில் இந்திய நாட்டிற்கும் முதல் தேவை. அதற்கான முயற்சிகளை நான் எடுப்பேன் என்பதில் அவர் இறுதி வரை உறுதியாகவே இருந்தார். பெரியார் பொதுவுடமை பேசினார். அரிச்சுவடி படித்து விட்டு பி.ஏ. படியுங்கள் என்று சொன்னார். பொதுவுடைமை வரனும்ன்னா மக்களை சமமாக்குவோம். சமத்துவமான சமுதாயத்தில் தான் பொதுவுரிமை கொண்ட சமுதாயத்தில்தான் பொதுவுடமை நிலை நிறுத்த முடியும். இல்லையென்றால் உரிமை மிகுந்தவன் கைக்கு எல்லாம் போய் சேர்ந்து விடும். எனவே சமத்துவமான சமுதாயத்தை உண்டாக்குவதில் பெரியார் பல்வேறு கருத்துக்களை முன் வைத்தார். அவரோடு ஒத்த கருத்துள்ள அம்பேத்கர் வட நாட்டிலே பேசினார். இரண்டு பேரும் ஒரே கருத்துகளை பேசினர்.

‘குடிஅரசு’ ஏடு பதிப்பிக்கிறபோது 1926 இல் செப்டம்பரில் பெரியார் தாழ்த்தப்பட்டோருக்கென தனித் தொகுதிகள் வேண்டும் என்று பேசுகிறார். இது தேவை என்று சொல்கிறார் பெரியார். ஒவ்வொரு நிலையிலும் பல கருத்துகளை எடுத்து வைக்கிறார். அது மக்களிடம் போனால் தானே தெரியும். சமுதாய இழிவு ஒழிப்பு என்பதே தீண்டாமை ஒழிப்பில் ஒரு கூறு. 1926 ஆம் ஆண்டில் பார்ப்பனர் அல்லாதார் மாநாடு என்று டிசம்பரில் கூட்டுகிறார். அப்போது எல்லா பார்ப்பனரல்லாதாரையும் அழைக்கிறார். அழைப்பிலேதான் பெரியார் எழுதினார். கட்சியெல்லாம் பார்க்க வேண்டாம் வாருங்கள், எல்லோரும் பேசுவோம், சமுதாயம் மாறுவதற்கு என்ன செய்யலாம், பேசுவோம் என்று சொன்னபோது தான் பெரியார் சொன்னார். பார்ப்பனரல்லாதார் என்றால் நூற்றுக்கு 5 பேரான மிராசுதாரர்கள், மிட்டாதாரர்கள், வக்கீல்களை கொண்டதல்ல. 95 பேரை உள்ளடக்கிய சமுதாயம் தான் பார்ப்பனரல்லாத மக்கள் சமுதாயம். நீங்கள் 5 பேருக்காக பேசுகின்றீர்களா? 95 பேருக்காக பேசுகின்றீர்களா என்று மக்கள் உன்னிப்பாக கவனிக்கிறார்கள் வாருங்கள் பேசுவோம் என்றார், பெரியார்.

அந்த மாநாட்டில் முன் மொழிந்த தீர்மானத்தில் ஒன்று தான் ‘இந்துக்கள் என்று சொல்லப்படுகிற எல்லோருக்கும் கோவில் பிரவேசத்தில், பூசையில், தொழுகையில் சம உரிமை வேண்டும்’ என்ற தீர்மானம். அதைத் தொடர்ந்து பேசி வந்த பெரியார், இறுதிப் போர் முழக்கத்தில் அதையே முன் மொழிந்தார்.

பெரியார் சொல்லுவார் பத்திரத்தைக் கொடுத்து படிக்காமலே கையெழுத்துப் போடு என்று சொன்னால் எவனாவது போடுவானா? வேதத்தை, சாஸ்திரத்தைப் படிக்காதே, இந்துவாக இரு என்றால் நான் எப்படி இந்துவாக இருப்பேன் என்று கேட்டவர் பெரியார். (கைதட்டல்) அதை உடைத்து விட்டு வெளியே வாருங்கள். நம்மை இழிவு படுத்துகிற மதத்தை விட்டு வெளியே வாருங்கள். இதை ஒரு கூறாக எடுத்துத்தான் இறுதி உரையில் தோழர் இயக்குனர் பிரபாகரன், இந்த ஒலி-ஒளி நாடாவைக் கொண்டு வந்துள்ளார்.

பெரியார் அறிஞர்களுக்காக எழுதியவர் அல்ல. பாமர மக்களுக்காக பேசியவர். மக்கள் எப்படி உள்வாங்குவார்கள் என்பதைப் புரிந்து கொண்டு, மக்களிடம் எடுத்துச் சொன்னார். பெரியாரின் இந்தக் கருத்துகளை பெரியாரே பேசுவதுபோல் அவரது மொழியில் மக்கள் விரும்பி பார்க்கிற முறையில் இயக்குநர் பிரபாகரன் எடுத்திருக்கிற இந்த சீரிய முயற்சியை நாம் தொடர்ந்து ஆதரித்துப் பாராட்ட வேண்டும். நாம் வேலு பிரபாகரனை பாராட்டுவோம். இதை அவர் தொடர்ந்து செய்ய வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கிறோம். அவர் எழுதிய புத்தகங்களை 20 பேர் தான் படித்திருப்பார்கள் என்று சொல்லுகிறார்கள். பெரியார் ‘குடிஅரசில்’ எழுதுகிறார், இப்பொழுது நம்மிடையே படித்தவர்கள் இந்தியாவில் 1927 இல் கல்வி பெற்றவர்கள் விழுக்காடு 7 சதவீதம் தான். 7 சதவீதம் பேர் மட்டுமே படித்தவர்களுக்கு ஏடு நடத்தி என்ன செய்ய முடியும் என்று பெரியார் அஞ்சவில்லை. பெரியார் தமிழில் மட்டுமல்ல, ஆங்கிலத்திலும் ஏடு நடத்தினார். 1928 இல் ‘ரிவோல்ட்’ ஏட்டை தொடங்கி இரண்டு ஆண்டு நடத்தினார். ஏன் என்றால் பிற மாநிலங்களுக்கு அந்த செய்திகள் போக வேண்டும். இங்கு நடக்கும் செய்தி அங்கேயும் போக வேண்டும். அப்படிப்பட்ட எழுச்சியும், போராட்டங்களும் அங்கேயும் நிகழ வேண்டும் என்ற நோக்கத்தோடு ‘ரிவோல்ட்’ என்ற ஏட்டை ரஷ்யா புரட்சி நாளில் தொடங்கினார். இரண்டாம் ஆண்டில் பெரியார் ரிவோல்ட்டில் எழுதுகிறார், நாம் சென்ற ஆண்டு உலகம் முழுக்க வியப்போடு பாராட்டிக் கொண்டிருக்கிற ரஷ்யப் புரட்சி நாளில் இந்த ஏட்டை துவக்கினேன் என்று தலையங்கம் எழுதுகிறார். இப்படி எவ்வளவோ முயற்சிகள் செய்த பெரியாரை, எந்தெந்த வழிகளில் முடியுமோ அந்தந்த வழிகளில் எல்லாம் மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும். பல பேர் முயன்றிருக்கிறார்கள். புரட்சிக் கவிஞர் கவிதைகளாகக் கொண்டு போனார். பேச்சின் வழியாக பட்டுக்கோட்டை அழகிரி போன்றவர்கள், எழுத்தின் வடிவாக குத்தூசி குருசாமி, கலை வடிவில் நடிகவேள் எம்.ஆர். ராதா என்று மக்களிடம் கொண்டு போனார்கள்.

பெரியாரை என்றால் தனி மனிதரைப் போற்றுவதல்ல; பெரியார் என்பவர் தனி மனிதரல்ல; பெரியாரை அவருடைய கருத்துகளுக்காக மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். 100-க்கு 90 பேருக்கு உள்ள கடவுள் நம்பிக்கையை, மகாபாரத, இராமாயண நம்பிக்கையை பேசியவர்தான் ராஜாஜி, வியாசர் விருந்து, சக்கரவர்த்தி திருமகன் என எழுதினார். இந்து மதத்தைப் பாராட்டி, கடவுள் நம்பிக்கையைப் பேசியவர். ஆனால், பெரியார் 100க்கு 98 பேருக்கு எதிராக நாத்திகம் பேசியவர். பெரியார் இராமனை செருப்பால் அடித்தார். தெருவில் பிள்ளையாரைப் போட்டு உடைத்தார். இதைப் பார்த்தப் பின்னாலும், இவர் எதைச்செய்தாலும் நமக்காகச் செய்கிறார் என்று எல்லா மக்களும், கடவுள் நம்பிக்கை உள்ள தமிழர்களும் உணர்ந்தே இருந்தார்கள். நமக்கு உடன்பாடான கடவுள், மதக் கருத்தைப் பேசினாலும் இராஜாஜி நமக்கு எதிரானவர்தான் என்று தமிழர்கள் புரிந்திருந்தார்கள். நாம் கொண்டிருக்கிற நம்பிக்கைக்கு எதிராக பேசினாலும், நடந்து கொண்டாலும் பெரியார் நமக்கான மனிதர் என்பதை தமிழர்கள் புரிந்திருந்தார்கள். அந்த புரிதலை விரிவாக்க இப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபட்டிருக்கிற அருமைத் தோழர் பிரபாகரன் அவர்களைப் பாராட்டுகிறோம். இப்படிப்பட்ட முயற்சிகளை அவர் தொடர வேண்டும். அதன் வழியே பெரியாரியலை மக்களிடம் கொண்டு போய் சேர்த்து ஒரு சமத்துவ சமுதாயத்தை உண்டாக்குவதில் தன்னுடைய கடமையை ஆற்ற வேண்டும் என்கின்ற என் ஆவலை வெளிப்படுத்திக் கொள்கிறேன். ●

# "வர்ணாஸ்ரம" த்துக்காக துப்பாக்கி தூக்கிய

# வாஞ்சிநாதன் தேசத் தியாகியா?

ஆஷ் துரையை சுட்டுக்கொன்றுவிட்டு, தன்னையும் சுட்டுக் கொண்ட வாஞ்சிநாதன் சுதந்திரப் போராட்ட தியாகிகள் வரலாற்றில் சேர்க்கப்படுகிறார். அண்ணா முதலமைச்சரான வுடனேயே வாஞ்சிநாதன் மனைவிக்கு பென்ஷன் வழங்க வந்த போது பெரியார் அதை கேள்விக்கு உட்படுத்தினார். இப்போது வாஞ்சிநாதனின் கூட்டாளியின் மகள் கோதையம்மாள் என்பவருக்கு இடையில் நிறுத்தப்பட்ட தியாகி பென்ஷனை வழங்க முதலமைச்சர் கலைஞர் உத்தரவிட்டுள்ளார். மாதம் ரூ.2000 சிறப்பு நேர்வாக் கருதி வழங்கப்பட இருக்கிறது. அத்துடன், பார்ப்பனர்களைத்தாம் மிகவும் மதித்துப் போற்றி வருவதாக நீண்ட கடிதத்தையும் கலைஞர் பூரிப்போடு 'முரசொலி'யில் எழுதியிருக்கிறார். ஏழ்மையில் உழலுவோருக்கு உதவிடுவதை மனித நேய உணர்வுள்ளவர்கள் எதிர்க்க மாட்டார்கள். அது வேறு; ஆனால், வர்ணா ஸ்ரமத்துக்காக துப்பாக்கியைத் தூக்கிய வாஞ்சி நாதனை தேசத் தியாகிகளாக்கினால், அதே நியாயம் கோட்சேவுக்கும் பொருந்தும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

பிரிட்டிஷ் ஆட்சியில் நெல்லை மாவட்ட ஆட்சி யாளராக இருந்த ஆஷ்துரை, அம்மாவட்டத்தில் தீண்டாமைக்கு உட்படுத்தப்பட்ட அருந்ததி சமூகத் தினரை சமமாக மதித்தார். தனது அலுவலகத்தில் நிலவிய தீண்டாமையை ஒழித்தார். அலுவலகத்தில் அனைவரும் ஒரே இடத்தில் அமர்ந்து சாப்பிட வேண்டும். ஒரே குடத்தில் தண்ணீர் எடுத்து குடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். குற்றால அருவிகளில் தெய்வங்களும், அவருக்கு பூசை நடத்தும் "பிராமணர்களும்" மட்டும் தான் குளிக்க வேண்டும் என்ற சாதித் தடையை நீக்கி அருந்ததி யினர் உட்பட அனைவரும் குளிக்க ஆணையிட்டார். தானும் அதே அருவியில் குளித்தார். ஒரு முறை தனியாக வீதியில் ஒடுக்கப்பட்ட சாதியைச் சார்ந்த பெண் பிரசவ வலியில் துடித்த போது, அவ்வழியாக வந்த ஆஷ்துரையும், அவரது மனைவியும், அப் பெண்ணை தங்கள் வண்டியில் ஏற்றி, அவசரமாக மருத்துவமனைக்குக் கொண்டு போனார்கள். அப்போது பார்ப்பன தெரு வழியாக செல்ல வேண்டியிருந்தது. ஆஷ்துரையின் இத்தகைய நட வடிக்கைகளால் உயர்சாதியினரான பார்ப்பனர் களும், வெள்ளாளர்களும் ஆத்திரமடைந்தனர்.

இதன் காரணமாகத்தான் ஆஷ் துரையை சுட்டுக் கொன்றனர். அப்போது வழக்கில் குற்றம்சாட்டப் பட்டவர்கள் பார்ப்பனர்கள், வெள்ளாளர்களாக மட்டுமே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் அனைவருமே ஆஷ் துரை தீண்டாமைக்கு எதிராக செயல்பட்ட தென்காசி, செங்கோட்டைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். இந்தக் கொலையில் குற்றம் சாட்டப்பட்ட ஹரிஹரன், வேம்பு, மகாதேவர், பிச்சுமணி என்ற வெங்கடாசலம், தரும ராசன், வெங்கடேசுவரன் ஆகிய அனைவரும் பார்ப் பனர்கள். குற்றம்சாட்டப்பட்ட டி.என்.சிதம்பரம், முத்துக்குமாரசாமி, சாவடி அருணாச்சலம், அழகப்பன் ஆகியோர் தென்காசி, செங்கோட்டை யைச் சேர்ந்த வெள்ளாளர்கள்.

இதுவே - ஆஷ் மீதான வெறுப்புக்கு காரணம் - சாதி வெறிதான் என்பதற்கு சான்றாகும்.

ஆஷ்துரையை சுட்டுக் கொன்றுவிட்டு, தன்னையும் சுட்டுக் கொண்ட வருணாஸ்ரம வெறி கொண்ட பார்ப்பனர் வாஞ்சிநாதன் சட்டைப் பையில் இருந்த கடிதமே கொலைக்கான பார்ப்பன வர்ணாஸ்ரம ஆதரவுப் பின்னணியை விளக்கு வதற்கான மற்றொரு சான்றாகும். வாஞ்சிநாதன் சட்டைப் பையில் எழுதி வைத்திருந்த கடிதத்தை அப்படியே இங்கு தருகிறோம்:

*"ஆங்கிலச் சத்துருக்கள் நமது தேசத்தைப் பிடுங்கிக் கொண்டு,* ***அழியாத சனாதன தர்மத்தைக்*** *காலால் மிதித்துத் துவம்சம் செய்து வருகிறார்கள். ஒவ்வொரு இந்தியனும் தற்காலத்தில் தேச சத்துருவாகிய ஆங்கிலே யரைத் துரத்தி தர்மத்தையும், சுதந்திரத்தையும் நிலைநாட்ட முயற்சி செய்து வருகிறான். எங்கள் ராமன், சிவாஜி, கிருஷ்ணன், குரு கோவிந்தர், அர்சுனன் முதலியவர் இருந்து வந்த தேசத்தில் கேவலம்* ***கோமாமிசம் தின்னக் கூடிய ஒரு மிலேச்சனாகிய ஜார்ஜ் பஞ்சமனை*** *முடிசூட்ட உத்தேசம் செய்து கொண்டு பெரும் முயற்சி நடந்து வருகிறது. அவன் எங்கள் தேசத்தில் காலை வைத்த உடனேயே அவனைக் கொல்லும் பொருட்டு 3000 மதராசிகள் பிரதிக்ஞை செய்து கொண்டிருக் கிறோம். அதைத் தெரிவிக்கும் பொருட்டு அவர்களில் கடையோனாகிய நான் இன்று இச்செய்கை செய்தேன்.* ***இது தான் இந்து ஸ்தானத்தில் ஒவ்வொருவனும் செய்ய வேண்டிய கடமை.***

**இப்படிக்கு**
**ஆர். வாஞ்சிநாதன்**

இப்படி வர்ணாஸ்ரமத்துக்கு ஆதரவாக கடிதம் எழுதி வைத்துவிட்டு தீண்டாமை வெறியோடு துப்பாக்கியைத் தூக்கியவர்களுக்கு எல்லாம் இதே பார்ப்பனியத்தை எதிர்த்து வந்த திராவிடர் இயக்கத் தின் ஆட்சி ஏற்பு வழங்கி "பெருமை"யடைவதுதான் வேடிக்கை!

தமிழகத்தின் தேசபக்திக்கு குத்தகை எடுத்துள்ள ராஜீவ் மரணத்துக்காக காலம் முழுவதும், அழுது புரண்டுக் கொண்டிருக்கும் காங்கிரசார் கோட்சே கொள்கை வழியில் செயல்பட்ட வாஞ்சிநாதனை தேச பக்தர்களாகக் கூறி பூரிக்கிறார்கள்!

எது தேச பக்தி? எது தேசியம்? எது தேச விரோதம்? என்பவற்றை எல்லாம் பார்ப்பனர்களும், பார்ப்பனியமும் தான் தீர்மானிக்கிறது; அதை ஏமாளித் தமிழினம் வழி மொழிகிறது! அந்தோ!

**- இராசேந்திரன்**

# தமிழர் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதிய திட்டம்?

உடுமலைப்பேட்டையில் 27.11.2008 வியாழன் மாலை 6 மணிக்கு ஈழ ஆதரவுப் பொதுக் கூட்டத்தை கழகம் நடத்தியது. உடுமலை நகராட்சி பத்மஸ்ரீ திருமண மண்டபத்தில் திறந்த வெளியில் நடந்த பொதுக்கூட்டத்திற்கு கழகத்துடன் கொங்கு மண்டல ஆய்வு மையம், உடுமலை தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்பு களும் இணைந்து செயல்பட்டன. கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட் டிணன் தலைமையில் நடந்த கூட்டத் தில் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் சிறப்புரையாற்றினார்.




நகர கழகத் தலைவர் யாழ். நடராசன், உடுமலை தமிழ்ச் சங்கம் இல. கருணாநிதி, கொங்கு மண்டல ஆய்வு மையம் இரா. இரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழக மாவட்டச் செயலாளர் கா.கருமலையப்பன் வரவேற்புரையாற்றி னார்.

தமிழர் தேசிய இயக்க பொதுச் செயலாளர் பரந்தாமன், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் ஆர்.டி. மாரியப்பன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வட்டாரச் செயலாளர் கே.சி.இராதா கிருட்டிணன், தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் இராமனோகரன், பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட இளைஞரணி செயலாளர் உ.ம.இராசேந் திரன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நகரச் செயலாளர் சுல்தான், ம.தி.மு.க. நகரச் செயலாளர் நா.லோகநாதன், ஒன்றியச் செயலாளர் வி.இராசசேகரன், ஆதித் தமிழர் பேரவை மாவட்டத் தலைவர் பெரியார் தாசன், கோவை வடக்கு மாவட்ட கழகத் தலைவர் துரைசாமி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

சிறப்புரையாக இலங்கை நாடாளு மன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக எரிகிறது தமிழீழம்! நெருப்பின் நடுவில் தமிழினம்!! என்கிற தலைப்பில் ஈழ மக்களின் துயரத்தையும், போராட்டத்தையும் விளக்கிப் பேசினார். மேலும் அவர் பேசுகையில், "இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டு இங்கு தமிழகத் திலுள்ள ஆறரை கோடி மக்களும் கொதித்தெழுந்துள்ளனர். இது ராஜ பக்சேவை அச்சம் அடையச் செய் துள்ளது. தமிழக மக்களின் எழுச்சி இலங்கைத் தமிழர்களை மகிழ்ச்சி யடையச் செய்துள்ளது. பேராளிகளை உற்சாகப்படுத்தியுள்ளது.

இலங்கையில் பொது மக்களைக் காப்பாற்ற போர் நிறுத்தம் கேட்கிறோம். ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்று இலங்கை அரசு சொல்கிறது. உலகில் எந்தப் போராளிகளாவது அரசியல் தீர்வு ஏற்படாத நிலையில் ஆயுதங்களை கீழே போட்டது உண்டா?

இலங்கையில் போர் நிறுத்தப்பட வேண்டும் என்று இந்திய அரசு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இன்னும் 10 நாட்களுக்கு கேட்போம். அதன் பிறகு கேட்கப் போவது இல்லை. அதன் பிறகு தமிழர் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த இலங்கை எம்.பி.க்கள் 22 பேரும் இந்திய மண்ணில் கூடி பேசி, டிசம்பர் 10 ஆம் தேதி முக்கிய முடிவை பகிரங்கமாக அறிவிப்போம். அந்த அறிவிப்பு சுதந்திர தமிழீழ பிரகடனமாக கூட இருக்கலாம்.

விடுதலைப் புலிகள் இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பு அரண். விடுதலைப் புலிகள் வேறு, இலங்கைத் தமிழர்கள் வேறு என்று பிரித்துப் பார்க்காதீர்கள். புலிகளை ஒரு போதும் தோற்கடிக்க முடியாது என்று பேசினார்.

கழக மாநில தகவல் தொடர்பாளர் ந.பிரகாசு, தலைமை செயற்குழு உறுப்பினர் அங்கமுத்து, மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர் சு.சிவானந்தம், பொருளாளர் கதிரவன், உடுமலை ஒன்றியச் செயலாளர் கோ.விசுவநாதன், பொருளாளர் சு.அரிதாசு, நகரப் பொருளாளர் மு.வேல் முருகன், காரத் தொழுவு மயில்சாமி, ஜோத்தம்பட்டி மோகன், சின்னவீரம் பட்டி சிவகுமார், தமிழ் வேந்தன், குமரலிங்கம் பீட்டர் உள்ளிட்ட கழகத் தோழர்களும் பொது மக்களும் பெருந் திரளாகக் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில், "எமக்காக வும் பேசுங்களேன்" என்ற ஈழத் தமிழர் கண்ணீர் காட்சிகள் அடங்கிய குறுந் தகடும், ஈழத் தமிழர்களுக்கு ஆதர வாக திரைப்படத் துறையினர் இராமேசு வரத்தில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேச்சுக்கள் அடங்கிய குறுந்தகடும் திரை யிடப்பட்டது. இறுதியில் நகர கழகச் செயலாளர் இரா.பாக்கியநாதன் நன்றி கூறினார். மழைத் தூறல் விழுந்து கொண்டிருந்த போதும் நிகழ்ச்சி முடியும் வரை பொது மக்கள் காத்திருந்து கூட்டத்தைக் கேட்டனர்.

## பிறந்த நாள் நன்கொடைகள்

கடலூர் கூத்தப்பாக்கம் செல்வம் அரிசி ஆலை உரிமையாளர் சுபன்னீர் செல்வம் பேரக்குழந்தை ச.எழில்வேந்தன், 26.10.08 அன்று பிறந்த தின நினைவாக 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கியுள்ளார்.

சென்னை கேசவன் பூங்கா பகுதியைச் சார்ந்த கழகத் தோழர் ஏ.விஜய இரணியன் - அன்னலட்சுமி ஆகியோரின் குழந்தை இனியவன் (எ) தமிழ்ச் செல்வனின் முதலாம் ஆண்டு பிறந்த நாள் 6.11.2008 அன்று மாலை 6 மணியளவில் கொண்டாடப்பட்டது. கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், அன்பு தனசேகர், எ.கேசவன், சி.அருள்தாசு உட்பட தோழர்கள் கலந்து கொண்டனர். புரட்சிப் பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ.500 வழங்கப்பட்டன.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# 14 நாட்கள் - 3200 கிலோ மீட்டர் - 145 ஊர்கள்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

**படங்கள் ஒட்டப்பட்ட ஊர்தி**

பயணம் சென்ற ஊர்தியின் மூன்று பக்கங்களிலும் ஈழத் தமிழர்களின் இன்னல்களை விளக்கும் புகைப் படங்கள் ஒட்டப்பட்டு, வாசகங்களும் இடம் பெற்று இருந்தன. 'நாடு இருந்தும் அகதியாய், வீடு இருந்தும் அனாதையாய்... சிங்கள இனவெறி அரசே போரை உடனே நிறுத்து' என்ற வாசகம் பொறித்த பதாகை ஊர்தியில் கட்டப்பட்டிருந்தது. பரப்புரை ஊர்தி ஓரிடத்தில் நின்றதும் பொதுமக்கள் ஊர்தியை சூழ்ந்து நின்று படங் களையும், முழக்கங்களையும் பார்த்து, பயணக் குழுவினரிடம் கேள்விகள் கேட்கத் தொடங்கி விடுவார்கள். சிங்கள அரசுக்கு எதிராக உணர்ச்சி யுடன் தங்களது கருத்துகளைப் பதிய வைத்தார்கள். சில இடங்களில் உணர்வு மிகுதியால் கண்ணீர் சிந்திய பொது மக்களும் உண்டு. பெரும்பாலான பகுதிகளில் பெரியார் திராவிடர் கழகம் தான் பயணக்குழுவை வரவேற்று ஏற்பாடுகளை செய்தது.

பெரியார் திராவிடர் கழகம் வர வேற்று, நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த ஊர்கள் : சீர்காழி, கொள்ளிடம், வைத்தீஸ்வரன் கோவில், மயிலாடு துறை, கும்பகோணம், திருச்சி, பெரம் பலூர், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், வாணியம்பாடி, காவேரிப்பட்டினம், கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டம் (5 பகுதிகள்), சேலம், நாமக்கல், பரமத்தி வேலூர், கரூர், வெள்ளியனை, திண்டுக் கல், வாடிப்பட்டி, மதுரை, தூத்துக்குடி, உசிலம்பட்டி, ஒட்டன்சத்திரம், பழனி, ஆயக்குடி, நெய்க்காரப்பட்டி, மானூர், தாராபுரம், காங்கயம், படியூர், செங்கம் பள்ளி, குன்னத்தூர், கொளப்பனூர், கோபி, அருக்குளி, நம்பியூர், சேவூர், அவினாசி, திருப்பூர் (5 இடங்கள்), பல்லடம், கணியூர், உடுமலை, பொள் ளாச்சி, கோவில்பாளையம், கிணத்துக் கடவு, சிங்கா நல்லூர் மற்றும் கோவை நகரம்.

பிற அமைப்புகள் ஏற்பாடு செய்த ஊர்கள்: பண்ருட்டி (இளைஞர் இயக்கம்), கடலூர், கடலூர் துறை முகம் (இள. புகழேந்தி, தி.மு.க. மாநில மாணவரணி அமைப்பாளர்), சிதம்பரம் (மக்கள் போராட்ட மய்யம், கென்னடி), தஞ்சாவூர் (நகரம்) (தஞ்சை இரத்தின கிரி, காமராஜ்), ஒரத்தநாடு, பாப்பாநாடு, கரம்பயம் (தாய்த்தமிழ்ப் பள்ளி காமராஜ்), பட்டுக்கோட்டை (தமிழின உணர் வாளர் கூட்டமைப்பு), வடகாடு (புதுக் கோட்டை) (விஜய் ஆனந்த்), புதுக்கோட்டை (தி.மு.க. சுப. சரவணன்), திருவண்ணாமலை (3 இடங்கள்) (திராவிட இயக்க தமிழர் பேரவை மங்கலம் பிரபாகரன்), செஞ்சி (திரு நாவுக்கரசு, தி.மு.க.), மொடையூர் (2 இடங்கள்), (இளைஞர் இயக்கம் துரை, தி.மு.க.), செக்கடிக்குப்பம், வேலூர், காட்பாடி (4 இடங்கள்) (சிங்கராயர், தி.இ.த. பேரவை), பள்ளிகொண்டா, அகரம் சேரி (சுரேஷ், தி.மு.க.), பொன்னேரி (அ.மகேந்திரன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை), சோலையார் பேட்டை (சோலைப் பிரியன், தமிழர் பேரவை), திருப்பத்தூர் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மணி மொழி), குஜிலியம்பாறை (கு.சே. வீரப்பன், தமிழர் தேசிய இயக்கம்), பரமக்குடி (மறவர்கோ, திராவிட இயக்க தமிழர் பேரவை), ஒட்டன் சத்திரம் (மோகன், தி.மு.க.), பல்லடம் (மா. திருமூர்த்தி, பெரியார் உடற்பயிற்சி மய்யம்).

**நெகிழ்ச்சியான தருணங்கள்**

திண்டிவனத்தில் பழம் விற்பனை செய்து கொண்டிருந்த ஒரு பெண்மனி பை நிறைய பழங்கள் தந்து, நன்றாக பிரச்சாரம் செய்யுங்கள் என்று கூறி வழியனுப்பினார். அதே போல் பல்லடத்தில் வாழைப்பழம் விற்றுக் கொண்டு இருந்த ஒரு வியாபாரி இரண்டு பை நிறைய வாழைப்பழம் தந்து, சிங்கள இனவெறி அரசின் தோலை உரியுங்கள் என்று பாசத் துடன் கூறினார்.

வந்தோருக்கு இலவசமாக வழங்கினார். எந்த இடத்திலும் நிதி திரட்டுவது முழுமையாக தவிர்க்கப்பட்டது. ஆனாலும் பரமக்குடியில் ஆசிரியர் ஒருவர் பயண செலவுக்கு ரூ.500 அன்பளிப்பு அளித்தார்.

செங்கம்பள்ளி என்ற ஊரில் பிரச்சாரம் முழுமையும் காரில் இருந்த வாறே கேட்டுக் கொண்டு இருந்த பெண் மணி ஒருவர் அன்புடன் அழைத்து பயணச் செலவுக்கு அன்பளிப்பாக ரூ.500 வழங்கினார். கடலூர், திருச்சி ஆகிய ஊர்களில் சால்வையும், திருவண்ணாமலையில் பயணக் குழு வினருக்கு பெரியார் படமும் நினைவாக







சித்தலக்கரை என்ற ஊரில் அய்யப் பன் கோவில் உள்ளது. பக்தர்களுக் கென பேரீச்சம் பழம் விற்பனை அங்கு நடக்கும். தேநீருக்காக நாங்கள் சென்ற போது ஊர்தியிலுள்ள படங்களைப் பார்த்து ஒரு கடைக்காரர் இரண்டு பேரீச்சை பழ பைகளை அளித்து நெகிழ்ச்சியுடன் வழி அனுப்பினார்.

அகரம் சேரியில் தி.மு.க. இளைஞர் அணி ஒன்றிய அமைப்பாளர் அனை வருக்கும் கைத்தறி துண்டு அணிவித்து, பிஸ்கட் வாங்கி கொடுத்து இரவில் படுத்துறங்க 20 பாய்கள் கொடுத்தார். இப்பாய்கள் பயணத்தில் இரவு தங்கு மிடங்களில் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. ராசிபுரத்தில், பா.ம.க. கட்சித் தொண்டர் அனைவருக்கும் தேநீர் வழங்கி, பழுதடையும் நிலையில் இருந்த ஒலி பெருக்கியை அக்கறை யுடன் சரி செய்ய உதவினார்.

நாமக்கல் பேருந்து நிலையத்தில் பிரச்சாரத்தை செவிமடுத்த ஈழத் தமிழ் இளைஞர் ஒருவரும், அவருக்கு உதவும் கிறிஸ்தவ அருள் சகோதரி ஒருவரும் கண்ணீர் மல்க தோழர்களை கட்டிப் பிடித்து நன்றி தெரிவித்தனர். அதே போல் வாணியம்பாடி, கோபால்பட்டி ஆகிய ஊர்களிலும் ஈழத் தமிழர்கள் கண்ணீருடன் தங்கள் நன்றியை வெளிப்படுத்தினர்.

வெள்ளியணை என்ற ஊரில், தி.மு.க. தோழர் ஒருவர் "ஒப்பந்தங்களை மீறியது யார்" நூல்களை தமது சொந்த பணத்தில் வாங்கி நிகழ்ச்சிக்கு அளிக்கப்பட்டது.

புதுக்கோட்டையில் பிச்சை எடுத்துக் கொண்டு இருந்த ஒருவர் ரூ.10 அளித்து பெரியார் வாழ்க என்று முழக்கம் எழுப்பி வாழ்த்தினார். சென்ற இடமெல்லாம் பேராதரவு கிடைத்தது.

பயணக் குழுவினர் 13 இடங்களில் இரவு தங்கினர். இதில் ஒரு இடம் கூட அவர்கள் சொந்த செலவில் இல்லை. வரவேற்ற தோழர்களே அவர்கள் செல வில் ஏற்பாடு செய்தனர். அதுபோல் 14 நாட்கள் 42 வேளை உணவு அருந்த நேரிட்டது. இதில் இரண்டு வேளை உணவு மட்டுமே பயணக் குழுவின் செலவு 40 இடங்களிலும் பெரியார் திராவிடர் கழகம் உள்ளிட்ட அனைவரின் ஏற்பாடேயாகும்.

இப்பயணம் மிகக் குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு தொடங்கிய போதிலும் தமிழக மக்களை நேரடியாக சந்தித்து, அவர்களின் உணர்வுகளை நேரடியாக அறியவும், அவர்களிடம் ஈழத் தமிழர் போராட்டத்துக்கு நேரடியாக ஆதரவு திரட்டவும் மிகவும் பயன்பட்டது. ஈழத் தமிழர்களுக்கு உதவ வேண்டும் என்ற உணர்வை கட்சி பேதமின்றி இணைக்க வைத்தது.

முன்னதாக கோவை சிங்கா நல்லூரில் தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பிலும், கழகம் சார்பிலும், பிரச் சாரப் பயணக் குழுவினருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. சிங்கை பேருந்து நிலையம் முன் பரப்புரை செய்யப்பட்டது.

மேடையில் மறுமலர்ச்சி தி.மு.க. சார்பில் ரூ.1000 பிரச்சாரப் பயணத்திற் காக நிதி அளித்தார்கள்.

அறுவை சிகிச்சை செய்யப்பட்டு ஓய்வில் இருந்த இயக்குநர் மணி வண்ணன், தனது சகோதரி மறைவிற்கு கோவை வந்தவர் பொதுக்கூட்டம் நடப் பதை அறிந்து உடல் நிலையையும் பொருட்படுத்தாது பங்கேற்றுப் பேசி னார்.

ஆயிரக்கணக்கில் பொது மக்களும், தோழர்களும் திரண்டிருந்தனர். கழக வெளியீடுகள் ஏராளமாக விற்பனை யானது.

உடுமலை கழகத் தோழர்கள் நவம்பர் 27-ல் உடுமலையில் நடந்த கூட்டத்தில் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் பேசிய பேச்சின் குறுந்தகட்டையும், ஈழத் தமிழர்களின் கண்ணீர் காட்சிகள் என்ற குறுந்தகட்டையும் ரூ.10-க்கு விற்பனை செய்தார்கள். ஏராளமா னோர் உணர்வோடு வாங்கிச் சென்றனர்.

பயணம் கோவையில் 1.12.08 அன்று நிறைவுபெற்றது. நிறைவு விழா நிகழ்ச்சிக்கு பெரியார் திராவிடர் கழகம் ஏற்பாடு செய்திருந்தது. எழுச்சியுடன் நடந்த பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், திரைப்பட நடிகர் மணிவண்ணன், பொதுச்செய லாளர் கோவை இராமகிருட்டிணன், மருத்துவர் எழிலன், அன்பு தனசேகர், செந்தில் ஆகியோர் உரையாற்றினர்.

அனைவருக்கும் கவிஞர் காசி ஆனந்தன் கவிதை நூல் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. ஒரத்த நாடு பகுதியில் பார்வையிட வந்த தி.க.வினர், பெரியார் திராவிடர் கழகத்தினர் இடம் பெற்றதை அறிந்து ஒதுங்கிக் கொண்டனர். அன்று இரவே பயணக் குழுவினர் மிகுந்த மன நிறைவுடன் சென்னை திரும்பினர். ●

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 12th December 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சி பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 டிசம்பர் 18, 2008 புரட்சி 7 முழக்கம் 51 விலை : ரூ.2.50


## கோவையில் ‘இந்தியா டுடே’வுக்கு செருப்படி

மறைந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் மண்டல் கமிஷன் மூலம் இடஒதுக்கீட்டை அமுல்படுத்திய சமூக நீதிக் காவலரான வி.பி.சிங் மறைவு செய்தியை 17.12.2008 தேதியிட்ட ‘இந்தியா டுடே’ இதழில் வெளியிட்டுள்ளது. அதில் ‘மண்டல் நாயகரான இவர் இந்திய அரசியலில் மாபெரும் சமூக சீரழிவைக் கொண்டு வந்தவர்’ என்று பெரும்பான்மை மக்களுக்கெதிராக அவரை அவமதித்து எழுதியுள்ளது. ‘இந்தியா டுடே’ இதழைக் கண்டிக்கும் வகையில், கோவை செஞ்சிலுவை சங்கக் கட்டிடம் முன்பு, 10.12.2008 மாலை 5 மணிக்கு, பெரியார் திராவிடர் கழகம்,



தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் ‘இந்தியா டுடே’ இதழை செருப்பால் அடிக்கும் போராட்டம் நடத்தப்பட்டது. பெரியார் தி.க. மாநகர தலைவர் ம.ரே.ராசக்குமார் முன்னிலையில் மாநில செயற்குழு உறுப்பினர் வெ.ஆறுச்சாமி தலைமையில் நடந்தது. மாநகர செயலாளர் வே.கோபால், மாநகர அமைப்பாளர் இ.மு.சஜித், அலுவலக பொறுப்பாளர் சா.கதிரவன், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் ந.பன்னீர்செல்வம், சகா.மணிகண்டன், பா.சத்யா, அ.வகாப், இலா. செல்வம், குருசாமி, நேருதாசு மற்றும் தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# இந்திய அரசியலின் அதிசயம் வி.பி.சிங்

*இந்திய அரசியலில் அதிசய மாமனிதராக வந்துதித்தவர் வி.பி.சிங் என்று பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் குறிப்பிட்டார்.*

**விடுதலை இராசேந்திரன் இரங்கலுரை**

24.12.2008 அன்று ‘கீற்று இணைய தளம்’ சார்பில் சென்னை அண்ணா சாலையிலுள்ள ‘புக் பாயின்ட்’ அரங்கில் நிகழ்ந்த வி.பி.சிங் இரங்கல் கூட்டத்தில் விடுதலை இராசேந்திரன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

‘கீற்று இணையதளம்’ ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்ச்சிக்கு நன்றி தெரிவிக்கிறோம். தகவல் தொழில் நுட்பத் துறையில் கால் பதிந்து நிற்கும். தமிழின உணர்வுள்ள இளம் தலைமுறை சமுதாயப் பார்வையோடு ஒரு இணையதளத்தை உருவாக்கி அந்தப் பணியின் எல்லையை மேலும் விரிவாக்கி, ஒரு இயக்கமாக நடத்தி வரும் அவர்களின் சமுதாய உணர்வு எங்களைப் போன்றவர்களுக்கு மிகுந்த நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்துகிறது.

வடநாட்டில் எத்தனையோ தலைவர்கள் உண்டு. இங்கே சகோதரி ஓவியா குறிப்பிட்டதைப்போல் பெரியாரியல் வாதிகளான எங்களுக்கு எந்த வடநாட்டுத் தலைவர் மீதும் அவ்வளவு ஈர்ப்பு ஏற்பட்டதில்லை. அம்பேத்கர் ஒருவரைத் தவிர; எல்லைகளைக் கடந்து தமிழர்களின் இதயத்தோடு ஒன்றிவிட்ட ஒரு தலைவராக வி.பி.சிங் அவர்கள் மட்டுமே தெரிகிறார். இந்திய அரசியலில் இவரைப்போல் ஒரு அதிசயமான மனிதரை நாம் கண்டதில்லை. பார்ப்பன ஊடகங்கள் அவர் மீது கக்கிய கசப்பு ஒன்றே போதும். அவரது பெருமையை அடையாளப்படுத்துவதற்கு இங்கே ‘இந்தியா டுடே’ என்ற பத்திரிகை வி.பி.சிங் மறைவுக்குப் பிறகும் அவரை சிறுமைப்படுத்தி எழுதியிருந்ததைப் பலரும் ஆத்திரத்தோடு கண்டித்தார்கள். அந்தப் பத்திரிகைகள் இப்படி எழுதுவது தான் வி.பி.சிங் மிகச் சரியான மனிதர் என்பதை மீண்டும் உறுதியாக்குகிறது. என்றைக்குமே ஊடகங்களின் வளையத்துக்குள் அவர் வீழ்ந்தது கிடையாது. இந்த நாட்டின் ஊடகங்கள் பற்றிய தெளிவான புரிதல் தந்தை பெரியார் அவர்களைப் போல் வி.பி.சிங்குக்கு இருந்தது. அதை வி.பி.சிங் தனக்கே உரிய மொழியில் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்துக்கு மத்திய அரசு பதவிகளில் 27 சதவீத இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்ததற்காக அவர் பதவியை இழந்தது நமக்குத் தெரியும். நாடாளுமன்றத்தில் அவர் நம்பிக்கை ஓட்டு கிடைக்காமல் பதவியை விட்டு விலகினார். பிரதமராக இருந்தது 11 மாதங்கள் தான். (2.12.89 இல் பிரதமராகப் பதவி ஏற்று 10.11.1990-ல் பதவி இழந்தார்) இரவு வரை ஓட்டெடுப்பு நீண்டு, நள்ளிரவுச் செய்தியில் ‘தூர்தர்ஷன்’ ஆங்கிலச் செய்தியின் பெண் செய்தி அறிவிப்பாளர் ஒருவர் அந்தச் செய்தியை ‘VP Singh voted out of Power’ என்று கூறியபோது அவரின் நா தழுதழுத்து, துயரத்தோடு, அடுத்த வரி செய்தியைத் தொடர முடியாமல் தவித்ததை நாடு முழுதும் லட்சோபலட்சம் மக்கள் பார்த்தனர். வி.பி.சிங் ஒழிந்தார் என்று பார்ப்பன வட்டாரங்களும், இந்துத்துவ சக்திகளும் மகிழ்ச்சிக் கூத்தாடின. அப்போது, ஒரு செய்தியாளர் வி.பி.சிங்கிடம் கேட்டார். “பதவியை இழந்து விட்டீர்கள்; பிரதமர் பதவியை இழக்கப் போவது உங்களுக்கு தெரியும். அந்த பதவியிலிருந்த கடைசி நாளில் உங்கள் மனநிலை எப்படி இருந்தது?” என்று விஷமத்தோடு அந்தக் கேள்வி இருந்தது. அதற்கு வி.பி.சிங் பதில் சொன்னார்: Gentleman, “There is no last date in the Political Calender” (நண்பரே, அரசியல் நாட்காட்டியில் கடைசி தேதி என்று எதுவும் கிடையாது).

மற்றொரு முறை - ஒரு பார்ப்பன செய்தியாளர் விரக்தியின் உச்சிக்குப் போய், அவரிடம் கேட்டார், “நீங்கள் எங்கே சென்றாலும், எங்கே பேசினாலும் - சமூக நீதி - சமூக நீதி என்பதை மட்டுமே தொடர்ந்து பேசி வருகிறீர்களே; வேறு எந்தப் பிரச்சினையுமே உங்களுக்கு தெரியவில்லையா?” என்று கேட்டார். வி.பி.சிங் பதில் சொன்னார், “நண்பரே, நான் பயணிக்கும் இடங்களுக்கெல்லாம் நீங்கள் தொடர்ந்து வரவேண்டும் என்று நான் கட்டாயப்படுத்தவில்லையே” (கை தட்டல்) என்றார். தங்களுக்கு சாதகமான கருத்துக்களை கேள்வியாக்கி, தலைவர்களிடமிருந்து சாதகமான பதிலைப் பெறுவது பார்ப்பன செய்தியாளர்களின் வழக்கமான தந்திரம். அற்பப் பிரச்சினையில் கூட ‘அவாள் நலன்’ அடங்கி இருந்தால், அதை ஏதோ சர்வதேசப் பிரச்சினை போல கேள்வி கேட்பது உண்டு. அத்தகைய தருணங்களில் வி.பி.சிங் தெளிவாக சொல்லியிருக்கிறார், “உங்கள் கருத்துக்களை எனது வாய்க்குள் திணித்து பதில் பெற முயலாதீர்கள்.”

ராஜீவ் அனுப்பிய இந்திய ராணுவம் ஈழத்திலே தமிழினப் படுகொலைகளை நடத்தியபோது, சர்வதேச அளவில் கண்டனங்கள் எழுந்தன. வி.பி.சிங் பிரதமராக இருந்த காலத்தில்தான் இந்திய ராணுவம் திருப்பி அழைக்கப்பட்டது. செய்தியாளர்கள் கேட்டனர், “விடுதலைப்புலிகள் இயக்கத்தை நீங்கள் பயங்கரவாத இயக்கமாகக் கருதவில்லையா?” என்று. வி.பி.சிங் சொன்னார், “எந்த ஒரு இயக்கத்துக்கும் முத்திரைக் குத்துவதற்கான ‘ரப்பர் ஸ்டாம்ப்’ எதுவும் எனது சட்டைப் பைக்குள் இல்லை”. இலக்கிய மொழியிலேயே பதில்கள் தெறித்து வந்தன.

இங்கே நண்பர் ஞானி பேசும் போது, அவரது சிறுநீரகம் பாதிக்கப்பட்டது. மதவெறிக்கு எதிராக பம்பாயில் அவர் உண்ணாவிரதம் இருந்ததால் தான் என்ற வரலாற்றை நினைவுபடுத்தி மதவெறிக்கு பலியானதுதான் வி.பி.சிங் உயிர் என்று, மிகச் சரியாகக் குறிப்பிட்டார். இது பற்றி மேலும் ஒரு செய்தியை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டு, இரண்டு வாரங்களுக்குப் பிறகு முஸ்லீம்களுக்கு எதிரான கலவரத்தை , ‘இந்துத்துவா’ சக்திகள் திட்டமிட்டு தொடங்கின. அப்போது மகாராஷ்டிராவில் பா.ஜ.க., சிவசேனா கூட்டணி ஆட்சி நடந்து கொண்டிருந்தது. ஆட்சியின் ஆதரவோடு இந்தக் கலவரங்கள் நடந்தன. சிவசேனைத் தலைவர் பால்தாக்கரே தனது வீட்டிலிருந்து கலவரங்களுக்கான உத்தரவுகளைப் பிறப்பித்ததையும், சாட்சி சொல்வதற்கு ஒரு முஸ்லீம் கூட உயிருடன் இருக்கக் கூடாது என்று உத்தரவு போட்டதையும் கலவரங்கள் பற்றி விசாரித்த ‘ஸ்ரீ கிருஷ்ணா விசாரணை’ ஆணையத்தின் பரிந்துரை கூறியுள்ளது. அந்தக் காலகட்டத்தில் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தார் வி.பி.சிங். 1993 ஜனவரி முதல் வாரத்தில் கலவரம் தீவிரமானவுடன் சென்னையிலிருந்து பெங்களூர் போய் அங்கே தமது கட்சித்தலைவர்களுடன் கலந்து பேசிவிட்டு, கலவரத்தை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்ற பதைப்பில் நேராக பம்பாய் போகிறார். கலவரத்தை ஆட்சியாளர்களும், மதவெறி வன்முறையாளர்களும் நிறுத்த வேண்டும் என்று

**(3 ஆம் பக்கம்)**

## 5 ஆம் வகுப்புக்கு பொதுத் தேர்வை எதிர்க்காதது ஏன்? ‘ஆலய அன்ன’தானத்துக்கு ‘ஜே’ போட்டது ஏன்?

### திரிபுவாத திம்மன்கள் – யார்? (12)

2001 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் பார்ப்பன ஆட்சி நடந்தபோது, அந்த ஆட்சியின் பிரச்சார பீரங்கியாய் மாறி, ஒவ்வொரு நாளும் ‘அம்மாவுக்கு’ ‘நாமவளி’ பாடுவதையே பெரியார் தொண்டாகக் கருதி செயல்பட்டவர்தான் கி.வீரமணி. பெரியார் கொள்கைக்கு எதிராக எத்தனையோ நடவடிக்கைகளில் ஜெயலலிதா ஈடுபட்டபோது பல நேரங்களில் வாய் மூடி மவுனம் சாதித்தே வந்திருக்கிறார். சில நேரங்களில் பெரியார் கொள்கைக்கு எதிராக ஜெயலலிதாவைப் பாராட்டும் நிலைக்கும் போயிருக்கிறார். ஜெயலலிதா, பா.ஜ.க.வில் நேரடி உறுப்பினராக இல்லாவிட்டாலும், அவர் இந்துத்துவக் கொள்கையில் ஊறிப்போய் நிற்பவர் என்பதே அவரது கடந்தகால வரலாறு. ஜெயலலிதா – மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, பார்ப்பன இந்துத்துவா சக்திகள் மகிழ்ச்சிக் கூத்தாடி வரவேற்ற நிலையிலும் வீரமணி – ஜெயலலிதாவின் – அந்த சட்டத்தை கடுமையாக எதிர்க்கவில்லை. மாறாக, திராவிடர் கழகக் கமிட்டிக் கூட்டங்களில் அந்தச் சட்டத்தை நியாயப்படுத்தி, துரை சக்கரவர்த்தி போன்றவர்கள் கழகத் தலைமையின் ஆணையை ஏற்று பேசியதையும், மதமாற்றத் தடைச் சட்டத்தை ஆதரித்து நீதிபதி வேணுகோபால் ‘விடுதலை’யில் கட்டுரை எழுதியதையும் ஏற்கனவே நாம் இத் தொடரில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இதே போல் ஜெயலலிதா கொண்டு வந்த மற்றொரு திட்டம் தான் ‘ஆலய அன்னதானம்’. கோயிலில், மதியத்தில் இலவச உணவு போடப்பட்டு, கோயிலுக்கு வரும் குழந்தைகளுக்கு வாரம்தோறும் ‘ஆன்மீக வகுப்பு’ நடத்தப்படும் என்று அறிவித்தார். இத்திட்டத்தை தனது சொந்த திட்டமாகக் கருதி, நிதி திரட்டத் தொடங்கினார் ஜெயலலிதா. மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். பள்ளிகளில் சத்துணவுத் திட்டத்தைத் தொடங்கி, திருக்குறள் வகுப்புகளை நடத்த ஆணையிட்டார். ஆனால், ஜெயலலிதாவோ அதற்கு நேர்மாறாக ஆலய அன்னதானத்தை அறிவித்தபோது, காங்கிரஸ் கட்சித் தலைவர்களில் ஒருவரும், சுயமரியாதைக்காரருமான எம்.பி.சுப்ரமணியம், அத் திட்டத்தை எதிர்த்து 22.3.2002 இல் ஒரு அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

*“கோயில்களுக்கு பக்தர்கள் வருவது இல்லை. இதை ஊக்குவிக்கவே, தமிழக அரசு இத் திட்டத்தை வகுத்து செயல்படுத்துகிறது. சமய சார்பற்ற அரசாக செயல்பட வேண்டிய அ.இ.அ.தி.மு.க. அரசே இதை முன்னின்று நடத்துவதையும் செயல்படுவதையும் எப்படி நியாயப்படுத்த முடியும்? ஆண்டிப்பட்டி தேர்தல் பிரச்சாரத்தில் தன்னை மதம் சாதிகளுக்கு அப்பாற்பட்டவர் என்று தமிழக முதல்வர் கூறி வந்தார். இந்தப் பேச்சு என்னவாயிற்று? அ.இ.அ.தி.மு.க. அரசின் இந்த நடவடிக்கை இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள சமய சார்பின்மைக்கு துரோகமாகும்.”*

– இப்படி சுயமரியாதை உணர்வோடு பெரியார் கொள்கைக் கண்ணோட்டத்தில் காங்கிரஸ் கட்சியிலுள்ள ஒரு தலைவரே அறிக்கை வெளியிட்டபோது, வீரமணி ‘விடுதலை’யில் –

*“ஏழை மக்கள், பட்டினி கிடப்போரின் பசித் தீர்க்க, இத் திட்டம் உதவும் என்பதால், இலவச பகல் உணவு திட்டம் என்ற அளவில், இதை வரவேற்கலாம். வறுமை ஒழிப்புப் பணிதான் என்கிற வகையில்”* (23.3.2008 ‘விடுதலை’) என்று தூக்கிப் பிடித்தார். மதக் கண்ணோட்டத்தில் அறிவிக்கப்பட்ட ஒரு திட்டத்தை வறுமை ஒழிப்புக்கண்ணோட்டமாக பெரியார் இயக்கத் தலைவர் வீரமணி பார்த்தபோது, தேசிய இயக்கத்தலைவரோ பெரியார் பார்வையில் மதச்சார்பற்ற கொள்கைக்கு துரோகம் இழைக்கும் திட்டம் என்று மிகச் சரியாகவே பார்த்தார். இது பெரியார் கொள்கைப் புரட்டு அல்லவா? இந்த அன்னதான திட்டம் உட்பட ஜெயலலிதா மேற்கொண்ட பல்வேறு இந்துத்துவா ஆதரவுத் திட்டங்களை முதலமைச்சர் ஜெயலலிதாவை கோட்டையில் நேரில் சந்தித்து தமிழக ஆர்.எஸ்.எஸ். தூதுக் குழு 25.7.2002 அன்று பாராட்டுகளைத் தெரிவித்ததையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

இதேபோல் ஜெயலலிதா ஆட்சியில் தமிழ்நாடு முழுதும் ஆரம்பப் பள்ளிகளில் 5 ஆம் வகுப்புப் படிக்கும் குழந்தைகள் அனைவருக்கும் 10 ஆம் வகுப்புக்கு நடத்தப்படுவதுபோல் பொதுத் தேர்வு நடத்தப்படும் என்ற மிக மோசமான திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டது. ஜெயலலிதா அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்த தம்பித்துரை இத் திட்டத்தை அறிவித்தவுடன், தமிழகமே வெகுண்டெழுந்தது. அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் இத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தபோது வீரமணி மட்டும் அம்மா கோபித்துக் கொள்வார்கள் என்பதற்காக கையைக் கட்டிக் கொண்டு வாயைப் பொத்திக் கொண்டுவிட்டார். எந்தக் கண்டனத்தையும் தெரிவிக்கவில்லை. கல்விக் கொள்கையில் தனது பார்வையை கூர்மையாக செலுத்தி வருவதுதான் பெரியார் இயக்கத்தின் தனித் தன்மையாகும். ஆச்சாரியாரின் குலக் கல்வித் திட்டம் கொண்டு வரப்பட்ட காலத்திலிருந்தே – இது தொடருகிறது; பார்ப்பனரல்லாத தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்வி உரிமைக்கு எதிரான திட்டங்களோ, கொள்கைகளோ வந்தபோதெல்லாம் பெரியார் போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார். உடனடியாக இத் திட்டத்தை எதிர்த்து திரும்பப் பெறுவதற்கான போராட்டத்தை நடத்த வேண்டிய கடமையைச் செய்திருக்க வேண்டிய கி.வீரமணி, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட குழந்தைகளின் தலையில் சுமையை ஏற்றி, 5 ஆம் வகுப்பிலேயே ‘வடிகட்டி’ விடும் சமூகநீதியின் கழுத்தை நெறிக்கும் இந்தக் கொள்கையை எதிர்க்காமல் பெரியார் கொள்கைக்கு துரோகமிழைத்தார்.

“அம்மாவை ஆதரித்து அறிக்கை விடவில்லையே! அம்மா ஆட்சியின் ஒரு திட்டத்தை ஆதரிக்காமல் இருந்ததே மிகப் பெரும் வீரம் அல்லவா?” என்றுகூட – திராவிடர் கழக ‘எழுத்து வீரர்கள்’ வாதிட்டாலும் வியப்பதற்கு இல்லை. ஆனால், திட்டம் அறிவிக்கப்பட்ட போது எதிர்ப்பு தெரிவிக்காத கி.வீரமணி அனைத்து அரசியல் கட்சிகளின் எதிர்ப்பினால் ஆட்சி கைவிட்டபோது, அதற்குப் பிறகு அம்மாவைப் பாராட்டி அறிக்கை விட்டார். திட்டம் திரும்பப் பெற்றதால், பாராட்டு அறிக்கை வந்தது. திரும்பப் பெறாமலே போயிருந்தால் வீரமணியும் மவுனமாகவே பச்சைக்கொடி காட்டியிருப்பார். பிறகு ஆட்சி மாற்றம் ஏதேனும் நடந்தால், அப்போது வேண்டுமானால் கடுமையாக எதிர்த்திருப்பார்.

பெரியார் திராவிடர் கழகத்தைப் பார்த்து ‘திரிபுவாதிகள்’, ‘புரட்டர்கள்’, ‘திம்மன்கள்’ என்று பேனா பிடிக்கும் முன்பு தங்களது சொந்தக் கதைகளை இவர்கள் திரும்பிப் பார்க்க வேண்டாமா?

(புரட்டுகள் உடைப்பு தொடரும்)

### நீதிமன்ற வளாகத்தில் கோயில் கட்டுவதை எதிர்த்த

## பேராசிரியர் கல்யாணி மற்றும் தோழர்களுக்கு நீதிமன்றம் பாராட்டு

நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களே அரசு ஆணைக்கு எதிராக கோயில் கட்டுவதை எதிர்த்த பேராசிரியர் கல்யாணி மற்றும் தோழர்கள் மீது வழக்கறிஞர்கள் பொய்யாக கொலை முயற்சி வழக்குப் போட்டனர். வழக்கறிஞர்கள் வாதாடவும் தடை போட்டனர். மிரட்டல்களை தகர்த்து வழக்கில் நீதி வென்றுள்ளதோடு, மதச்சார்பின்மைக்கு குரல் கொடுத்த தோழர்களையும் நீதிமன்றம் பாராட்டியுள்ளது. செய்தி விவரம்:

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு 7.9.2000 அன்று இரவு திண்டிவனம் சார்பு நீதிமன்ற வளாகத்திலுள்ள அரச மரத்தடியில், அப்போது இருந்த சார்பு நீதிபதி ஜி.எஸ்.ஆறுமுகம் ஆலோசனைப்படி வழக்கறிஞர்கள் பிள்ளையார் சிலை நிறுவினர். அரசு அலுவலகங்களில் மத வழிபாட்டுச் சின்னங்களை நிறுவக் கூடாது என்றும், ஏற்கனவே உள்ளவற்றை காலப்போக்கில் அப்புறப்படுத்த வேண்டும் என்றும் அரசு ஆணை இருப்பதால் நீதிமன்றத்தில் பிள்ளையார் சிலை நிறுவக் கூடாது என அப்போது விழுப்புரம் மாவட்டத்திற்கு நிர்வாகப் பொறுப்பு வகித்த உயர்நீதிமன்ற நீதிபதி எம்.கற்பக விநாயகம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் திண்டிவனம் மத நல்லிணக்கக் குழு சார்பாக புகார் செய்யப்பட்டது. இது தொடர்பாக 13.9.2000 அன்று பேராசிரியர் கல்யாணி திண்டிவனம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இதற்கு எதிராக திண்டிவனம் வழக்கறிஞர் செந்தாமரைக் கண்ணனை கொலை செய்ய முயற்சி செய்ததாக வழக்கறிஞர்கள் சார்பாக ஒரு பொய்ப் புகாரைக் கொடுத்து, பேராசிரியர் கல்யாணி, க.மு.தாஸ் (திராவிடர் கழகம்), ஆசிரியர் கந்தசாமி (த.தே.பொ.க) ஆகியோர் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பிள்ளையார் சிலை வைப்பதற்கு காரணமாக இருந்த சார்பு நீதிபதி ஆறுமுகம் மீது தக்க நடவடிக்கை எடுக்கக் கோரியும், சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிடக் கோரியும் பிள்ளையார் சிலையை அகற்றக் கோரியும் 16.9.2000 அன்று பேராசிரியர் கல்யாணி சென்னை தலைமை நீதிபதிக்கு புகார் அனுப்பினார். திண்டிவனம் வழக்கறிஞர்கள் சாலை மறியல் செய்து, பொய் வழக்கின் கீழ் பேராசிரியர் கல்யாணியை கைது செய்ய வைத்தனர். மற்ற இருவர்கள் முன் ஜாமீன் பெற்றுக் கொண்டனர்.

இந்த கொலை முயற்சி வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, திண்டிவனம் விரைவு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக எந்த வழக்கறிஞரும் ஆஜராகக் கூடாது என்று திண்டிவனம் வழக்கறிஞர்கள் சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனாலும் துணிவுடன் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் டி.ஏ.எஸ். பாலன் மற்றும் வழக்கறிஞர் எஸ். கணபதி ஆகியோர் வழக்கறிஞர் சங்கத்திலிருந்து நீக்கப்பட்டனர். மேலும் ஆதரவாக இருந்த வழக்கறிஞர் விஜயராகவன் என்பவருக்கும் விளக்கம் கேட்டு நோட்டீஸ் கொடுத்தனர். இந்நிலையில் கொலை முயற்சி குற்றச்சாட்டுக்கான முகாந்திரம் ஏதும் வழக்கில் இல்லை என்று வழக்கிலிருந்து விடுவிக்கக் கோரி பேராசிரியர் கல்யாணி உள்ளிட்ட மூவர் சார்பிலும் வாதாடப்பட்டது. விரைவு நீதிமன்றம் இந்த மனுவை தள்ளுபடி செய்து விட்டது. தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. இம் மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.அசோக்குமார் 28.6.06 அன்று ஒரு உத்தரவு பிறப்பித்தார்.

தங்கள் மீது தொடரப்பட்ட பொய் வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நீதிபதி ஏற்கவில்லை. ஏற்கனவே வழக்கு விசாரணை தொடங்கி நடைபெற்றுவருவதால் ரத்து செய்ய இயலாது என்று கூறி விட்டார். ஆனாலும், வழக்கு விசாரணையை திண்டிவனம் விரைவு நீதிமன்றத்தில் விசாரித்தால், பாகுபாடற்ற விசாரணையாக இருக்காது என்று கூறி, சென்னையில் உள்ள அமர்வு நீதிமன்றத்துக்கு வழக்கை மாற்றி உத்தரவிட்டார். திண்டிவனம் வழக்கறிஞர்கள் இந்த வழக்கில் ஆஜராக மறுத்ததோடு, வாதாட வந்த வழக்கறிஞர்களையும், வழக்கறிஞர் சங்கத்திலிருந்து நீக்கியது. அப்படி நீக்கப்பட்ட தீர்மான நகலையும் தர மறுத்தது; ஆகியவற்றை நீதிபதி சுட்டிக்காட்டி, வழக்கை திண்டிவனத்திலிருந்து மாற்றினார்.

சென்னை அமர்வு நீதிமன்றத்தில் வழக்கை விசாரித்த ஏ.சம்பத், கொலை முயற்சி குற்றச்சாட்டுக்கு எந்த ஆதாரமும் இல்லை என்று 11.11.2008 அன்று தள்ளுபடி செய்ததோடு, கோயில் கட்டுவதை எதிர்த்த தோழர்களையும் பாராட்டி, கீழ்க்கண்டவாறு தீர்ப்பில் எழுதியுள்ளார்.

“நமது அரசியல் சட்டத்தின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ள அரசியல் சட்ட அடிப்படை கட்டமைப்புகளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவைகளை போற்றிப் பின்பற்றுகின்ற நாம், ஆசிரியர் பணி ஓய்வுக்கு பிற்பாடும், அரசு ஆணை அடிப்படையிலான மத நல்லிணக்கத்திற்கான சமூக பணியாற்றி வரும் ஆர்வலர்களை அங்கீகரித்து, அவர்களது சமூக மேம்பாடு மற்றும் சமய நல்லிணக்கத் திற்கான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதின் மூலம் எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டுதலாக அமையும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

இது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். ●

# மதவெறியே வி.பி.சிங் உயிரைப் பறித்தது!

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்தார். பா.ஜ.க. - சிவசேனா ஆட்சி வி.பி.சிங் போராட்டத்தை புறக்கணித்தது. வி.பி.சிங் உண்ணாவிரதமும் தொடர்ந்தது. வி.பி.சிங் உடல் நிலையும் பாதிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் 'இந்துத்துவா' சக்திகள் வி.பி.சிங் உண்ணா விரதத்தைக் கேலி செய்யும் நோக்கத் தோடு, அவரது போராட்ட இடத்துக்கு அருகே ஒரு பந்தலைப் போட்டுக் கொண்டு 'உண்ணும் விரதம்' என்று கூறி சாப்பிடும் போராட்டத்தை தொடங்கினர். இதற்கு அரசும் அனுமதித்தது. இந்த நிலையில் தான் வி.பி.சிங், 'இதற்கு என்னுடைய பதில் - இனி தண்ணீரும் நான் குடிக்கப் போவதில்லை' என்று அறிவித்து, தண்ணீரும் குடிக்காமல் உண்ணாவிரதத்தைத் தொடந்தார். தண்ணீர் குடிக்காமலே விபிசிங் உண்ணாவிரதம் தொடர்ந்தது. அவரது உடல் நிலை மிக மோசமாகி விட்டதாக மருத்துவர்கள் அறிக்கை தந்த நிலையிலும், பா.ஜ.க. ஆட்சி, வி.பி.சிங் அப்படியே மரணத்தை சந்திக்கட்டும் என்று முடிவு செய்து விட்டது.

அப்போதுதான் வி.பி.சிங்கின் நம்பிக்கைக்குரிய நண்பராக எப்போதும் அவருடன் இருக்கும் சுதர்சன் லோயல்கா என்பவர் பதைபதைத்து, மகாராஷ்டிரா அரசு - வி.பி. சிங்கை கைது செய்து, மருத்துவ மனையில் உடனே அனுமதிக்கா விட்டால், ஆட்சியின் மீது கொலை முயற்சி வழக்கு தொடருவேன் என்று அறிக்கை விடுத்தார். அதைக் கண்டு பயந்த நிலையில் தான், ஆட்சி யாளர்கள், வி.பி.சிங்கை கைது செய்தனர். அவரது சிறுநீரகம், அப்போதிருந்து செயலிழக்கத் தொடங்கியது தான். அவர் வாழ்நாள் முழுதும் சிறு நீரகத்துடன் போராட வேண்டியிருந்தது. மதவெறிக் குண்டுகள் காந்தி யார் மீது நேரடியாகவே பாய்ந்தது என்றால், அதே இந்துத்துவா மதவெறி வேறு வகையில் வி.பி.சிங், உயிரைப் பறித்தது.

அவர் வாழ்க்கை முழுதும் இலட்சிய உறுதி கொண்டவராகவே திகழ்ந்தார். பதவி அதிகாரங்களை கொள்கைக்காக உதறி எறிவதே அவரது வாழ்க்கையாக இருந்திருக்கிறது. பதவிக்காக - எல்லாவற்றையும் துறக்கக்கூடிய இன்றைய அரசியல் பொது வாழ்க்கையில் வி.பி.சிங் ஒரு மாறுபட்ட அதிசயமாகவே விளங்கினார். "அரசியலில் எல்லாம் கெட்டுவிட்டது; நேர்மையில்லை; லஞ்சம் தலைவிரித்தாடுகிறது; ஒழுக்கம் போய்விட்டது" என்றெல்லாம் கூக்குரல் போடும் பார்ப்பனர்களும், பார்ப்பன தலைவர்களும் இந்த நேர்மையான மனிதரை எப்போதாவது பாராட்டியிருக்கிறார்களா? இல்லை. இழிவு செய்தார்கள்; ஏளனம் செய்தார்கள்.

கல்லூரி பருவத்திலே அரசியல் ஈடுபாடு கொண்டவர் வி.பி.சிங். 1969 ஆம் ஆண்டு உ.பி.யில் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டது முதல் அவரது பொது வாழ்க்கை தொடங்குகிறது. 1971 இல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திரா காந்தி அமைச்சரவையில் வர்த்தகத் துறை துணை அமைச்சரானார். அப்போது அவருக்கு வயது 38. அவரது திறமை, நேர்மை, ஆழமான பார்வை, அவரது தனிப் பண்புகளை வெளிச்சப்படுத்தின. 1980 ஆம் ஆண்டில் 49 வயதில் - உ.பி. முதல்வராக தேர்வு செய்யப்பட்டார். உ.பி. மக்களை அச்சுறுத்தி வந்த சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளையர்களின் கொள்ளைகளை முடிவுக்குக் கொண்டு வருவதாக மக்களிடம் உறுதி தந்தார். பதவிக்கு வந்தவுடன் கொள்ளையர்களை சமாதான வழியில் சரணடையச் செய்யும் முயற்சிகளில் ஜெயப்பிரகாஷ் நாராயணன் மூலம் இறங்கினார். ஜெயப்பிரகாஷ் நாராயணன் வழியாக கொள்ளையர்கள் ஆயுதங்களைக் கீழே போட முன் வந்தனர். அவர்களுக்கு அரசு பொது மன்னிப்பு வழங்கியது. ஆனால் சரணடைய மறுத்த ஒரு பிரிவினர், முதல்வர் வி.பி.சிங்கை பழி வாங்கிட அவரது சொந்த சகோதரனையே படுகொலை செய்து, வி.பி.சிங் வீட்டின் முன் கொண்டு வந்து பிணமாக வீசிப் போட்டனர். மக்களிடம் தந்த உறுதி மொழியைத் தன்னால் காப்பாற்ற முடியவில்லை என்று கூறி, 1983 இல் முதல்வர் பதவியைத் தூக்கி எறிந்தார் வி.பி.சிங்.

1984 ஆம் ஆண்டு இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டார். இந்திராவின் மகன் ராஜீவ் காந்தி, அவரது மகன் என்ற ஒரே தகுதியில் அன்றைய குடியரசுத் தலைவர் ஜெயில்சிங் அவர்களால் பதவிப் பிரமாணம் செய்யப்பட்டு, பிரதமர் பதவி ஏற்றார். நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. 400-க்கும் மேற்பட்ட காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்வு பெற்றனர். காங்கிரஸ் சரித்திரத்திலேயே இவ்வளவு எண்ணிக்கையில் வெற்றிப் பெற்ற வரலாறு அப்போது தான். மிகப் பெரும்பான்மையோடு ராஜீவ் ஆட்சி அமைத்த போது, அவரது அமைச்சரவையிலே முதலில் தொழில் துறை அமைச்சர் வி.பி.சிங். பிறகு அவரது திறமையினால் நிதித்துறை அமைச்சராகிறார். நிதித் துறையை திறம்பட நிர்வகிக்க முயற்சிகளை மேற்கொண்டார். நிதிநிலை அறிக்கையில் வரி வருவாய்க்கான இலக்குகள் நிர்ணயிக்கப்படுவது வழக்கம். ஆனால், இலக்குகள் எப்போதும் எட்டப்படுவது இல்லை. வரி ஏய்ப்பு செய்யும் தொழில் நிறுவனங்களுக்கு அரசுகளே உடந்தையாக செயல்படும். ஆனால், வி.பி.சிங் நிர்ணயித்த இலக்கை எட்டிக் காட்டினார். பெரும் தொழில் நிறுவனங்களின் வரி ஏய்ப்புகளைத் தடுக்க அதிரடி நடவடிக்கைகளை எடுத்தார், வி.பி.சிங்கின் இந்த நடவடிக்கைகளுக்கு வருவாய்த் துறை செயலாளராக இருந்த நேர்மையான அதிகாரி பூரேலால் என்பவர் மிகவும் துணையாக நின்றார். அம்பானி - கிரிலோஸ்கர் போன்ற பெரும் தொழில்



நிறுவனங்களில் அதிரடி சோதனைகள் நடந்தன. பெரும் தொழிலதிபர்கள் வரி ஏய்ப்பு குற்றத்துக்காக கைது செயயப்பட்டு கைவிலங்கு போட்டபோது, தொழிலதிபர்கள் கலங்கிப் போனார்கள். பார்ப்பன தேசிய ஊடகங்கள், வி.பி.சிங் 'சோதனை ராஜ்யம்' (Raid Raj) நடத்துவதாக அலறின. பெரும் தொழில் நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய வரியை (Corporate Tax) முறையாக வசூலித்தாலே போதும் என்று கூறிய வி.பி.சிங், வருமான வரித்துறை என்ற துறையே தேவை இல்லை. அது நடுத்தர மக்களை வதைப்பதாகும் என்று கூறினார். இந்தத் துறையிலிருந்து பெறப்படும் வருவாய் - அந்தத் துறையின் நிர்வாகத்துக்கு மட்டுமே பயன்படுகிறது. எனவே அத்துறையை இழுத்து மூடிவிட்டு, அதன் ஊழியர் அதிகாரிகளை வேறு துறைக்கு மாற்றலாம் என்பதே வி.பி.சிங்கின் கருத்தாக இருந்தது. ஆனால், பணத் திமிலங்களை பகைத்துக் கொண்டு பதவியில் நீடிக்க முடியுமா? பெரும் தொழிலதிபர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, ராஜீவ்காந்தியுடன் பேரம் பேசி, வி.பி.சிங் துறையை மாற்றச் செய்து விட்டனர்.

அதன் பிறகு, பாதுகாப்புத் துறை அமைச்சரானார் வி.பி.சிங். அப்போதும் அவரது நேர்மையை முடக்கிட முடியவில்லை. இந்தியாவின் ராணுவ செலவுகளை தணிக்கை செய்வதற்கு அன்னிய நாட்டு நிறுவனமான 'ஃபேர்பாக்ஸ்' (Fairfax) என்ற நிறுவனத்தை பிரதமர் ராஜீவ் நியமித்தபோது, வி.பி.சிங் எதிர்த்தார். இந்தியாவின் ராணுவ ரகசியங்கள் - வெளிநாட்டு நிறுவனங்களின் தணிக்கைக்கு உட்படுத்துவது நாட்டின் பாதுகாப்புக்கு எதிரானது. நாட்டின் பாதுகாப்பை அடகு வைக்கக் கூடாது என்றார். அதைத் தொடர்ந்து போஃபோர்ஸ் நிறுவனத்திடமிருந்து முறைகேடாக தரமில்லாத பீரங்கி வாங்கிய பிரச்சினை எழுந்தது. போஃபோர்ஸ் நிறுவன பீரங்கியைவிட 'சோஃமா' பீரங்கி தரமானவை என்று பாதுகாப்புத் துறை முடிவு செய்ததற்கு மாறாக, சுவீடன் நாட்டில் பதிவு செய்யப்பட்ட போஃபோர்ஸ் நிறுவனத்திடமிருந்து பீரங்கி வாங்கும் முடிவை ராஜீவ் காந்தி எடுத்தார். இந்த முடிவுக்கு வருவதில் முக்கிய நபராக செயல்பட்டவர் இத்தாலியைச் சார்ந்த குத்ரோச்சி. ராணுவத்துக்கு ஆயுதங்கள் வாங்கும்போது, கமிஷன் பெறக் கூடாது. இடைத் தரகர்கள் தலையிடக் கூடாது என்பது அரசின் கொள்கை. இந்தக் கொள்கை காற்றில் பறக்க விடப்பட்டு இடைத்தரகர் மூலம் இந்த பீரங்கி வாங்குவதில் கமிஷன் பெறப்பட்டது. இடைத்தரகர்களாக செயல்பட்ட பெரும் தொழிலதிபர்களான இந்துஜா சகோதரர்கள் கமிஷன் பணத்தை சுவிட்சர்லாந்து நாட்டு வங்கியில் 3 பெயர்களில் போட்டனர். கமிஷனாகப் பெற்ற பணம் ரூ.64 கோடி (1990களில் இதன் மதிப்பு மிக அதிகம்). இதில் 40 கோடி ரூபாய் லோட்டஸ் என்ற பெயரில் போடப்பட்டது. ராஜீவ்காந்திக்குரியது தான் என்பது ஆவணங்களுடன் நிரூபணமானது. சுவீடன் நாட்டு பிரதமர் ஓலஃப் பாம் என்பவர் மிகவும் நேர்மையானவர். தமது நாட்டில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் முறைகேடாக நடத்திய பேரத்தை அவர் ஏற்க மறுத்தார். முறையான விசாரணைக்கு ஒத்துழைக்கத் தயார் என்று கூறிய அவர், அது தொடர்பான ஆவணங்களை வழங்கவும் முன் வந்தார். இந்த நிலையில் நடைப் பயிற்சி சென்று கொண்டிருந்த சுவீடன் பிரதமர், ஒரு நாள் விடியற் காலை சுட்டுக் கொல்லப்பட்டார். போபோர்ஸ் ஊழல் பற்றி விசாரித்த மத்திய புலனாய்வுத் துறை, குற்றவாளிகளைக் காப்பாற்ற முறைகேடாக முயற்சித்தது. சுவிடன் அரசு போபோர்ஸ் நிறுவனம் நடத்திய பேரங்கள் - விற்பனை தொடர்பான மூல ஆவணங்களை தருவதற்கு முன்வந்தபோது, நகல் பிரதியே போதும் என்று சி.பி.அய். கூறியது. காரணம், நகல் பிரதியை நீதிமன்றம் ஆவணமாக ஏற்காது. தப்பித்துக் கொள்ளலாம் என்பதால்தான். நாட்டையே உலுக்கி எடுத்த ஊழல் இது. இந்த ஊழல் பேரத்துக்கு பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த வி.பி.சிங், உடன்பட மறுத்தார். ராஜீவும், வி.பி.சிங்கும் சந்திக்காமலே இருந்தனர்.

1987 ஆம் ஆண்டு ஏப். 4 ஆம் தேதி ராஜீவ் - வி.பி.சிங்கை சந்தித்து, நமக்குள் இடைவெளி வந்துவிட்டது, இனி இணைந்து செயல்பட இயலாது என்று கூறியவுடன் வி.பி.சிங், அமைச்சர் பதவியை தூக்கி எறிந்தார். "நாட்டின் பாதுகாப்பையும், கவுரவத்தையும் ஒரு குடும்பம், தனது விருப்பத்துக்கேற்ப ஆட்டிப் படைப்பதை ஏற்க முடியாது" என பகிரங்கமாக குற்றம் சாட்டினார்.

காங்கிரசிலிருந்து வி.பி.சிங் நீக்கப்பட்டார். நாடாளுமன்ற பதவியிலிருந்தும் விலகிய வி.பி.சிங், தனது நியாயத்தை மக்கள் மன்றத்தில் கேட்கப் போகிறேன் என்ற ஒற்றை கோரிக்கையை முன் வைத்து, தனது அலகாபாத் தொகுதியில் மீண்டும் போட்டியிட்டார். காங்கிரஸ் கட்சி, முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் மகன் அனில் சாஸ்திரியை வேட்பாளராக நிறுத்தியது. தனக்காக சுவரொட்டிகூட அச்சடிக்காமல், தலையில், ஒரு கைக் குட்டையைக் கட்டிக் கொண்டு, மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து தொகுதி முழுதும் மக்களை சந்தித்துப் பேசினார். 1 லட்சத்து 25 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாகை சூடினார்.

போபோர்ஸ் பேரத்தில் எந்த ஊழலும் நடக்கவில்லை என்று முதலில் கூறிய ராஜீவ், பிறகு கமிஷன் வாங்கப்பட்டது உண்மைதான் என்றார். அதன் பிறகு, கமிஷன் வாங்கப்பட்டிருந்தாலும், வாங்கியது நான் அல்ல என்றார். விபிசிங் முன் வைத்த வாதங்களும், ஆவணங்களும் ராஜீவ் காந்திக்கு கடும் நெருக்கடிகளை உருவாக்கின.

தொடர்ந்து, 1988 இல் ஊழல் ஒழிப்பை முன் வைத்து 'சன்மோர்ச்சா' இயக்கத்தை வி.பி.சிங் தொடங்கினார்.

(தொடரும்)

# களப் பணியில் கழகத் தோழர்கள்

## அந்தியூர்

27.12.2008 அன்று மாலை 4 மணிக்கு ஈரோடு மாவட்டம், அந்தியூரில் கொட்டும் மழையில் ஈழத் தமிழர்களைக் காப்பாற்று - போர் நிறுத்தம் செய்! என முழங்கிக் கொண்டு ஈழத் தமிழர்களின் அவல நிலையை விளக்கும் வண்ணம்



காயக்கட்டு ஊர்வலம் - ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியை தமிழின உணர்வாளர் கூட்டமைப்பு என்ற பெயரில் அனைத்து தரப்பு மக்களையும் ஒன்றிணைத்து நடத்தப்பட்டது. தோழர்கள் பெருமாள், கோவிந்தராசு, கிருஷ்ணமூர்த்தி, தங்கதுரை, மாதேசு போன்றவர்கள் ஒருங்கிணைந்து தலைமையேற்று நடத்தினர். குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என 400க்கும் மேற்பட்டோர் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்வலம் அந்தியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு துவங்கி முக்கிய வீதிகள் வழியாகச் சென்று பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பெருமாள், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசிய பின்பு இறுதியாக பெரியார் திராவிடர் கழகத்தின் மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் கண்டன உரை நிகழ்த்தினார். செந்தில்குமார் எழுதிய ஈழத் தமிழர்களின் இன்னல் குறித்து கவிதை படிக்கப்பட்டது. மழை கடுமையாக பெய்த போதும் அதனை பொருட்படுத்தாமல் அனைவரும் நனைந்து கொண்டே ஊர்வலத்தில் சென்றனர். பார்ப்பவர்களிடையே மிகுந்த உணர்வைத் தூண்டியதுடன், நெகிழ்ச்சியாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்ச்சிக்கு காவல்துறை முதலில் அனுமதி மறுத்தது. பின்னர் சென்னை உயர்நீதி மன்றம் சென்று வழக்கறிஞர் செ. துரைசாமி, இளங்கோ ஆகியோரின் முயற்சியால் அனுமதி வாங்கி நடத்தப்பட்டது.

## குள்ளம்பாளையம்

25.11.2008 மாலை 6 மணிக்கு கோபி வட்டம், குள்ளம் பாளையத்திலுள்ள ‘செங்கோட்டையா நகரில்’ பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக தந்தை பெரியாரின் 130வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வழக்கறிஞர் ஆனந்தராசு தலைமை வகித்தார். நிவாசு முன்னிலை வகித்தார். முன்னதாக சமர்ப்பா குமரனின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன், மாவட்ட துணைத் தலைவர் கா.சு.வேலுச்சாமி உரையாற்றினர். இறுதியாக குடந்தை ‘சிற்பி இராசனின்’ ‘மந்திரமல்ல! தந்திரமே!’ நிகழ்ச்சி நடைபெற்றது. ஏராளமான மக்கள் திரண்டு நின்று நிகழ்ச்சியை வெகு ஆர்வத்துடன் கவனித்துக் கேட்டனர். சாமியார்களின் மோசடிகளை அம்பலப் படுத்தினார். செயலாளர் ஆனந்தராசு நன்றி கூறினார்.

## கொடிவேரி

ஈரோடு மாவட்டம், கோபிக்கு அருகிலுள்ள கொடிவேரி என்ற ஊரில் புதிய கிளை துவக்க விழா, கொடியேற்று விழா, பெயர் பலகை திறப்பு விழா 26.11.2008 புதன் கிழமை மாலை 6மணிக்கு துவங்கியது. முதலில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கொடிவேரியில் பெயர் பலகையை திறந்து வைத்தும், கழகக் கொடிக் கம்பத்தில் கொடியினை ஏற்றி வைத்தார். பின்னர் கொடிவேரி ஊருக்கு மத்தியில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் அந்தப் பகுதியின் கிளைத் தலைவர் கோவிந்தன் தலைமையில் நிகழ்ச்சி துவங்கியது.

பெரியார் பஞ்சாலை தொழிலாளர் கழகத்தின் செயலாளர் செயக்குமார், கழகப் பேச்சாளர் கா.சு.வேலுச்சாமி, இராம. இளங்கோவன் உரையைத் தொடர்ந்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ‘இந்து மதம் என்பது என்ன? ஏன் நாம் அதை எதிர்க் கிறோம்’ என விளக்கவுரை நிகழ்த்தினார்.

இறுதியாக குடந்தை சிற்பி ராசன், ‘மந்திரமல்ல தந்திரமே’ என்பதை விளக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளைச் செய்து காண்பி த்தார். அந்தப் பகுதியில் இதுவே முதல் நிகழ்வு.

இந்தப் பகுதி இந்து முன்னணியின் கோட்டை என்ற நிலையில் இருந்தது. அந்தப் பகுதியிலிருந்து இந்து முன்னணி தோழர்கள் 20 நபர்கள் தற்போது நமது இயக்கத்திற்கு வந்துள்ளனர். நமது தோழர்களின் அணுகுமுறையால் தொடர் பிரச்சாரத்தால் தற்போது 30 தோழர்களை கொண்டுள்ள பலம் வாய்ந்த கிளையாக கொடிவேரி கிளை அமைந்துள்ளது. இந்த நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக அமைவதற்கு பெரியார் பஞ்சாலை தொழிலாளர் கழகத் தோழர்கள் கடுமையாக உழைத்தனர்.

## தோப்பூர்

7.12.2008 ஞாயிற்றுக் கிழமை மாலை 7.30 மணியளவில் கழகத்தின் சார்பில் தந்தை பெரியாரின் 130 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பகுத்தறிவுப் பிரச்சார பொதுக் கூட்டம், கே.ஆர்.தோப்பூர் மூலக்கடை பகுதியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு இளம்பிள்ளை சவுந்திரராசன் தலைமையேற்க, கண்ணன் வரவேற்புரையாற்றினார். சிறப்புரையாற்றிய கோபி வேலுச்சாமி, தமிழரின் உரிமைக்கு, முன்னேற்றத்திற்கு பார்ப்பன இந்துத்துவா சக்திகள் எவ்வாறு தடைக்கல்லாய் இருக்கின்றன என்பது பற்றியும், ஈழப் பிரச்சினையில் தமிழக காங்கிரசு செய்யும் துரோகத்தையும், சமுதாயத்தில் மண்டிக் கிடக்கும் மூட பழக்கவழக்கங்களை விளக்கி சிறப்பான உரையாற்றினார். நிகழ்ச்சி இரவு 10 மணிக்கு நிறைவு பெற்றது.

## சீர்காழி

சீர்காழியில் ஈழத் தமிழர்களையும் தமிழக மீனவர்களையும் கொன்று குவிக்கும் இலங்கை அரசை கண்டித்து பேரணி ஆர்ப்பாட்டம்

15.11.2008 சனி மாலை 5 மணிக்கு சீர்காழி வட்டாட்சியர் அலு வலகம் எதிரில் ஈழத் தமிழர்களையும், தமிழக மீனவர்களையும் கொன்று குவிக்கும் சிங்கள இனவெறி அரசையும் அதற்கு துணை போகும் இந்திய அரசையும் கண்டித்து கண்டன பேரணி பெரியார் திராவிடர் கழகம் நகரத் தலைவர் ப.வ.பெரியார் செல்வம் தலைமையில் பேரணி புறப்பட்டது. பெரியார் தி.க. ஒருங்கிணைந்த பேரணியில், பா.ம.க. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, வி.வி.மு., மா.பெ.பொ. கட்சி, தமிழர் உரிமை இயக்கம், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் ஆகிய அமைப்புகள் கலந்து கொண்டனர்.

500-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட பேரணியில் விழுப்புர மாவட்ட செயலாளர் நடராசன், அமைப்பாளர் அய்யனார், நாகை மாவட்ட செயலாளர் தெ.மகேசு, மாவட்ட அமைப்பாளர் ந.இளையராசா, சீர்காழி, கொள்ளிடம், வைத்தீஸ்வரன் கோயில், மயிலாடுதுறை நகர ஒன்றிய பொறுப்பாளர்களும், தோழர்களும் பெரும் அளவில் கலந்து கொண்டனர். பேரணியில் ஈழத் தமிழர்களின் கொடுமைகளை விளக்க கூடிய வகையில் காயகட்டுகளுடன் வந்தார்கள். ஈழத் தமிழர்களின் உரிமைக்காக சீர்காழி பெரியார் தி.க. ஓய்வு இல்லா பணியை அனைத்துக் கட்சி மற்றும் பொது மக்கள் பாராட்டி வருகிறார்கள். இறுதியாக சீர்காழி ஒன்றிய துணை செயலாளர் இரா.மே.ராமமூர்த்தி நன்றியுரையாற்றினார்.

### கொட்டும் மழையிலும் மறியல்

25.11.2008 செவ்வாய் 12.30 மணியளவில் சீர்காழியில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் பெரியார் திராவிடர் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போர் நிறுத்தம் செய்ய இந்தி யஅரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கோரி, சீர்காழி தலைமை அஞ்சல் அலுவலகம் முன் மறியல் போராட்டம் நடந்தது. இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் இரா.பரசுராமன் முன்னிலையில் நடந்த போராட்டத்தில் இந்திய அரசைக் கண்டித்தும், இனப் படுகொலை செய்யும் சிங்கள பயங்கர வாத அரசைக் கண்டித்தும் கண்டன முழக்கம் எழுப்பப்பட்டது.

கழகத்தின் சார்பில் சீர்காழி ஒன்றிய தலைவர் பொன். தேவேந்திரன், துணை செயலாளர் இரா.மே.ராமமூர்த்தி, கொள்ளிட ஒன்றிய செயலாளர் பா.பாக்கியராசு, நகர தலைவர் பெரியார் செல்வம், சீர்காழி கழகத் தோழர்கள் அருண், ரகுநாத், கௌசு, இன்பசேகரன், சிலம்பு, சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர். 39 தோழர்கள் கைது செய்யப்பட்டு மாலை விடுதலை செய்யப்பட்டனர். ●

## ஆனூரார் தலைமையில் அம்பேத்கர் சிலைக்கு கழகத்தினர் மாலை

6.12.2008 அன்று காலை 9 மணி யளவில் சென்னை பெரியமேட் டிலும், 9.30 மணிக்கு சேத்துப்பட்டு அம்பேத்கர் திடலிலுள்ள அம்பேத்கர் சிலைக்கும் மாலை அணிவித்து, பின்னர் ஆயிரம் விளக்கு ஆல் தோட்டம் பகுதியி லும், இராயப்பேட்டை பெரியார் சிலை அருகிலுள்ள பத்ரி நாராயணன் நினைவு படிப்பகத்தில் அம்பேத்கர் படங்களுக்கும் கழகத் துணைத் தலைவர் ஆனூர் செக தீசன் தலைமையில் வழக்கறிஞர் சு.குமாரதேவன், எ.கேசவன், அன்பு தனசேகர், தபசி. குமரன், இரா. உமாபதி, ச. குமரன் மற்றும் கழகத் தோழர்கள் மாலை அணிவித்தனர்.

## பெரம்பூர் கந்தன் இல்லத்தின் சாதி மறுப்பு மணவிழா

தி.மு.க. தலைமைக் கழக கலைஞர் பகுத்தறிவுப் பாசறை அமைப்பாளர் பெரம்பூர் கந்தன் - இராதா ஆகியோர் மகன், க.தமிழ்ச் செல்வன், பி.ஈ., காஞ்சிபுரம் வே. தென்னரசு-து.சகுந்தலா ஆகி யோரின் மகள் தெ.யுவராணி, எம்.எஸ்சி. ஆகியோர் திருமணம் 21.12.2008 ஞாயிறு மாலை 4.30 மணியளவில் சென்னை செங் குன்றம் சாலையிலுள்ள சாந்தி மகாலில் பேராசிரியர் அன்பழகன் தலைமையில் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு முன்னிலையில் நிகழு கிறது. அமைச்சர் பரிதி இளம் வழுதி வரவேற்புரையாற்றுகிறார்.

மார்கழி மாதத்தில் ஞாயிற்றுக் கிழமை இராகு காலத்தில் சாதி மறுப்பு, தாலி மறுப்புடன் திரு மணம் நிகழுவது குறிப்பிடத்தக்க தாகும்.

## நாத்திகக் கவிஞர் சீராமுலு முடிவெய்தினார்

நாத்திக கவிஞர் தஞ்சை கோ. சீராமுலு 17.11.2008 அன்று சென்னையில் தம் 84 ஆம் வயதில் முடிவெய்தினார். பெரியாரின் கொள்கைகளை தம் கவிதையால் வடித்தவர். அன்னாருக்கு கழகத் துணைத் தலைவர் ஆனூர் கோ. செகதீசன், வழக்கறிஞர் சு.குமார தேவன், தபசி குமரன், கரு. அண்ணாமலை, இரா.உமாபதி, மா. வேழவேந்தன், ரியாஸ் மற்றும் தோழர்கள் கழகத்தின் சார்பில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

பெரியார் திராவிடர் கழகத் தோடு தன்னை இணைத்துக் கொண்டு செயல்பட்ட அவர், சென்னையில் நடந்த இணைப்பு விழாவில் மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினரோடு இணைந்து இளைஞரைப் போல் உற்சாகமாக பாடல்களைப் பாடியவர் ஆவார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 18th December 2008

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.